
# வளம் மிகு

# வியாபாரிமூலை



கிருஸ்ணபிள்ளை சிவநேசன்

# வளம் மிகு வியாபாரிமூலை

## (ஊர் பற்றிய நினைவுகள்)

கிருஷ்ணபிள்ளை சிவநேசன்

சுதர்சன் வெளியீடு
வியாபாரிமூலை
பருத்தித்துறை.

நூல் : வளம்மிகு வியாபாரி மூலை
(ஊர் பற்றிய நினைவுகள்)

ஆசிரியர் : கிருஷ்ணபிள்ளை சிவநேசன்
வியாபாரிமூலை, பருத்தித்துறை

பதிப்பு : 2017


வெளியீடு : சுதர்சன் வெளியீடு

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : S.P.M பிறின்ரேர்ஸ்,
வி.எம்.றோட், பருத்தித்துறை
தொ.பே : 0774966997

விலை : 300/=


ஓம் ஸ்ரீ சாயிராம்




மனிதன் வசிக்கும் உலகமோ பாரியது. அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஆயுட்காலமோ குறுகியது. காலம் என்பது முன்னும் பின்னும் மிக நீண்டதாகும். ஊர் உலக நலன்களிற்காக மனிதன் இங்கு அவனுக்கு நியமிக்கப்பட்டுள்ள இடத்திலும் காலத்திலும் மிகவும் விரைவாக பணி செய்ய வேண்டியுள்ளது. மனிதனை எதிர்நோக்கியுள்ள பணி கடினமாக இருக்கலாம். ஆனால் பணி செய்வதன் மூலம் பாராட்டையும் நிறைவையும் அவன் பெறுகின்றான்.

-பகவான் பாபா-

# அணிந்துரை



நான் மருத்துவனாக பணியாற்ற ஆரம்பித்த காலங்களில் அலெக்ஸ் ஹெய்லி எழுதிய ஷரூட்ஸ் என்ற நாவலைப் படித்து ஆச்சரியத்தில் மூழ்கியிருக்கிறேன். 18ம் நூற்றாண்டில் ஆப்பிரிக்காவில் அடிமையாகப் பிடிக்கப்பட்ட ஒருவன் அமெரிக்காவிற்கு கொண்டு செல்லப்பட்டதையும் அவனதும் அவனது பரம்பரையினரதும் வாழ்வைப் படம் பிடித்த ஒரு அற்புத நாவல் அது. அவன் தனது வேர்களைத் தேடி அலைந்தான். அவனது கதையானது ஒவ்வொருவரும் தனது வேர்களைத் தேட வேண்டும்.தானும் தனது மூதாதையும் கடந்து வந்த பாதையை அறிந்திருக்க வேண்டும் என்ற உணர்வை என்னில் ஆழ விதைத்தது.

அறிவதுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது அதை ஆவணமாக உருவாக்கி எதிர் வரும் பரம்பரையினருக்கும் கடத்த வேண்டும் என்பதை எனக்கு உணர்த்தியதுடன் செயலுருவில் தந்தும் விட்டார் நண்பர் கிருஸ்ணபிள்ளை சிவநேசன். வளம் மிகு வியாபாரிமூலை என்ற இந்த நூல் அதற்கு ஒரு சான்று.

நாம் திடீரென ஆகாயத்தில் இருந்து குதித்த பிறவிகள் அல்ல. ஒவ்வொருவரும்

தனித்தனி பரம்பரையின் வாரிசுகள். ஒவ்வொரு குறிச்சியைச் சார்ந்தவர்கள் ஒவ்வொரு ஊரை, பிரதேசத்தை, இனத்தை சார்ந்தவர்கள். இவை எல்லாம் ஒன்றிணைந்து எம்மை உருவாக்கி பதப்படுத்தி வளர்த்து வளம் சேர்த்து இன்றைய நிலையில் வைத்திருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அதே நேரம் நாம் சிறுவயதில் பார்த்து உணர்ந்த அனுபவித்த பலவற்றை இன்றைய சந்ததிகள் கனவிலும் கண்டிருக்க மாட்டார்கள். நாம் அன்று பார்த்த பலவும் கூட இன்று எமது நினைவறைகளில் கூட அரிப்புக்கு ஆழாகி மறைந்தும் கொண்டும் இருக்கின்றன. உதாரணத்திற்கு நான் சிறுவனாக இருக்கும் காலத்தில் வித்தியாலய வீதியில் பெண்கள் பாடசாலைக்கு செல்லும் சந்திக்கு எதிர்ப்புறமாக ஒரு கட்டடிடம் சிதிலமடைந்த நிலையில் இருந்தது. அது என்ன கட்டிடம் என்பது எனக்கு தெரிந்திருக்கவில்லை. அதை அறிய வேண்டும் என்ற ஆவலும் எனக்கு இருந்திருக்கவில்லை.

இன்று கிருஸ்ணபிள்ளை சிவநேசன் அவர்கள் எழுதிய வளம் மிகு வியாபாரிமூலை என்ற நூலின் எழுத்துப் பிரதியைப் படித்த போது அது ஒரு மடம் என்பதும் அது கந்தசஸ்டி மடம் என அறியப்பட்டதாகவும் அறிந்து கொண்டேன். விரதகாரர் அங்கே தங்கியிருந்து விரதம் காத்தனர் என்றும் அங்கு கந்தசஸ்டி மற்றும் புராணப் படிப்புகள் நடை பெற்றதையும் அறிந்து ஆச்சரியம் அடைந்ததுடன் எனது அறியாமையை நானே உணர்ந்து நாணமுற்றேன். இதைப் போலவே எட்டு மடங்கள் எமது ஊரில் இருந்திருக்கின்றன என்ற தகவலையும் இந்த நூலில் இருந்து அறிய முடிந்தது. இவ்வாறு பல மடங்களை உருவாக்கியிருந்தமை எமது முன்னோரது பொது நல நோக்கிற்கு அடையாளமாக அமைகிறது. வழிப்போகர்களும் வயோதிபர்களும் வலது குறைந்தவர்களும் காலறி தங்கியிருந்து உணவருந்திச் செல்ல அவை உதவியிருக்கின்றன.

மிகுந்த தேடலுடனும் அர்ப்பணிப்புடனும் தகவல்களை தேடி எடுத்து எமது ஊரின் அண்மைக் கால வரலாற்றை ஆவணப்படுத்தும்

சிவநேசன் மாஸ்டரின் பணி பாராட்டிக்கு உரியது. ஊர் உருவாக்கம், ஆவணங்கள், மடங்கள், நிறுவனங்கள், பெரியார்கள், சில நினைவுகள் ஆகிய தலைப்புகளின் கீழ் எமது ஊர் பற்றிய பல தகவல்களை ஆவணப்படுத்தியுள்ளார்..

வியாபாரிமூலை என்றால் வியாபாரிகள் நிறைந்த ஊர் என்ற கருத்துண்டு. அதில் உண்மையும் இல்லாமல் இல்லை. இலங்கைத் தேசம் முழுவதும் எம்மவர்கள் கடை பரப்பிய காலம் ஒன்று இருந்திருக்கிறது.

அதே நேரம் எம்மவர்கள் கல்வியிலும் சோடை போனவர்கள் அல்ல. எம் ஊரவர்களின் தொழில் சார் பட்டியல் ஒன்றை நூலாசிரியர் தொகுத்து தந்திருக்கிறார். பொறியலாளர்கள் கணக்காளர்கள் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் வழக்கறிஞர்கள் மருத்துவர்கள் தாதியர்கள் எனப் பெரியபட்டியல் தந்திருக்கிறார். இந்தச் சின்னஞ் சிறிய ஊரில் இருந்து குறைந்தது 65 மருத்துவர்கள் உருவாகியிருக்கிறார்கள் என்ற தகவல் ஆச்சரியத்தையும் அதே சமயம் மகிழ்ச்சியையும் தந்தது.



சிவராமன் கிருஷ்ணபிள்ளை

இந்த நூலானது எமது ஊர் பற்றி சிவநேசன் மாஸ்டர் எழுதிய முதல் நூல் அல்ல. ஏற்கனவே ஊரின் பிரதான ஆலயங்களான பிள்ளையார் கோவில் மற்றும் வீரபத்திர கோயில் பற்றி கற்பூர விநாயகர் ஆதிசிவ வீரபத்திர காளி ஆகிய இரு நூல்களை வெளியிட்டுள்ளார். சாயியுடன் இனிய காலம் என்ற நூல் எமது ஊரில் சத்தியசாயி வழிபாடு ஆரம்பித்தது முதல் சாத்தியசாயி பகவானுக்கு வழிபாட்டு நிலையம் அமைத்தது பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும்விரிவாக

பேசுகிறது. இவரின் இந்த அரும் பணிக்காக நான் உட்பட எமது ஊரின் அனைத்து மக்களும் சிவநேசன் மாஸ்டருக்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

சிவநேசன் மாஸ்டர் ஒரு சிறந்த கல்விப் பாரம்பரியத்தில் வந்தவர். அவரது தந்தையாரான பண்டிதர் பொன்.கிருஸ்ணபிள்ளை கற்கண்டுப் பண்டிதர் எனப் பாராட்டுப் பெற்றவர். தமிழ் இலக்கியப் புலமையும் பேச்சாற்றலும் நிரம்பப் பெற்றவர். எமது ஊருக்கு பெருமை சேர்த்தவர் அவர். மாஸ்டரின் அண்ணனான சிவராமன் ஒரு கவிஞர். இணையத்தில் அதிகம் எழுதுபவர். பரிசுகள் பல பெற்றவர். அத்தகையவர் இவ்வாறான தமிழ் தொண்டு ஆற்றுவதில் வியப்பில்லை. இவரது எழுத்து மற்றும் ஆவணப்படுத்தும் முயற்சிகள் அவரது பாரம்பரியத்தில் ஒரு புதிய மைல்கல்லாக அமைகிறது.

எமது வாழ்வின் தடங்களைத் தேடும் முயற்சியில் அமரர்.நா.சொக்கநாதபிள்ளை ஈடுபட்டிருந்ததை நான் அறிவேன். அதே போல அண்மைக் காலத்தில் அமரர் மு.காசிவிஸ்வநதார் அவர்களும் ஈடுபட்டிருந்தார்.

இப்பொழுது நண்பர் கிருஸ்ணபிள்ளை சிவநேசன் தனது தேடல்களைத் தொகுத்து நூலாக வெளியிடுவது அமர்களான அவர்களுக்கும் மனத் திருப்தியையும் மகிழ்ச்சியையும் தந்திருக்கும் என நம்பலாம்.

அவரின் தேடலும் ஆவணமாக்கும் முயற்சிகளும் மேலும் விரிவடைய எம் ஊரவரினதும் எனதும் மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**எம்.கே.முருகானந்தன்**

தனியார் வைத்தியசாலை
பருத்தித்துறை.

# என்னுரை



யாழ் குடாநாட்டின் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவில் அமைந்த வளம்மிகு வியாபாரி மூலையின் சிறப்பிற்காக உழைத்தோரை நாம் நினைக்கவும் பாராட் டவும் கடமைப்பட்டவராவோம். அடையாளங் -கள் தொலைந்து போகும் சம்பவங்களை பார்க்கின்றோம். வரலாறுகள் வசதிக்கேற்ப மாற்றப்பட்டு விடுகின்றன. தனித்துவங்கள் பாரம்பரியங்கள் தெரியாதே போய்விடலாம். எமது ஊரின் பெருமை எம்மவர்க்கே அறியாத ஒன்றாகிவிடும். அடையாளங்களை பேண வேண்டும். எதிர்கால சந்ததிக்கு வழங்கப்பட வேண்டும். முன்னோர் உழைப்பு மதித்து கௌரவிக்கப்பட வேண்டும் எனும் எனது எண்ணத்தின் வெளிப்பாடே இந்த நூல் உருவாக்கத்தின் நோக்கமாகும்.

பத்திரிகைகளுடனும் தொலைக்காட்சி-களோடும் பொழுதை போக்கும் நாம் யார் யாரையோ பற்றி எல்லாம் நிறையவே தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் நம்முடைய உறவுகளையும் ஊரையும் பற்றித் தெரிந்து கொள்வதில்லை. பிறர் கூறும் போதும் அப்படியா என்பதோடு நின்று விடுகின்றோம். நாம் தேட முற்படும் போது காலம் கடந்திருக்கும். சரியான தகவல் பெற முடியாது போய் விடுகின்றது. ஆதலால் தேடலும் பதிவும் அவசியமாகின்றது. அரசியலிலும் முன்னோர் செய்த தவறுகளை சுட்டி பேசுகின்றோம்.

தவறுகளை திருத்த முடியாது தடுமாறுகின்றோம். மகாகவி பாரதியார் கூறுவது போல் "பழமை பழமையென்று பாவனை பேசலன்றி, பழமை இருந்த நிலை அறியாதிருக்கலாமோ?..." பல நாள் சண்டையிலும் சில நாள் போலிச்சமாதானத்திலுமாக வாழும் நாம், யாதும் ஊரே யாவரும் கேளீர் என வாழ்ந்த முன்னைய காலத்தை புரிந்து கொள்ள முடிகின்றதா?

ஆதலால் சாதனை படைத்த எம் முன்னோரை நினைந்து மகிழ்வோம். நான் பலருடன் கலந்து பேசி நீண்டகாலமாக சேகரித்த விடயங்களையே இங்கு தருகின்றேன். எல்லாம் எமக்கு தெரிந்தது தான் என சிலர் என் எழுத்தை விமர்சிக்கவும் கூடும். சில விடயங்கள் சேர்க்கப்படவில்லையே என சிலர் கோபப்படவும் கூடும் தயவுடன் உங்கட்கு தெரிந்ததை வெளிப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்திற்கு உதவ முடியும். விரைவிலேயே திருத்திய 2ம் பதிப்பை வெளியிடுவதன் மூலம் உங்கள் அபிலாசைகளையும் வெளிப்படுத்த முடியும். வியாபாரி மூலைக்கான நிலப்பரப்பு எது என்பது ஓர் வினாவாகவே உள்ளது. ஒருகாலத்தில் சுப்பர் மடம் மயானத்திற்கு அப்பால் இருந்து ஆனைக் குட்டி மடம் வரையிலும் வெள்ளைப்புற்றடி வரையிலும் ஆக இருந்த உரிமைகள் கைமாறுகின்றன. கிராம அலுவலர் பிரிவும் காலத்திற்கு காலம் மாற்றத்திற்குள்ளாகின்றது. மறுபுறம் ஆறு கண்டங்களுக்கும் உறவுகள் விசாலிக்கின்றது. வியாபாரிமூலை என உறவு முறை களையே நான் இங்கு கருத்தில் கொள்ள விரும்புகின்றேன்.

இந்நூலாக்கத்திற்கு தமக்குத் தெரிந்த தகவல்களை தந்துதவிய அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

முன்னுரை தந்துதவும் வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தனுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். அச்சக வேலைகளை செய்து தரும் **S.P.M** பிறிண்டேர்ஸ் நிறுவனத்தின ருக்கும் எனது நன்றிகள்.

வியாபாரிமூலை
01.10.2017

**பொ.கி.சிவநேசன்**

# பொருளடக்கம்

பக்கம்

**சமர்ப்பணம்** i
**அணிந்துரை** ii
**என்னுரை** vi
**பொருளடக்கம்** viii

ஊர் உருவாக்கம் 1
ஊரவர் 3
வம்சாவளி 5
ஊர் நினைவுகள் 6
வர்த்தகப் பெருமை 8
வளம் பெருக்கிய வர்த்தகர்கள் 11

**ஆலயங்கள்**

கற்பூர விநாயகர் ஆலயம் 13
வீரபத்திரர் ஆலயம் 15
நாச்சிமார் ஆலயம் 17
ஒதியடி ஞான வைரவர் ஆலயம் 19
தோப்புமணல் ஞானவைரவர் ஆலயம் 21
தெணி அம்பன் ஆலயம் 22
ஆத்தியடி விநாயகர் ஆலயம் 24
முடிக்கொற்றாவத்தைப் பிள்ளையார் ஆலயம் 25
சற்கோட்டை முனியப்பர் 28
சற்கோட்டை சித்தி விநாயகர் 29
அண்ணமார் கோயில் 31
பழவத்தை காளி அம்பாள் ஆலயம் 32
ஸ்ரீ சத்யசாயி நிலையம் 34

**மடங்கள்** 36

ஸ்ரீ ஆறுமுக விலாசம் 37
ஆனைக்குட்டி மடம் 38
கேணியடி மடம் 38
அருள் மடாலயம் 39
கந்தசஷ்டி மடம் 40

தீர்த்த மடம் 40
தருமமடம் 41
வீரபத்திரர் ஆலய மடம் 41

## நிறுவனங்கள்

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை 42
முன்பள்ளி 46
தனியார் பள்ளி 47
சிவஞானப் பிரகாசசபை 49
கலைமணி சனசமூக நிலையம் 51
மாதர்சங்கம் 57
கமக்காரர் அமைப்பு 58
விநாயகர் தரும நிதியம் 60
விளையாட்டுக் கழகம் 61
வியாபாரிமூலை கிராம அபிவிருத்திச் சங்கம் 62
இலங்கை மெய்கண்டார் ஆதீனம் 63
ஆரம்ப சுகாதார நிலையம் 64

## பெரியார்கள்

மகாகவி பாரதியின் ஞானகுரு 65
செந்தமிழ்மணி பண்டிதர் பொ.கிருஷ்ணபிள்ளை 70
வைத்தியர் தி.வரதகணபதிப்பிள்ளை 73
தேசிகர் ஐயா 74
யாழ்ப்பாணன் திரு.வே.சிவக்கொழுந்து 75
வே.தா.சி.சிவகுருநாதன் 78
மனேச்சர் ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை 81
ஸ்ரீமத் வே.சிதம்பரப்பிள்ளை 83
வை.கா.சிவப்பிரகாசம் 85
வ.கார்த்திகேசபிள்ளை, வ.துரைசாமிப்பிள்ளை 86
சி.நா.சொக்கநாதபிள்ளை 87
கல்வியியலாளர்கள் 88
ஒரு தருமசாதனம் 103
ஊர்க்குருவி 105
ஊரும் காணியும் 112
ஊரும் பேரும் 113
எம்மில் சிலர் 115

# ஊர் உருவாக்கம்


கிராம உருவாக்கம் என்பது சமூக உருவாக்கத்தின் ஓர் கூறேயாகும். சமூக உருவாக்கத்திற்கு கிராமங்களின் பண்பாட்டு ஒருங்கிணைவும் பொருளாதார தேடல் நிலையுமே காரணமாக அமைகின்றது. வியாபாரிமூலை பொருளாதார தேடலிற்கு தனக்கென ஒரு தளத்தை கொண்டிருந்தமையால் அதன் கடந்தகாலம் வளம்மிக்கதாக அமைந்திருந்ததை காண்கின்றோம்.

உறவு ரீதியான கூட்டுக் குடும்பத் தொடர்பும் நம்பிக்கையும் அனுபவத்தர்களின் மேலான்மையும் ஊரவரின் பொருளாதார தேடலிற்கு பெரிதும் உதவியுள்ளதை ஆழமாக நோக்கும் போது அறிய முடிகின்றது. உறவுத் தொடர்புகள் குறையும் போது நம்பிக்கையீனமும், தொழிற்துறை பாதிக்கப்படுவதையும் காண்கின்றோம்.

வியாபாரிமூலையின் வீடுகளைப் பற்றி பலரும் விமர்சனம் செய்யக் கேட்டிருக்கின்றோம். வியாபாரிமூலையார் வேலிக்கை வேலி அடைப்பார்கள் எனும் கூற்றின் பொருள் எத்தனை பேரிற்கு இன்று தெரியுமோ தெரியாது. பெண்களே பெரும்பாலும் வீட்டில் இருந்ததால் பாதுகாப்புக் காரணங்களால் கிணற்றடியை சுற்றி ஒரு வேலி. கொல்லைப் புறத்தை சுற்றி ஒரு வேலி.... இப்படி. வீடுகள் பெரும்பாலும் நாற்சார் வீடுகள். இப்போதும் அதன் எச்சசொச்சம் இரண்டொன்று உண்டு. கூட்டுக் குடும்பத்திற்கும், பாதுகாப்பிற்கும் இது ஏற்றதாக இருந்தது. சிறு வயதில் தீவட்டி கொள்ளைக்காரரை பற்றி கேட்டிருக்கின்றோம். கள்வர் மெதுவாக மண் சுவர்களை கன்னகோலால் உடைத்து ஒரு பானையை உள்ளே விட்டு பார்ப்பார்களாம் பானைக்கும் அடி விழுந்தால்....

வேலிக்கலாச்சாரம் மறைந்த போது மற்றோர் விமர்சனம் வியாபாரிமூலை வீடுகள் சுண்ணக்கற்கள் வைத்துக் கட்டிய அகன்ற உயர்ந்த சுவர்கள் கொண்டவையாகும். சுவர் இரண்டு முழு அகலம் இருக்கும் கால்வாசி பனை உயரம் கோட்டையே தான். யாரும் எட்டி கிட்டி பார்க்கேலாது. கதவுகளோ புகையிலை சிப்பம் கொண்டு போக கூடியதான உயர்ந்த தலைவாசலுடன் காட்சி தரும்.

வியாபாரிமூலையில் எல்லாம் பெரிய கல்வீடுகள் என பாராட்டப்பட்டது. பெரிய வீடுகள் நாற்சார் வீடுகள் சுண்ணாம்புக்கட்டு வீடுகள் எல்லாம் மறைந்து ஊர் நவீனமயமாகிக் கொண்டிருப்பதையும் இன்று காண்கின்றோம்.



**********

# ஊரவர்

வியாபாரிமூலை தன் கடந்த காலத்திற்குரிய பண்பாட்டை இற்றை வரை பேணிக்காத்து வந்துள்ளது எனலாம். பண்பாடு என்பதே பண்பட்ட நிலையேயாகும். எம்முன்னவர் பண்பாடு மிக்கவர்கள் என பிறர் கூற கேட்கும் போது நாம் பெருமை கொள்கின்றோம். மற்றவர் இயல்புகளை மதித்தும் தன் இயல்புகளை நன்நெறியில் செலுத்தி ஒழுகுபவர் பண்பாட்டாளர் ஆவர்.

நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்
எல்லோரும் உவப்பது, அன்றியும்
நல்லாற்றும் படுஉம் நெறியுமாரதுவே (புறநானூறு)

நல்லது செய்யாவிடினும் தீவினையைச் செய்யாதீர் அதனையும் எல்லோரும் புகழ்வர் என்பதை புரிந்து வாழ்ந்தனர்.

எம்மூரவர் பற்றி பிறர் கூறும் விமர்சனச் சாரமும் இதுதான். எப்போதும் பிரச்சினையை விரும்பாது பிரச்சினைகட்கு போகாது வாழ்பவர்கள் எம்மவர். பொருளை விலையாக கொடுத்து இலாபத்தை ஈட்டியபோதும் அதில் ஓர் பகுதியை தர்மமாக செலவிடும் பண்பை பேணியவர்கள் என்பதை அவர்கள் செய்த அறப்பணிகளே காட்டும்.


10, 12 வயதில் ஊர் விட்டு வணிகத்திற்காக சென்ற போதும் வணிகத்தோடு கல்வியையும் தாமே தேடிக் கற்றோராக எம்மவர் விளங்கினர். மும்மொழி ஆற்றலோடு கணித, சித்தாந்த, சாத்திர அறிவையும் இவர்கள் பெற்றேயிருந்தனர். கடலருகே வாழ்ந்த போதும்

சைவ உணவே உண்டு. சைவாசாரசீலர்களாக வாழ்ந்த எம்மவர் விருந்தினர்களை ஏற்று உபசரிப்பதற்காக அதிகளவான மடங்களை இச்சிறு ஊரில் அமைத்திருந்ததை நாம் நோக்கலாம். மகளிரும் "விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்" (தொல்காப்பியம்) எனும் வழியில் வாழ்ந்ததை நாம் நோக்கலாம். ஊரவர் என்று கூறிவிட்டு ஊர் மக்கட் தொகை பற்றி கூறாது விடவும் முடியாது.

வியாபாரிமூலை கிராம அலுவலர் பிரிவில் ஆண்கள் 639ம் பெண்கள் 723ஆக 1362பேர் 463 குடும்பங்களை சேர்ந்தோராக உள்ளபோதிலும் இதில் பழவத்தை முகாம் தெணி அம்மன் பகுதிகளை நீக்கி ஊரவர் எனும் உறவுகளின் அடிப்படையில் 2016ம் ஆண்டு வாக்காளர் பட்டியலின்படி ஆண்கள் 185 பெண்கள் 201 குடும்பங்கள் 145 ஆகவும் வீடுகள் 150 வரையிலுமாக தற்போது உள்ளது. (18வயதிற்கு மேற்பட்டோர்) 18 வயதிற்குபட்டோரையும் சேர்க்க 530பேர் வரை இங்கே வசிப்போராக உள்ளது.

வியாபாரிமூலை கிராம அலுவலர் பிரிவு படத்தில் வியாபாரி மூலையுடன் பழவத்தை தெணிஅம்மன் கோயிலடியும் இணைந்துள்ளது.

யுத்தகாலம் இடப்பெயர்வு, வெளிநாடு செல்லல் என்பவை ஊரவர் தொகையை கிராம அலுவலர் எல்லையுள் குறைத்துள்ளதை காண்கின்றோம். வேறு ஊர்களின் வேறு நாடுகளில் வாழும் எம் உறவுகளை இணைத்து ஓர் பட்டியல் தயாரித்தல் நன்று.




# வம்சாவளி

வியாபாரிமூலை மக்களில் பெரும்பாலானோர் ஒருவர்க்கொருவர் சொந்தம் எனலாம். தற்போது பல ஊர், பல நாட்டு திருமணங்கள் நிகழ்ந்தாலும் சிறிது காலத்திற்கு முன் ஒருவர்க்கொருவர் சொந்தம். இது ஓரளவிற்கு எல்லாக் கிராமங்களிலும் காணப்படும் இயல்பும் கூட. இந்த வகையில் ஊரின் வம்சாவளி உறவுகளின் தொடர்புகள், சிலரால் எழுதப்பட்டுள்ளது. மனேச்சர் சி.நா.சிதம்பரப்பிள்ளை அவர்களது தொகுப்பொன்று பலரிடமும் உள்ளது. இது தவிர காசி விசுவநாதர் ஒரு தொகுப்பு வைத்திருப்பதாகவும் அதனை கணனி மூலம் பதிவு செய்திருப்பதாகவும் அறிய முடிகின்றது. ஆனால் இதுவரை பார்க்க கிடைக்கவில்லை.

என்னிடமுள்ள வம்சாவளியை வெளியிட விரும்பிய போதும் அது இலகுபடுத்தப்பட வேண்டி உள்ளது. அச்சிட பல பக்கங்கள் தேவை யாராவது கணனி மயப்படுத்தி இலகுவாக்கி உதவி செய்தால் வெளியிடலாம்.

# ஊர் நினைவுகள்

எங்கள் ஊர் பற்றிய நினைவுகளை சி.எம்.இராமச்சந்திரன் செட்டியாரவர்கள். "கடலின் கண் முத்து" எனும் தமது நூலின் 1948ம் ஆண்டில் எழுதியது.

வடமறாட்சியின் கடற்கரையோர ஒரு பகுதிக்கு வியாபார மூலை என்பது பெயர். அப்பெயரைக் கொண்டே இந்த ஊரின் பெருமையை அறியலாம். இங்கே படித்து அரச பகுதிகளில் பணி செய்து ஓய்வு பெற்றிருக்கும் பல பெரியார்கள் வசிக்கிறார்கள். ஊரின் கடைத்தெருவில் வீடுகளுடன் கடைகளும் நெருக்கமாகக் கட்டப்பட்டிருந்த போதிலும் பொதுமக்கள் வசிக்கும் வீடுகளின் வீதிகள் வேலிகளைக் கொண்ட வளைவுகளுக்குள் தனித்தனியே கட்டப்பட்டிருப்பதை காணலாம். இவ்விடம் உடல் நலம் பயப்பதெனக் கூறுவார்கள். சுற்றிலும் உள்ள நிலம் வறட்சியாக இருப்பதனால் இங்கே நோய்ப் பெருக்கம் ஏற்படக் காரணம் இல்லை.

இவ்வூர்ப் பெருமக்கள் தங்கள் பெண்பிள்ளைகட்கு கல்வி கற்பிக்கும் நோக்கம் கொண்டு பெரிய பாடசாலையை தொடக்கி உள்ளார்கள். இதன் முன்னேற்றத்தை கண்டால் விரைவில் ஒரு பெரிய கல்லூரி ஆகக் கூடும் என எதிர்பார்க்கலாம். இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பெருமக்கள் சைவசமயத்தில் ஆர்வம் உள்ளவர்கள். அது காரணமாக சைவ சமய பாடங்களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இதன் செயலாளர் ஓய்வு பெற்ற கல்விப் பகுதியினர் சமயத்தொண்டு செய்யும் பொருட்டாக சிவானந்த நித்திய தோத்திரத்திரட்டு ஒன்றை தொகுத்திருக்கின்றார்.

இச்சிறிய ஊரான வியாபாரிமூலை யாழ்ப்பாணம் சைவ மகா நாட்டிற்கு எங்களை அழைத்து பெருமைப்படுத்திய இளைய செயலாளர்

அவர்களுடைய பிறந்தகம். அவர் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் ஆசிரிய கலாசாலையில் பணியாற்றி வருகின்றார். சைவசமயத்தில் மிகுந்த ஊக்கம் கொண்டவர். செயல்முறையில் மிகுந்த உற்சாகம் பூண்டவர்.

குறிப்பு :- இங்கு பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளையுடன் வீதிகளின் அழகை ரசித்தவாறு திரு.வே.தா.சி.சிவகுருநாதன் அவர்கள் இல்லம் சென்றதையும், வடஇந்து மகளிர் கல்லூரி விழாவில் பங்கேற்று பேசியது பற்றியும் கூறுகின்றார்.

எமது ஊர் பற்றிய சில பாடல்கள்

புலவரெல்லாம் புகழ்ந்தேத்தும் பொன்னவிரம்
யாழ்ப்பாணப் புனித நாட்டில்
பலவளமுந் திகழ்பதியாகிய பரவரிய
சைவநெறிப் பண்பிற் சான்றோர்
திலகமொடு திருநீறும் திகழுமுகத்
தினராகித் தெருவு தோறும்
உலவு வியாபாரி மூலை எனும் பதி....

என பண்டிதர் சங்கர வைத்திலிங்கம் அவர்கள் பாடுகின்றார்.

மகாகவி பாரதியின் ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சுவாமி பழைய வேற்பாட்டுடன் படிக்கையில் 1931ம் ஆண்டில் பாடியது

யாபாரி மூலைப் புராணம்

இந்திர லோகந்தானும் யாபாரி மூலையிதற்குச்
சந்திப்பா யொப்புக் கூறத் தனநிலை யானதில்லை
அந்த இந்திரலோகத்தை வசுரர்பீ டித்ததாலே
வந்திடு தேவமாதர் வாழும்யா பாரி மூலை.

**********

# வர்த்தகப் பெருமை

எம்மூர் மக்களின் வர்த்தக நடவடிக்கைகளில் வட்டித் தொழிலும் புகையிலை வியாபாரமும் ஆரம்ப காலத்தில் முக்கிய இடம் பிடித்தன. சுழிபுரம் பகுதியால் கடற்கரை ஓரமாக வரும் மாட்டு வண்டில்கள் வியாபாரிமூலை தபாற்பெட்டி சந்திக்கருகில் இரண்டோர்நாள் தங்கி நிற்கும். இதன் காரணமாக போலும் அவ்விடத்தில் அக்காலம் முதல் இன்று வரை பல கடைகள் காணப்படுகின்றன. வியாபாரிமூலை வர்த்தகர்களும் தங்கள் வண்டில்களில் சிப்பம் ஏற்றிக் கொண்டு மாட்டு வண்டித் தொடராக பயணம் புறப்படுவர். இவர்கட்கு துணையாக காவற்காரரும் செல்வர்.


நாகர்கோயில் வழியாக பழைய கண்டி வீதியூடாக புளியங்குளத்தை சென்றடைந்து அங்கிருந்து பண்ணாமம் என்னும் மாத்தளையை நோக்கி பலநாட் பயணம் இடம்பெறும். மாத்தளையில் தங்கி கண்டி கம்பளை நாவலப்பிட்டி என மலையகத்தின் பல பகுதிகளிலும் உள்ள தங்கள் கடைகட்கு செல்வர். எம் ஊரவர் கடைகள் சிறந்த வருமானத்தை பெற்றுத் தந்தன. அத்தோடு நாகப்பட்டினத்துடன் கப்பல் வர்த்தகமும் செய்தனர். ஓடு, சீமெந்து, பானை, சட்டி, புடவை என்பன இதில் அடங்கிய சிலவாகும்.

வியாபாரிமூலை மக்கள் திருகோணமலை சென்று வர பாய்க்கப்பல்கள் ஆரம்பகாலத்தில் உதவின. பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை கொட்டியாரக் குடா தம்பலகமம் மூதூர் பகுதிகட்கு சென்றுவர இது வசதியாக இருந்தது.

திருகோணமலை நகரில் உள்ள காசுத்தெரு பெரும்பாலும் எம்மவர் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. பலரும் வீடுகள் வாங்கியும் வசித்தனர். "நெல்போட்டால் பொன் விளையும் பூமி" என கூறப்பட்ட தம்பலகமத்தில் எம் ஊரவர் பெரும் பாலோர்க்கு வயல்கள் இருந்தன. கப்பல் மூலம் புகைவண்டி மூலம் லொறிகளில் என காலமாற்றத்திற்கு ஏற்ப ஊரிற்கு நெல் கொண்டு வரப்பட்டதுடன் அவை பத்தாயங்களில் சேமிக்கவும் பட்டன. மூதூர் பகுதியாலும் நெல் வந்தது. வயல் செய்கையாளர்க்கும் காணி உரிமையாளர்க்கும் இடையே நட்புறவு பேணப்பட்டு வந்தது. சிலர் தாங்களே நெற் செய்கையை மேற்கொண்டு வந்தனர். வெ.சி.வே.வெற்றிவேலர் அரசாங்கத்திடம் 56 ஏக்கர் காடு ஏலத்தில் வாங்கி மாட்டு வண்டில்களின் உதவிகளுடன் நிலத்தை சீராக்கி பயிர்ச் செய்கையை மேற்கொண்டார் என்றால் அதுவும் மகத்தான சாதனையே. இந்த வயல் தம்பேட்டியான் காடு என்றே இப்போதும் அழைக்கப்படுகின்றது. எம் ஊரவர்களை தம்பேட்டியார் என்றே திருமலையில் அழைப்பார்கள். இது ஒரு காலம். 20வருடம் போக்குவரத்து, தொடர்புகள் இல்லாமையால் பலர் தங்கள் வயல்களை கிடைத்த விலைக்கு விற்ற சோகங்களும் உண்டு.

குளக்கோட்ட மன்னன் கந்தளாய் குளத்தை வெட்டி கால்வாய் மூலம் தம்பலகமம் வயல்கடகு நீர்பாய வழியமைத்து தம்பலகமம் ஆதிகோண நாயகர் கோயிலுக்கு 299 ஏக்கர் வயல் தானமும் செய்தான். வருடாந்தம் இந்த வயல்கள் குத்தகை செய்கைக்கு ஏலமும் விடப்படுகின்றன. இதன்மூலம் இலங்கையில் உள்ள செல்வந்தக் கோயில் பட்டியலில் இவ்வாலயமும் சேரும். இவ்வாலயத்தின் அக்கினாசகராக (தலைவர்) எம் ஊரவரான திரு சபாபதியார் இருந்துள்ளார். இவ் ஆலய வீதியிலும் எம்மவர்க்கு சொந்தமான வீடுகளும் இருந்துள்ளது. நிலாவெளி ராசா என ஆழ்வார் அவர்களையும் தம்பலகமம் இராசா என சபாபதியார் அவர்களையும்

அழைப்பர். எம்மூரவர் அக்காலத்தில் நிலாவெளிப்பகுதியில் கல்வீடுகள் கட்டி வாழ்ந்து உப்பளங்கள் (இலங்கையில் உள்ள தனியார்க்கு சொந்தமான ஒரே ஒரு உப்பளம்) வயல்கள் தென்னந்தோட்டங்கள் நடாத்தியோர் பலர். நிலாவெளிப் பிள்ளையார் கோயில் நிர்வாகிகளாக ஆழ்வார் வழிவந்தோரே இப்போதும் உள்ளனர். ஆ.தணிகாசலம் அவர்கள் அலஸ் தோட்டத்தில் பிரிட்டிஸ் படைகளின் நினைவிடம் அமைப்பதற்காக காணி அன்பளிப்பு செய்து பிரிட்டிஸ்காரரின் பாராட்டையும் பெற்றார்.



யாவா சென்று வர்த்தகம் செய்து தங்கம் சேமித்து அதை கப்பல் மூலம் எடுத்து வந்த போது தாண்ட கப்பலின் நங்கூரம் சிறிது காலத்தின் முன் கண்டெடுக்கப்பட்டதாக நிலாவெளிப் பகுதியில் கூறுவர். கட்டுக்காஸ் தோட்டையில் வர்த்தகம் செய்தோர் அங்கு கோயில் கட்டி நடாத்தி தர்மகர்த்தாவாகவும் உள்ளனர். மாத்தளை முத்துமாரி அம்மான் ஆலய நிர்வாக குழுவில் எமது ஊர் வர்த்தகர்கள் பங்கேற்கின்றார்கள். இப்படிப் பலர் தாம் வாழும் பிரதேசத்தின் கோயில்களுடன் தொடர்பு கொண்டு சீரோடும் சிறப்போடும் வாழ்கின்றனர்.

**********

வர்த்தகம் செய்து சிறப்புப் பெற்றோரும் இடங்களும்.


# வளம் பெருக்கிய வர்த்தகர்கள்

| | |
|---|---|
| S.K கொம்பனி, வே.க.கந்தையா | 93 கொழும்பு வீதி, கண்டி |
| S.P. முருகுப்பிள்ளை. ஆ. கனகசபாபதி | 142 கொழும்பு வீதி, கண்டி |
| M.K சதாசிவம் | நியூமார்க்கற், கண்டி |
| சி.விக்கினேஸ்வரன் ஸ்ரோஸ் எண்ணெய் வியாபாரம் | 173, கொழும்பு வீதி, கண்டி. |
| சி.சிவகுலசிங்கம் கண்டி றான்ஸ் போட்சேவிஸ் | 173 கொழும்பு வீதி, கண்டி |
| K.S.K பிறதேஸ் | 86 கொழும்பு வீதி, கண்டி |
| கு.ஆ.சிதம்பரப்பிள்ளை & சன்ஸ், | |
| A.S கணபதிப்பிள்ளை, S.N நடராசா | 99 கொழும்பு வீதி, கண்டி |
| சி.வாசுதேவன் லங்கா மத்திய புத்தகசாலை | 84 கொழும்பு வீதி, கண்டி |
| V.K.M நாகலிங்கம், N. ஆனந்தர் நகைக்கடை | 93 கொழும்பு வீதி, கண்டி |
| நாகலிங்கம் இரத்தினசபாபதி நகைக்கடை | |
| N. ஆனந்தர் | 93 கொழும்பு வீதி, கண்டி |
| K.S.K பிறதேர்ஸ் நகைக்கடை, க.கந்தயினார் | 93 கொழும்பு வீதி, கண்டி |
| K.S.K பிறதேர்ஸ் நகைக்கடை, தேவகுருநாதர் | 93 கொழும்பு வீதி, கண்டி |
| மயிலன் பிஸ்கற்கொம்பனி, மயில்வாகனம் | கட்டுக்கால் தோட்டை |
| கு.க.சுப்பிரமணியம் இரும்பு கடை | 146, பருத்தித்துறை, கட்டுக்கால் தோட்டை |
| S.P முருகுப்பிள்ளை சுருட்டுக்கடை | 423 திருமலை வீதி, மாத்தளை |
| வே.ஆ.சிதம்பரப்பிள்ளை, புத்தகக்கடை | |
| S.N நடராசா | 43 பிரதான வீதி, திருமலை |
| வேல் அழகன் ஸ்ரோஸ் இரும்பு வியாபாரம் | திருகோணமலை |
| ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ் பல்பொருள், ஈஸ்வரபாதம் | 1008 அனுராதபுரம் சந்தி, திருகோணமலை |
| சிவசக்தி ஸ்ரோர்ஸ் பல்பொருள் சிவபாதம் | 557 உப்புவெளி, திருகோணமலை |
| ஸ்ரீ கிருஷ்ணா படமாளிகை பாலசுப்பிரமணியம் | திருகோணமலை |
| லஷ்மி படமாளிகை பாலசுப்பிரமணியம் | திருகோணமலை |
| கனகம் தியேட்டர் சிவப்பிரகாசம் | திருகோணமலை |

| | |
|---|---|
| கனகம் மில் சிவப்பிரகாசம் | திருகோணமலை |
| குகன் ஸ்ரோர்ஸ் சிவப்பிரகாசம் | அனுராதபுர சந்தி, திருகோணமலை |
| இராசலிங்கம்ஸ் வட்டிக்கடை | 119பிரதான வீதி, திருகோணமலை |
| - சி.உதயன் | 120 பிரதான வீதி, திருகோணமலை |
| சுப்பிரமணியம் நகைக்கடை | றத்தோட்டை |
| N.M.P பரம்சோதி புகையிலை வர்த்தகம் | |
| P. சச்சிதானந்தம் | கட்டுக்கான் தோட்டை |
| T.R ஸ்ரோஸ் பல்பொருள், ச.தம்பையா | 59 அம்பகமுவாறோட்,கம்பளை |
| பரமுப்பிள்ளை & சன்ஸ் நகைக்கடை, ப.தியாகராசபிள்ளை | 38 அம்பகமுவாறோட்,கம்பளை |
| பரமுப்பிள்ளை & சன்ஸ் நகைக்கடை ப.தம்பையாப்பிள்ளை | 37 அம்பகமுவாறோட்,கம்பளை |
| வயித்திலிங்கம் நகைக்கடை | கம்பளை |
| மகாஜன டிஸ்ரிபியூட்டேஸ், ஸ்ரீ மகாதேவா | தெல்தெனியா |
| மகாஜன டிஸ்ரிபியூட்டேஸ், ஸ்ரீரங்கநாதன் | பருத்தித்துறை |
| நியூபாலகிருஷ்ணா ஸ்ரோர், சிவப்பிரகாசம் | 282 திருமலைவீதி, ஏறாவூர் |
| சக்தி புத்தகசாலை | பிரதான வீதி, மட்டக்களப்பு |
| புகையிலை வியாபாரம் இளையதம்பி கணபதிப்பிள்ளை | பல்விலை |
| புகையிலை வியாபாரம் அம்பலவாணர் | பன்னாகமம் |
| புகையிலை வியாபாரம் சின்னக்குஞ்சர் | றத்தோட்டை |
| நகைக்கடை செகநாதபிள்ளை | பன்னாகமம் |
| நகைக்கடை க.சி.க அருணாசலம் | பன்னாகமம் |
| சரவணா அச்சகம் மு.உ.மு.முருகேசபிள்ளை | நாவலப்பிட்டி |
| V.T.S சிவபுண்ணியம், புடவை கடை | 199. KKS றோட், யாழ்ப்பாணம் |
| கா.சி.மார்க்கண்டு | மெயின்வீதி, பருத்தித்துறை |
| பரம்றேடியோ சவுண்ட் மக்கள் சந்தை | பருத்தித்துறை. |
| கிருபா றேடிங் சென்றர், மு.சச்சிதானந்தம் | 27 பிரதான வீதி, பருத்தித்துறை |
| ரட்ணம் வெற்றிலைக்கடை 34 மக்கள் சந்தை | பருத்தித்துறை |
| நாதன் ஸ்ரோஸ் மக்கள் சந்தை | பருத்தித்துறை |
| வடலங்கா புத்தகசாலை, வே.சிவக்கொழுந்து | 27 பிரதான வீதி, பருத்தித்துறை |
| கலாபவன அச்சகம், வே.சிவக்கொழுந்து | 27 பிரதான வீதி, பருத்தித்துறை |
| V.R.M அரிசி ஆலை, ஆ.சி முருகுப்பிள்ளை | பருத்தித்துறை. |
| S.P.M பிறின்ரோர்ஸ் | V.M. றோட், பருத்தித்துறை |
| மயூரன் ஸ்ரோர்ஸ் | சரவணமுத்து, மாத்தளை |
| நியூட்டிகெயர் லிமிட்டெட் | சுவாமிநாதர், கொழும்பு |

**********

# கற்பூர விநாயகர்



**1788**ம் ஆண்டில் எழுதிய தோம்பு ஒன்றில் "உயர்புக்கலட்டி என்ற காணியில் ஒரு பிள்ளையார் கோயிலும் ஒரு கிணறும் மடமும் அதன் வடமேற்கில் ஒரு குளமும் நெடுங்காலமாக பலருடைய வழிபாட்டிற்கும் பிளக்கத்திற்கும் உரியன-வாக அமைந்துள்ளது." 200ஆண்டுகட்கு முந்திய தோம்பு நெடுங்காலமாக எனும் கூறுவதன் ஊடாக ஆலய தொன்மையை நாம் காணலாம். இப்பகுதி "மழவராயர் குறிச்சி" என குறிக்கப்படுவதனூடாக சோழர் கால தொடர்பையும் நோக்கலாம். மடப்பள்ளியார் என்போர் அரசரது மெய்க்காவற் படையினராக செயற்பட்டனர்.

1620களில் போர்த்துக்கேயரால் ஆலயம் அழிக்கப்பட்டதும் ஆலய ஆலமரத்தில் ஒல்லாந்து அதிகாரி கொக்குகளை சுட்டபோது அவை விழாமலும் பறக்காமலும் இருக்க கண்டு அதிசயித்து ஆலயம் பற்றி அறிந்து ஆலயம் கட்ட பொருள் கொடுத்ததும் சிதம்பரர் விசுவநாதரும் மற்றவர்களுமாக 1785களில் ஆலயம் அமைக்க முற்பட்டனர். 1790ல் நாயன்மார் கட்டுக் குளத்தில் எடுத்த விநாயகரை வைத்து பிரதிஸ்டா கும்பாபிஷேகம் செய்து வழிபட்டனர்.


இந்தியாவால் வரும் கற்பூரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்ட 1800ம் ஆண்டுகளில் புன்னை மரம் நிற்கும் இடத்தில் வாசனைமிகு பச்சைக்

கற்பூரம் விளைய ஆரம்பித்தது கண்டு மக்கள் மகிழ்ந்து வழிபட்டனர். அக்காலம் முதல் கற்பூர விநாயகர் என போற்றி வழிபடும் வழக்கம் ஏற்பட்டது.


சின்னத்தம்பியாரால் பராமரிக்கப்பட்டு வந்த ஆலயத்தில் 1862ல் ஓர் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. 1874முதல் சின்னத்தம்பியார் சரவணமுத்தர் தர்மகர்த்தாவானார். 1907முதல் ச.பொன்னுச்சாமி தனது தந்தையின் பணியை ஏற்றுக் கொண்டார். மதுரையில் இருந்து கொண்டு வந்த விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு 1909 ஆவணி 18ல் பிரதிஷ்ட கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. வே.தா.சி.சிவகுருநாதன் முயற்சியால் 16174.37சதம் செலவில் வெண் வைரகல் திருப்பணி வேலை செய்யப்பட்டு 04.02.1949ல் பொன்னுச்சாமி நடராசா அவர்கள் தலைமையில் புனராவர்த்த சம்புரோஷண மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது.

அப்பையா எனும் அ. கதிரேசுக்குருக்கள் வயோதிபம் காரணமாக ஆலய பூசைப் பணியால் ஒதுங்க 1962ல் திருஞானசம்பந்தக் குருக்கள் மகாகணபதிக் குருக்கள் ஆலய பூசைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

"கற்பூர விநாயகர்" ஆலய வரலாறு 2002ம் ஆண்டில் என்னால் வெளியிடப்பட்டது)



# வீரபத்திரர் ஆலயம்



தேவர்கள் வலம் வரும் பகுதி எனும் பொருளில் "தேவலவத்தை" எனும் வீரபத்திரர் ஆலயம் அமைந்த பகுதி பெறும் பெயர் இவ்விடச் சிறப்பை 18ம் நூற்றாண்டிற்குரிய செய்திகளூடாக எமக்கு தெரிவிக்கின்றது.

பழமையான நன்நீர் கிணறும் கிடுகால் ஆன ஆலயமும் பெரியதோர் ஆலமர விருட்சமும் வழிபாட்டு தொண்மையை காட்ட 30.05.1885ல் குடாநாட்டின் மிக பெரிய வீரபத்திரர் ஆலயம் அமைப்பதற்காக ஸ்ரீ குமாரர் வெற்றிவேலுவால் ஆலய அத்திபாரம் இடப்பட்டது. ஸ்ரீ செ.இராமலிங்கம் குருக்களால் பிரதிட்ட மகா கும்பாபிஷேகம் 06.04.1904ல் இடம்பெற்றது.

ஆலய வளர்ச்சிக்காக தம்பலகமம் பகுதியில் 35 ஏக்கர் வயல் நிலமும் வழங்கப்பட்டதுடன் வடமராட்சியின் பல பகுதிகளிலும் காணிகளும் தர்மகார்த்தா குடும்பத்தாரால் தானம் செய்யப்பட்டுள்ளன.

ஆலய வடக்கு வீதியில் தர்மகர்த்தா குடும்பத்தாரின் வீடும் மடமும் கட்டப்பட்டதுடன் தெற்கு வீதியில் அந்தணர் இல்லமும் மேற்கு வீதியில் வாத்தியக் கலைஞர் இல்லமும் 1905ம் ஆண்டின் பின் கட்டப்பட்டன. அதனை அடுத்து 1908ம் ஆண்டுகளில் வெளிக்கிணறும் கட்டப்பட்டது.

10.09.1925ல் இரண்டாவது கும்பாபிஷேகம் மாப்பிளைக் குருக்களால் நிறைவேற்றி வைக்கப்பட்டது. ஆலய எஜமானர் வெற்றிவேலு கனகசபை அவர்கள் நவக்கிரகங்கட்கு அருகே இருந்த

கிணற்றை மூடிக் கட்டியதுடன் நீர்வேலி பிரமஸ்ரீ க.சுவாமிநாதக்குருக்கள் மூலம் 01.04.1936ல் சம்புரோஷண கும்பாபிஷேகத்தையும் நிகத்திவித்தார் . அதற்கு முன்பாக ஆலயத்தின் முன்பாக செல்லும் பிரதான வீதியையும் அரச அனுமதியுடன் தற்போதைய நிலைக்கு மாற்றி அமைப்பித்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஞானகுருவான யாழ்ப்பாணத்துச் சுவாமி அருளம்பலம் அவர்கள், தமிழகத்தால் ஆலய எஜமானார் வெ.க.சிவப்பிரகாசபிள்ளையுடன் ஊர் வந்திருந்து 05.12.1942ல் சமாதி அடைந்தார். அவரது உடல் ஆலய ஈசான மூலையில் நல்லடக்கம் செய்யப்பெற்று பெரிய வெண்கற் சமதி ஆலயம் உருவாக்கப்பட்டது.


அஸ்டபந்தனங்கள் சாத்தப்பெற்று புனவர்த்தன கும்பாபிஷேகம் 30.08.1950ல் ஆலய எஜமானர் வெ.க.சி.பாலசுப்பிரமணியத்தால் முன்நின்று நிறுத்தி வைக்கப்பட்டது.

11.11.1971ல் நிகழ்த்த களவினை அடுத்து 21.06.1971ல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டது. நாட்டு நிலமைகளால் திருப்பணிகள் தாமதப்பட்டு பல முயற்சிகளின் பின்னர் 08.06.1990ல் மகாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ சு.இராசேந்திரக்குருக்களால் நிகழ்த்தப்பட்டது.

பிரம்மஸ்ரீ செ.இராமலிங்கம் குருக்களை அடுத்து பெரிய ஐயா என அழைக்கப்பட்ட சிவஸ்ரீ இ.சிவசாமிக்குருக்கள் கிரியா ஞானத்தாலும் அன்பாலும் ஒழுக்கத்தாலும் மக்கள் மனம் கவர்ந்து 1939முதல் 1991 வரையான 52 வருடங்கள் ஆலயத்தை சிறப்புற நடத்திய பெருமைக்குரியவராக விளங்கினார். தற்காலம் அவர் மகன் ஸ்ரீ.சி.வாசுதேவக் குருக்கள் ஆலயப் பூசைகளை செய்து வருகின்றார்.

(ஆலய வரலாறு "ஸ்ரீ சிவ வீரபத்திர காளி" எனும் பெயரில் 2003ம் ஆண்டு என்னால் வெளியிடப்பட்டது)

# நாச்சிமார் ஆலயம்



ஆலயம் சிறியது என்றாலும் செய்திகள் சுவையானது. ஆலய கிணறு மிகத் தொன்மையானது. உண்மைதான் அக்கிணறு வெட்டப்பட்ட விதம் நேராக செல்லாது ஓர் பக்க சாய்வாக சென்றது. தட்டையான சுண்ணக்கற்களை அடுக்கி கட்டப்பட்ட விதமும் கற்களை இணைக்க வைக்கப்பட்ட பொருட்களும் வித்தியாசமானவை. பனம்பழத்தின் நார் பகுதிகள் வைத்தே கட்டப்பட்டன. இக்கிணற்று புனருத்தாரணம் திரு.ப.சோமஸ்கந்தரால் செய்விக்கப்படுவதற்கு முன் கிணற்றை எட்டிப் பார்க்கவே மக்கள் அஞ்சுவர்.

இக்கிணற்றில் எமக்குத் பெயர் தெரியாத அரசி ஒருத்தி சதுரவடிவ தங்க அம்மி ஒன்றை மறைத்து வைத்தாளாம். கிணற்றின் அடிப்பகுதியில் பாந்துகள் பல காணப்படுகின்றன. ஊர் வரலாறு அறிய சில வயோதிபர்களை பேட்டி கண்ட போது தாம் படித்த வரலாற்றுப் புத்தகத்தில் அரசி பற்றிய செய்தி இருந்தது என்றார்கள். யார் எழுதிய வரலாறு? என கேட்ட போது எழுதியவர் பெயரை மறந்து விட்டார்கள். சரி நன்னீர் கிணறாகவும் நெருக்கமான குடியிருப்புகளை கொண்டமைந்த நாச்சிமார் ஆலய சூழல் மாறியது. கிணறு பழுதடைந்து கைவிடப்பட்டது.

மதிய வேளையிலும் நாச்சிமார் ஆலய வீதியால் மக்கள் செல்லத் தயங்குவர். பலர் வெண்ணிற உடை உடுத்த கிழவியை கண்டதாகக் கூறுவர். மரங்கள் நிறைந்த சூழலாகவும் இப்பகுதி அமைந்தது. பூவரச மர சூழலிலே விக்கிரகம் அற்ற நிலையில் மரத்திற்கு மக்கள் தாமே விளக்கேற்றி வழிபடுவர். அம்பலவாணர் சின்னத்தம்பியார் மனைவி சிறுமியாக விளையாடிக் கொண்டிருந்த நாச்சிமாரை கண்டு விளக்கேற்றி வழிபட்டார் என்பர். கொழும்பு கொலோனியற் கந்தோரில் கொள்வனவு செய்த நெடுந்தோட்டம் எனும் இக்காணியில் சரவணமுத்தரால் வெண்கல் மேடை ஒன்று அமைக்கப்பட்டது.

சித்திரைப் பௌர்ணமி இரவில் நூறு பொங்கல் வரை இடம்பெறும். கோயிலை சுற்றி வெள்ளை கட்டி அலங்கரிப்பர். நிலத்தை தோண்டி மண்ணிலேயே மட்குடம் வைத்து பொங்குவர். மகாகணபதிக்குருக்கள் பொங்கல் அன்று வந்து பூசை வைப்பார். நள்ளிரவு தாண்டி நிலாவொளியில் பூசை வைத்து மகிழ்ந்து வணங்கி ஆனந்தமாக மக்கள் தம் இல்லம் திரும்புவர்.



காலமாற்றத்தில் எல்லாமே மாறி விட்டது. தங்க அம்மி கிடைக்காவிட்டாலும் V.K.M நாகலிங்கம் சச்சிதானந்தம் அவர்கள் 1988ல் தந்த நிதியில், மக்கள் உதவியில் ஆலயமும் மடப்பள்ளியும் உருவாயின. விக்கிரகம் வைக்கப்பட்டது நித்திய பூசை ஆரம்பமானது.

**********

# ஓதியடி ஞானவைரவர்

வரம்பிலா ஆற்றல் பெற்றாள் - ஆதி
பரம்பொருள் இறை சிவனார் மூர்த்தம்
குவலயம் காக்க வந்த வைரவ மூர்த்தியானார்
எளியவர்க் எல்லாம் அருளும் திரிசூல மூர்த்தி



எங்கும் காவல் தெய்வமாக உள்ள வைரவரை வழிபடுவதன் மூலம் பயநீக்கம் தைரியம் செல்வம் ஞானம் தொழிற்சிறப்பு என்பவற்றை பெறமுடியும். சூலம் ஒன்றை வைப்பதன் மூலம் வைரவர் வழிபாட்டை தொடங்கவும் முடியும். அந்த வகையில் நீண்ட நாட்களாக அணியா ஓடை பகுதியின் மேட்டு நிலத்தில் சூலம் ஒன்று ஓதிய மரத்தின் கீழ் பெரிதாக ஆதரிப்பார் இன்றி காணப்பட்டது. சண்டப்பா சதாசிவம் என அழைக்கப்பட்ட போன்ற அயலில் உள்ள இரண்டொருவர் பூவைத்து வழிபாடு இயற்றினர்.

இவ் ஆலயம் அமைந்த இடம் வெற்றிலைக் கடை வைத்திலிங்கத்திற்கு எழுதப்பட்டு அவர் ஆலய பொறுப்பாளர் ஆனார். அவர் மக்கள் தம் தொழில் நிமித்தம் ஆலய பணியில் ஈடுபட முடியாமையால் சதாசிவத்தின் மருமகன் பாலகிருஷ்ணன் பெயரில் ஆலய பொறுப்பு எழுதப்பட்டது. அயலில் வசித்த கதிரனின் மகள் தனது காணியை ஆலயத்திற்கு எழுதினார். ஒரு லட்சம் ரூபா அரசநிதி பெறப்பட்டு ஆலயம் கட்டப்பட்டது. 1997ல் திருமதி இராசம்மா

அவர்களால் ஆலய மேடை கட்டப்பட்டதுடன் ஆலயம் செல்லும் பாதையும் அமைக்கப்பட்டது. 2014ல் மின் இணைப்பும் இவரால் பெறப்பட்டது. 25000ரூபா செலவில் கண்டாமணி ஒன்றும் இவரால் ஆலயத்தில் பூட்டப்பட்டது.

பாலகிருஷ்ணனால் ஐயர் ஒழுங்கு செய்யப்பட்டு நித்திய பூசை செய்யப்படுகின்றது. பொதுமக்கள் பாலகிருஷ்ணனுக்கு தம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகின்றார்கள். ஒரு நேர பூசை இங்கு இடம் பெறுகின்றது.



***********

# தோப்புமணல் ஞானவைரவர்




சுமார் அறுபதாண்டுகட்கு முன்னர் தோப்புமணல் எனும் காணியில் கிடுகால் வேய்ந்த குடிலில் சூலம் வைத்து வைரவப் பெருமானை பக்தியுடன் வணங்கி வந்தனர்.

அன்பர் சிலரின் முயற்சியால் சுண்ணாம்புக்கட்டாக ஆலயம் அமைக்கப்பட்டதை அடுத்து நீலகண்ட ஐயரால் ஒருவேளை பூசை நிகழ்த்தப்பட்டு வந்தது.

மாசி மகத்தில் பொங்கல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டது. காளி அப்பு என்பவர் சேமக்கலம் அடித்து பொங்கற் பொருட்களை மக்களிடம் சேகரித்து பொங்கலை சிறப்புறச் செய்து வந்தார். இதன் போது அலயம் அமைந்த காணி உரிமையாளர்களான பொன்னாச்சிப்பிள்ளை, அருள்லட்சுமி அம்மா போன்றோரால் வழுந்து வைத்து பொங்கல் செய்யப்பட்டது.

ஆ.சி.முருகுப்பிள்ளை வை.சதானந்தன் என்போர் ஊரவர் உதவியுடன் புதியதோர் ஆலயம் அமைத்து கும்பாபிஷேகமும் நடத்தினர். ஆலய பூசைகளை தற்போது குஞ்சித பாதக்குருக்கள் செய்து வருகின்றார். கலாகரன் குடும்பத்தவர் கொடுத்த காணியில் மடப்பள்ளி அமைந்துள்ளது. தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, முழுமையான ஓர் ஆலயம் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

# தெணி அம்மன் ஆலயம்



கடற்கரை ஓரமாக தோட்ட நிலங்கட்கு மத்தியில் அமைதியான சூழலில் அம்மனை தரிசிக்கலாம். சுமார் 200 ஆண்டுகளின் முன் வேதாரணியம் தோப்புத்துறையில் இருந்து வேதாரணியம் குருக்கள் ஒருவர் சில தெய்வ விக்கிரகங்களுடன் கடல்மார்க்கமாக மருதந்தெணி எனும் இப்பகுதியில் வந்திறங்கினார். தாம் வந்திறங்கிய இடச்சூழலால் கவரப்பட்டு இங்கு காணப்பட்ட பெரியதோர் புன்னை மரத்தடியில் தாம் கொணர்ந்த மகமாரி விக்கிரகத்தை வைத்து பூசை செய்து வந்தார். அவர் பக்தியை கண்ட அயலவர்கள் அவரிற்கு உதவிகள் புரிய ஒரு கீற்றுக் கொட்டகையும் உருவானது.

இதை விரும்பாத யாரோ ஆலயத்திற்கு தீமூட்டி இருக்கலாம். மனவேதனை உற்ற மக்கள் நிரந்தர ஆலயம் ஒன்று இங்கு உருவாக வேண்டும் என விரும்பினர். சிறு ஆலயமும் உருவானது. எரிந்த அம்மன் ஆலயம் எனும் பெயரும் ஆலயத்திற்கு ஏற்பட்டது. ஆலயம் தெணி அம்மன் கோயில் எனவும் அழைக்கப்பட்டது. வேதாரணியக் குருக்களின் மகன் சிவண்முகக்குருக்களும் அவர் வழிவந்தோரும் ஆலய பூசையை செய்து வந்தனர். சிவ சண்முகக் குருக்களின் புதல்வன் சின்மயானந்தக் குருக்களை அடுத்து அவர் புதல்வன் சபாபதிக்குருக்களும் அவர் பின் அவர் மகன் சிவசுப்பிரமணியக் குருக்களும் அவர் மகன் மயில்வாகனக் குருக்களும் என பூசைக்கைங்காரியங்கள் தொடர்கின்றது. 1992முதல் குஞ்சிதபாதக் குருக்கள் பொதுமக்களால் பெரிதும் விரும்பப்படும் குருக்களாக இருந்து


பணியாற்றி வருகின்றார். அம்மன் வருத்தம் ஏற்படுவோர் நேர்த்தி வைத்து தயிர்ச்சாதம் வைத்து வழிபட்டனர். அருள்புரியும் அன்னையின் அருளாசி பெற்று நோய் நீக்கம் பெற்றனர். அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ என அன்னையை எல்லாமாக கண்டு மகிழ்ந்தனர்.

சுண்ணாம்புக்கட்டாக இருந்த ஆலயத்தின் நிலைகளும் முகடும் குளவிகளின் தாக்கத்தால் பாரிய துளைகளுடன் காட்சியளித்தமை கண்ட ஆழ்வார் சின்னையா குடும்பத்தவர்கள் 1958ம் ஆண்டுகளில் கற்பக்கிரகத்தையும் அர்த்த மண்டபத்தையும் வெண் சுண்ணக்கற் திருப்பணியாக செய்து கும்பாபிஷேகம் செய்தனர்.

இதனை அடுத்து 1966ம் ஆண்டில் இடம்பெற்ற கும்பாபிஷேகம் சங்காபிஷேகம் அன்னதானம் வைரவர் மடை என்பவற்றை இணைத்து வெளியிடப்பட்ட கணக்கறிக்கை கவனத்தில் கொள்ளப்படக் கூடியதாக உள்ளது. 8 கிராமங்களிலும் சேர்த்த மொத்த பணம் 2467/05 சதம். மொத்த செலவு 2390/38. கையிருப்பு 76/67சதம். 50சதம் கொடுத்தவர்களின் பெயர்ப்பட்டியலையும் பார்க்க கூடியதாக உள்ளதுடன் 5 பேர் மட்டும் 100/ வீதம் கொடுத்ததையும் காண முடிகின்றது.

மக்களிடம் ஒருலட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா வரையில் நிதி சேகரித்து 1992ம் ஆண்டுகளில் நிகழ்ந்த கும்பாபிஷேகம் சிறப்புற நடந்ததை அடுத்து நவராத்திரி கௌரிகாப்பு பங்குனித்திங்கள் திருவெம்பா மாதபௌர்ணமி போன்ற நாட்களில் விசேட பூசை வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாலயத்தின் சுற்றுக் கொட்டகையும் ஓர் சகடையும் சி.இராசேந்திரம் குடும்பத்தாரால் செய்யப்பட்டது. முன் மண்டபம் கனகசபாபதி விவேகானந்தம் அவர்களால் அமைக்கப்பட்டது. பிள்ளையார் விக்கிரகம் பசுபதி குடும்பத்தவர்களால் வழங்கப்பட்டது. முருகன் விக்கிரகம் சிவப்பிரகாசம் வேதனாயகம் அவர்களாலும் நாகதம்பிரான் இரத்தினசபாபதி மாணிக்கராசா அவர்களாலும் வழங்கப்பட்டது.

# ஆத்தியடி விநாயகர்



அரசமரம் ஆலமரம் மருதமரம் வேப்பமரம் போன்ற மரங்களின் கீழ் இறைவனை ஆராதிக்கும் வழக்கம் எங்கும் உண்டு. இவ்வகையில் வியாபாரிமூலை "விளாத்தி நின்ற சீமா" எனும் காணியில் திரு.நாகலிங்கம் பிள்ளையால் ஆலயத்திற்கு என ஒதுக்கப்பட்ட சுமார் முப்பது அடி நீள அகலமான இடத்தில் பூவரசமர நிழலில் அருவுருவத் திருமேனியராக அடியார்களின் நேரடி வழிபாட்டிற்கு உரியவராக அருள் தருகின்றார் ஆத்தியடி விநாயகர். ஆரம்பத்தில் பனை மரத்துடன் பிணைந்து நின்ற ஆத்திமரத்தடியில் 1870ம் அண்டுகளில் விநாயகரின் இருப்பை உணர்ந்த அடியார்களால் இவ்விட வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது.


பின்னர் மேசன் சின்னையர் என்பவர் இக்காணியின் நடுப்பாகத்திற்கு சற்று மேற்காக மூன்றடி நீள அகல அரை அடி உயர வைரக்கல் மேடை அமைத்து வடக்கு நோக்கிய நிலையில் சுண்ணாம்புச் சாந்தில் பிள்ளையார் உருவம் அமைத்து வழிபட்டார். வடக்கு எல்லை வேலி ஓரத்தில் இருந்த குருந்த மரத்தில் காத்தவராயருக்கு வழிபாடு இடம்பெறுகின்றது.

1920களில் இவ்வாலயத்திற்கு என மண்டபம் அமைக்க முற்பட்டு மரம் நட்டு வளை வைத்து வேலை செய்த போது அது முறியவே பிள்ளையார் இயற்கையையே விரும்புகிறார் என கருதி அம்முயற்சி கைவிடப்பட்டது.

தைப்பொங்கல் சித்திரை பொங்கல் விசேட நாட்களில் விசேட வழிபாடு இடம்பெறுவது வழமை. 1986ம் ஆண்டுகளில் ஆலயத்தை கிழக்கு நோக்கி அமைக்க சிலர் முற்பட்ட போது அம்முயற்சியும் தடைப்பட்டது. இப்போது சிறு மேடையில் எழுந்தருளி உள்ள விநாயகரை நோக்கியவாறு முஷிகம் உள்ளது.

**********

# முடிக்கொற்றாவத்தைப் பிள்ளையார் கோயில்



மாந்தர் கைப்படாதே காம்பிற்பூத்து இறைவன் மேல் பூச்சொரியும் தெய்வ மலராம் கொன்றை மரத்-தடியை தன் விருப்பிடமாகக் கொண்டு அடியார் உளம் புகுந்து கருணையினால் அவா் தம்மை ஆட்கொள்ளும் விநாயகரின் திருவருளையும் திருஉருவையும் உள்ளத்தால் உணா்ந்து வழிபட்டவா்கள் வியாபாரிமூலை திருநாவலூர் சாளம்கை பகுதி அடியவா்கள்.

விக்கிரகம் இன்றியே கொன்றை மரத்திலேயே விநாயகரை கண்டு வழிபட்ட அடியார் சிலர் பூசை வழிபாடுகள் செய்வதற்கு ஓர் விநாயகர் சிலை வேண்டும் என விரும்பிய போது சுமார் 200 வருடங்களின் முன் வேதாரணியத்தால் வந்தோரான சிவ சண்முகக்

குருக்கள் தம்மிடமிருந்த விநாயகர் சிலையை கொன்றை மரத்தின் கீழ் வைத்து மண்ணால் ஓர் சிறு ஆலயம் அமைத்து மக்கள் வழிபாட்டிற்கு உதவினார்.

சிவசண்முகக் குருக்கள் மீது பெரும்பற்றுவைத்த மக்கள் அவர்காலத்தின் பின் அவரது மகன் சின்மயானந்தக் குருக்களுடன் ஒத்துழைத்து சுண்ணச் சாந்தாலான மடாலயம் அமைத்து குடமுழுக்கும் நடாத்தி மகிழ்ந்தனர்.

அவர் காலத்தின் பின்னர் சபாபதிக் குருக்களும் பின்னர் சண்முகக் குருக்களும் அவரின் பின் சிவசுப்பிரமணியக் குருக்களுமாக ஆலயத்தை பராமரித்து பூசை வழிபாடுகளும் செய்து வந்தனர்.

ஆலயத்தை புனரமைப்பு செய்ய விரும்பிய போது மயில்வாகனக் குருக்கள் சுமார் 1 $\frac{1}{2}$ பரப்பு நிலத்தை ஊரில் பணம் சேர்த்து வாங்கி விட்டார். கணபதிப்பிள்ளை சுப்பையா ஓர் துண்டு நிலத்தை ஆலயத்திற்கென எழுதினார். நடராசா இராசரத்தினம் நடராசா இராசமாணிக்கம் அவர்களாலும் ஆலயத்திற்கென $\frac{1}{2}$ பரப்பு நிலம் வழங்கப்பட்டது.

மயில்வாகனக் குருக்களுடைய காலத்தில் ஆலயத்திற்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டது. 1939ம் ஆண்டுகளில் வியாபாரி மூலை முருகுப்பிள்ளை நாகலிங்கம்பிள்ளை அவர்களால் மணிக்கோபுரம் கட்டப்பட்டு மணி ஏற்றப்பட்டது. முருகுப்பிள்ளை இராசலிங்கம்பிள்ளை அவர்களால் எழுந்தருளி விநாயகர்சிலை வழங்கப்பட்டது. மயில்வாகனக் குருக்களின் மகன் சபாபதிக் குருக்களின் காலத்தில் புதிய தூபி அமைக்கப்பட்டு 1978ம் ஆண்டில் மகா கும்பாபிஷேகம் நிறைவேறியது.


நாட்டு நிலைமைகளால் ஏற்பட்ட சேதங்களை அடுத்து திருத்த வேலைகளின் பின் 6.07.1988ல் சம்புரோஷதை மகா கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

ஆலய உரிமை தொடர்பாக 1952ம் அண்டு முதல் 1963வரை வழக்குகள் நடந்து கொண்டிருக்க மூன்று ஊர் மக்களாலும் நிருவாக சபை அமைக்கப்பட்டு கோயிற் பணிகள் நிறைவேற்றப்பட்டன. இங்கு பக்தி சிரத்தையுடன் மேற்கொள்ளப்படும் கந்தபுராணப் படிப்பில் பலரும் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

சபாபதிக் குருக்களின் பின்னர் ம.ச.வேதாரணியக் குருக்கள் ஆலயம் சிறப்புடன் திகழும் விதமாக 1991முதல் பூசையும் முகாமைத்துவமும் செய்து வருகின்றார். சமீப காலத்தில் பெரிய அளவிலான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வகையில் மூலஸ்தானம் வல்லிபுரம் வடிவேலு குடும்பத்தவராலும் முருகன் விக்கிரகம் இரத்தினசபாபதி அவர்கள் குடும்பத்தாலும் வைரவர் மா.திருச்செல்வம் குடும்பத்தவராலும் வசந்தமண்டபம் வயித்தீஸ்வரன் தங்கமணி குடும்பத்தவராலும் செய்யப்பட்டதை அடுத்து ஆடி மாதம் 2011ம் ஆண்டில் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது.

**********

# சற்கோட்டை முனியப்பர்



சற்கோட்டை முனியப்பரைப் பற்றி நிறையவே கதைகள் உண்டு. நள்ளிரவில் முனியப்பர் நடந்து வரும் சலங்கை ஒலி கேட்கும். நாய்கள் ஊளையிடும் சக்கோட்டையில் இருந்து பிள்ளையார் கோயிலடி வந்து பெருந்தெருவால் வீரபத்திரர் கோயில் தெணி அம்மன் கோயில் வரை சென்று பிரதான வீதி ஊடாக அவர் மீண்டும் சக்கோட்டை செல்லும் பாதையினை எமது முன்னைய தலைமுறையினர் கூறுவர். அவர்கள் தாம் கேட்ட சலங்கை ஒலி பற்றி மெய்சிலிர்த்து கூறுவர். அவர்கள் அனைவர்க்கும் அது தெரியும். அனைவர்க்கும் அவரிடம் பயம், பக்தி. சுமார் 20 வருடங்களுக்கு முன் வரை அனைவரும் நம்பிய விடயம்இது.

வியாபாரிமூலையார்க்கு வெள்ளைப் புற்றடியோடு கம்புளி காப்பானோடு நெருக்கமான தொடர்பு பலருக்கும் அங்கு காணிகள் உண்டு. T.S.S சிவப்பிரகாச மாஸ்ரருக்கு சொந்தமான காணியிலேயே முனியப்பர் ஆலயமும் உள்ளது. முன்னர் ஓலைக்குடிசையில் அகன்ற ஆலமரத்தின் கீழ் ஆலயம் இருந்தது. பல ஊர் மக்கள் அங்கு சென்று பூப்போட்டு முனியப்பரை வணங்கினர். ஆனைக்குட்டி மடத்தாள் எனும் பெண் களவா முனியையும் பக்தியுடன் வழிபட்டு வந்தார். கனவுக்காட்சி ஒன்றை அடுத்து அவர் வெத்திலைக் கேணியில் உள்ள நித்திய வெட்டை எனும் இடத்தில் இருந்து சிலரின் உதவியுடன் சந்நாசி

முனியின் சூலம் எடுத்து வந்து குறித்த ஆலமரத்தருகே நின்ற பூவரசமரத்தடியில் வைத்து வழிபட்டார்கள். இதை அடுத்து கிணறும் ஒன்று அமைக்கப்பட்டது. கு.க.சுப்பிரமணியத்தின் காணியில் கேணி வெட்டி ஆடுமாடு நீர் குடிக்க கூடியதாக சரிவான அமைப்பும் உருவாக்கப்பட்டது. காலப்போக்கில் அது கைவிடப்பட்டது.

**********

# சற்கோட்டை சித்தி விநாயகர்



ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பொலிகண்டி கந்தசுவாமி கோயில் வரையான ஓர் நேர் கோட்டிலே கடற்கரை பிரதான வீதியை அடுத்து தோட்ட வெளிகளை காண முடியும். ஊரவர்களின் பயிர்ச்செய்கை காணிகளாக இருந்த இப் பிரதேசம் வீடுகளாக உருமாறிக் கொண்டிருக்கின்றது. கற்பூர விநாயகர் ஆலயத்தில் நின்றே ஆலடிப் பிள்ளையாரையும், தெணி அம்மனையும் பார்த்து தரிசிப்பர். ஆலய விளக்கொளிகள் தெரியும். இங்கு நின்றவாறே சற்கோட்டைப் பிள்ளையாரையும் கந்தவன முருகனையும் நினைந்து தொழுவர் சற்கோட்டை கம்புளிகாம்பான் எம்மூர் பகுதிகளே கிராம அலுவலர் பிரிவுகள் பிரித்த போதும்.

"சற்கோட்டை கோணாவளைத் தெணி சித்திவிநாயகர் கடல் சார்ந்த இடத்தமர்ந்து உள்ளார். தென்னை பனை புங்கு புளி ஆல் அரசு

விளார்த்தி அலரி மரங்களை இயற்கையாக தன்னகத்தே கொண்ட இடம். பரிவார தெய்வங்களாக முருகன், நாகதம்பிரான், வைரவர், உள்ளார்கள். பிரபல்யமான சற்கோட்டை முனியெற்று சொல்லப்படுகின்ற "காளகண்ட சந்நியாசி முனி" விநாயகருக்கு காவல் தெய்வமாக விளங்குகின்றார். விவசாய தோட்டச் சூழலைக் கொண்ட இங்கு வன்செயல் நிகழ்ந்த போர்க்காலத்தே தன்னருளால் தன் சூழலில் இருந்த மக்களை காத்த தெய்வம்"

இது சற்கோட்டை சித்தி விநாயகர் ஆலய தொண்டர் வ.வேலாயுதம் அவர்கள் சற்கோட்டை பிள்ளையாரின் திருவூஞ்சலுடன் அடியார்கட்கு வழங்கும் பிரசுரம்.


ஒரு காலத்தில் இருந்த சிவன் கோயில் 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டது. வேலாயுதம் ஐயர் என்பவர் வீரக்கொடிய குறிச்சிறையில் அமைந்த நிலாவில் எனும் தமது காணியை துப்பரவு செய்த போது அழிந்த சிவாலயத்தின் எச்சங்களிடையே ஓர் பிள்ளையார் விக்கிரகத்தை கண்டு எடுத்தார். அதனை அவ்விடத்திலேயே வைத்து வழிபட்டார். ஓர் சிறுகோயிலும் உருவானது.

முத்துக்குட்டி ஐயர் பூசை செய்த காலத்தில் அருணர்வளவு, திக்கம், கம்பளி காப்பான், இன்பர்சிட்டி, வெள்ளைப் புற்றடி, வியாபாரிமூலை புகுதிகளை சேர்ந்த சைவப் பெருமக்கள் ஆலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என விரும்பினர். இப்பகுதி கிராம சேவகர் திரு கிருஷ்ணராசாவின் தலைமையில் ஆலய பரிபாலனசபை உருவானதை அடுத்து 1994ல் முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. சில திருப்பணிகளின் பின்னர் 2013ல் இரண்டாவது கும்பாபிஷேகமும் இடம் பெற்றது.

முத்துக் குட்டி ஐயாவின் பின் அவர் மருமகன் செல்லத்துரை ஐயாவும், ஆண் பிள்ளைகள் இன்மையால் செல்லத்துரை ஐயா மனோண்மணி அம்மா அவர் மகன் வேலாயுதக்குருக்கள் திருமணம் செய்யவில்லை. முத்துக்குட்டி ஐயாவின் மருமகள் செல்லத்துரை ஐயா கோயிற் கருமங்களை செய்து வந்தார். ஆண் பிள்ளைகள் இன்மையால் ஆலய தர்மகர்த்தா செல்லத்துரைசர்மா மனோன்மணி அம்மா நிர்வாக சபை உதவியுடன் குருக்களை நியமித்து கோயிற்கருமங்களை செய்து வருகின்றார்.

**********

# அண்ணமார் கோயில்



வித்தியாலய வீதியில் அரச மரம் ஒன்றின் கீழ் சூலம் அமைக்கப்பட்டு நான்கு தலைமுறையாக வழிபாடு இடம்பெறும் இவ்விடம் நூற்றாண்டிற்கு மேல் வாழ்ந்த வல்லியப்பா என்பவரால் ஆதரிக்கப்பட்டு வந்தது. வெள்ளிக்கிழமைகளில் விளக்கேற்றி வழிபாடு இடம் பெறுவது வழமையாகும். வல்லியப்பாவின் பின் வ.முருகன் காலத்தில் சூலம் இருந்த இடத்தை சுற்றி வேலியிடப்பட்டது. மேலே அரசமரம் நிழல் கொடுத்து வந்தது. வேலாயுதம் விளக்குவைக்க ஆரம்பித்த பின் மேற்கூரையும் இடப்பட்டு அமைதியான ஆலயமாக விளங்குகின்றது. வருடம் ஒருமுறை சிவமடை படைக்கப்பட்டு அன்னதானமும் வழங்கப்படுகின்றது.

# பழவத்தை காளிகாம்பாள் ஆலயம்




உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் சக்தி, எங்கும் எதிலும் நிறைந்த ஆதிபராசக்தியே, அந்த சக்தியின் ஒரு தோற்றமான காளியை மகாகவி பாரதியார்,

"யாது மாகி நின்றாய் - காளி
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் - காளி நின்
தெய்வ லீலை யன்றோ"

எனும் இவ்வரிகள் பழவத்தை காளிகாம்பாளுக்கும் பொருத்தமாக அமைகின்றது.

வெறும் காணியில் உள்ள கிழுவை மரத்தில் காளியின் இருப்பை உணர்ந்து விளக்கு வைத்து வணங்கும் நடைமுறை நீண்ட நாட்களாக தொடர்ந்து வந்தது. யாழ் மக்களின் வன்னி நோக்கிய இடப்பெயர்வுகளை அடுத்து திரு.பொ.சின்னையா அவர்களால் தொடங்கிய ஆலய திருப்பணி வேலைகள் வளர்ச்சியுற்று பெரியதோர் ஆலயமாக சிறப்பு பூசைகளுடன் நடைபெற்று வருவதை காண முடிகின்றது. தீது நன்மை எல்லாம் உன் செயலே என உரிமை

தொடர்பாக கோட்டிலே வழக்குகளும் தொடர்ந்த போதிலும் எந்தத் துன்பம் வந்த போதிலும் காணி கைவிடமாட்டாள் எனும் சரணாகதி மனப்பாங்குடன் காவல்தெய்வமாகவும் வீர நாயகியாகவும் தாய்மையின் சொரூபமாகவும் கண்டு பக்தர்கள் அன்னையை போற்றித் தொழுவதை காண முடிகின்றது.



(ஓர் ஆலய ஓலைச்சுவடி ஒன்று)

**********

# ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்




என் பக்தர்கள் எனக்காக காத்திருக்கிறார்கள் எனக் கூறிவிட்டு பகவான் பாபா தமது 14வது வயதில் வீட்டை விட்டு வெளியேறிய 1937ம் ஆண்டு முதல் சாயியின் தெய்வீகப் பணிகள் ஆரம்பமாயின. 1967ம் ஆண்டுகளில் இருந்து இலங்கையில் சுவாமியின் சேவைப்பணிகள் செயற்பட-த்துவங்கின. 1990களில் எமது இல்லத்தில் சாயி அடியார்கள் கூடி ஞாயிறுதோறும் பஜனை நடாத்த ஆரம்பித்தோம். 1992ம் ஆண்டு சுவாமியின் ஆசிகள் விபூதி வருகையாக அறியப்பட்டதை அடுத்து வித்தியாலய வீதியில் சாயி சகோதரர் திரு த.பாலசுப்பிரமணியம் அவர்கள் இல்லமேல் மாடியில் முறைப்படி அனுமதி பெற்று 01.11.1992முதல் சாயி சேவா நிலையம் செயற்பட ஆரம்பித்தது.

வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தன் சுவாமியின் சேவைப்பணிகளை கேள்வியுற்று நிலையத்தோடு இணைந்து நடமாடும் இலவச வைத்திய முகாம்கள் பரமானந்த ஆச்சிரம நாராயணசேவை என்பவற்றை முன் எடுத்தார். பேராசிரியர் நா.ஞானகுமரன் அவர்கள் கல்வி வட்டங்களை ஏற்று நடாத்தினார். வங்கியாளர் இ.ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் வாராந்த சொற்பொழிவுகளை

நிகழ்த்தினார். அங்கத்தவர் தொகை 50க்கு மேற்பட இருந்தது. பேராசிரியர் நந்தி அவர்களாலும் வடபிராந்திய தலைவர் சிவஞானம் ஐயா அவர்களாலும் பாலவிகாஸ் குருமார்கட்கு வடபிராந்திய ரீதியில் கருத்தரங்குகள் இங்கு நடாத்தப்பட்டன. பாலாவிகாஸ் வகுப்புக்கள் வெள்ளி தோறும் நடாத்தப்பட்டன. செல்வி.த.பத்மாசனி வகுப்புகட்கு பொறுப்பேற்றார். 30 மாணவர்கள் வரை வகுப்புகளில் பங்கேற்றனர்.

சாயி நிலையத்தை அடிக்கடி இடமாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டதால் நாச்சிமார் ஆலய வீதியில் வைத்திய கலாநிதி அமரர் க.கனகசபாபதி ஞாபகமாக பெறப்பட்ட காணியில் 18.11.2007ல் புதிய நிலையக் கட்டிடமான "சாயிகுடில்" வடபிராந்திய தலைவர் திரு. இ.வசந்தசேனனால் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து நிலையம் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

சாயி நிலைய வரலாறு "சாயி உடன் எமது இனிய காலம்" என்னும் பெயரில் என்னால் எழுதப்பட்டு 2011ல் வெளியிடப்பட்டது.



**********

# மடங்கள்

**சை**வப் பண்பாடு பேணப்படுவதற்கு மடங்களின் பங்களிப்பும் முக்கியமானதாக இருந்துள்ளது. அவை ஆன்மீகத்தையும் வாழ்வையும் இணைத்து தமிழ் வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் சமூகப் பணிகட்கும் நிலைக்களனாக இருந்துள்ளன.

இலங்கையில் சைவசமயமும் பண்பாடும் பாதுகாக்கப்படுவதற்கு பெரிதும் உழைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் "மடமாவது பெய்ரிவர்கள் தங்கியிருந்து கல்வி அறிவையும் ஒழுக்கத்தையும் சமயத்தையும் வளர்த்தற்குரிய இடம்" என வரைவிலக்கணம் தந்துள்ளார். நாவலர் பெருமானின் இக்கருத்தே யாழ்ப்பாணத்தின் கண் அமைந்துள்ள மடங்கட்கான பொருத்தமான விளக்கமும் ஆகும். இந்த மடங்களின் மற்றோர் அம்சமாக "மடாலயங்கள்" அமைந்திருப்பதையும் நாம் நோக்கலாம். ஆகம விதிகட்கு உட்படாத வழிபாட்டுத் தலங்கள் மடாலயங்களாக விளங்குவதோடு அடியார்களின் நேரடி வழிபாட்டிற்கு ஏற்ற இடங்களாகவும் அமைந்து விடுகின்றன.

சைவத்தின் வளர்ச்சிப் பாதையின் ஆரம்பத்தில் இருந்தே மடங்களின் பணியையும் நாம் காணக் கூடியதாக உள்ளது. திருமூலர் காலத்திலேயே சைவத்திருமடங்கள் அமைத்து சமயப் பணி புரிந்துள்ளதையும் காண முடிகின்றது. சமய குரவர் பெயர்களால் அடியார்கள் மடமமைத்து தண்ணீர்ப் பந்தல்களும் நடத்தினர். இதன் தொடராகவே எமதூரிலும் பல மடங்கள் அமைத்து அருந்தொண்டாற்றியமையை நாம் அறிய முடிகின்றது.

கடற்கரை ஓரமாக அமைந்த ஆனைக்குட்டி மடம் கேணியடி மடம் பெரியகாட்டு மடம் என்பவற்றை நாம் நோக்கலாம். இம்மூன்று மடங்களும் மாவிட்டபுரம் சப்பறம், தேர் கீரிமலைத் தீர்த்தம், வல்லிபுரக்கோயில் தேர் தீர்த்தம் போன்றவற்றிற்கு செல்வோர்க்கு கால் ஆறவும் ஓய்வு கொள்ளவும் தாக சாந்திக்கும் நெடுங்காலம் பயன்பட்டு வந்துள்ளன.

**********

# ஸ்ரீ ஆறுமுக விலாசம்

இப் பெயரால் அமைந்த பெரியகாட்டு மடம் (பூச்சியந்தெணி) 30.10.1893ல் கந்தப்பர் ஆழ்வார் ஆறுமுகம் அவர்களால் அத்திவாரமிடப்பட்டு அமைக்கப்பட்டது. பருத்தித்துறையில் இருந்து பாய்கப்பல் மூலம் திருகோணமலை சென்று வர்த்தகம் செய்தோரின் முன்னோடிகளில் ஒருவரான இவர் தாம் ஈட்டிய செல்வத்தை மக்கள் பயன்பெற உதவ வேண்டும் எனும் விருப்பின் காரணமாக இம்மடத்தை அமைத்தார் என்பர் பெரியோர்கள்.

இம்மடத்தில் ஸ்ரீ.ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை அவர்கள் 1900ஆண்டு முதல் 1930வரை இங்கு வாழ்ந்து ஓர் நூல் நிலையத்தையும் சிவஞானப் பிரகாச சபையையும் நடாத்தி வந்தார். இங்கு பல அறிஞர்கள் கூடி சமய வளர்ச்சிக்காக உழைத்ததோடு பிரசுரங்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளனர். 1955ம் ஆண்டு வரையில் மடம் மூடப்பட்டது. நூல் நிலையமும் சிவஞானப்பிரகாச சபையும் மனேச்சர் இல்லத்திற்கு இடம் மாற்றப்பட்டது. 1937முதல் வீரபத்திரரின் தீர்த்த மடமாகவும் இது செயற்பட்டு வருகின்ற போதிலும் நாட்டு நிலைமைகளால் மடம் சிதலமடைந்து விட்டது.

# ஆனைக்குட்டி மடம்

**வெ**ற்றிவேலர் அவர்களால் ஆணைக்குட்டி மடமும் வீடும் கட்டப்பட்டு 04.04.1903ம் ஆண்டு முதல் மடம் இயங்க ஆரம்பித்தது. வழிப்போக்கர்கள் அங்கு தங்கிச் செல்லக் கூடியதாகவும் அது இருந்தது. வெற்றிவேலரின் பின் அவர் மகன் சின்னையாவால் மடம் பராமரிக்கப்பட்டு வந்தது. சின்னையா அவர்கள் 1943ல் காலமாக மடப்பணிகள் தடைப்பட்டு அது வீடாக செயற்பட்டது.

# கேணியடி மடம்

**க**ற்பூர விநாயகர் ஆலய மணியம் ஆக இருந்த அம்பலவாணர் சின்னத்தம்பியார் அவர்களால் வழிப்போக்கர்கள் நீராடவும் தங்கிச் செல்லவும் ஏற்றதாக மடமும் கேணியும் அமைக்கப்பட்டது. சின்னத்தம்பியார் சரவணமுத்து அவர்கள் மடத்திலிருந்தவாறு சித்திவிநாயகர் ஆலய கார்த்திகை தீபத்தை பார்த்தவாறு 28.11.1906ல் இறையடி எய்தினார்கள் அவர் வியாபாரிமூலை கடற்கரை சந்திக்கருகே அமைந்த அவரது காணியில் சமாதிவைக்கப்பட்டார். சித்ததம்பியாரின் பின் அவர் மகன் சரவணா முத்துவாலும் மகள் சின்னப்பிள்ளையாலும் பராமரிக்கப்பட்ட இம்மடம் 30.09.1917ல் சரவணமுத்து சிவசம்பு அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

மடம் இயங்காத நிலை ஏற்பட்ட போது சிறிதுகாலம் சங்கக்கடை ஒன்றும் இங்கு இயங்கியது.

# அருள் மடாலயம்

திரு கந்தயினார் அருணாசலம் அவர்கள் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக 1922ல் அருள் மடாலயத்தை அமைத்தார். தமது மடாலயத்தில் அமைந்த முருகன் விநாயகரை பார்த்தவாறு அமைய வேண்டும் என விருப்பம் கொண்டு மேற்குப் பார்த்தவாயிலாக மடாலயத்தை அமைத்தார். மடத்தின் பிரதான வாயில் இந்து மத கட்டிட அமைப்பில் நின்றும் வேறுபட்டதாக அமைந்திருந்தது.

மடத்தில் பல தர்மப் பணிகளும் நடக்க வேண்டும் என விரும்பி வாசிகசாலை, இலவச வைத்திய நிலையம் அன்னதானப்பணி என்பவற்றை இங்கே நடாத்தி வந்தார். 1935ம் ஆண்டில் வாசிகசாலைப் பணி செயலிழந்த போதிலும் வருடாந்த மகோற்சவ காலத்தில் அன்னதானப் பணி அடியார்களால் மேற்கொள்ளப்படுவதுடன், 2016ம் ஆண்டில் மடப்புனரமைப்புப் பணிகளை கந்தயினார் பாலதாசன் அவர்கள் மேற்கொண்டார்கள்.




# கந்தஷஷ்டி மடம்

கந்தஷஷ்டி மடம் எனப்படும் கறுத்தார் மடம் வியாபாரி மூலை வித்தியாலய வீதியில் செயற்பட்டு வந்தது. அரை நூற்றாண்டு காலம் இங்கு புராணப்படிப்பும் கந்தஷஷ்டி விரதமும் சிறப்பாக இடம்பெற்று வந்தன. விரதகாரர் அங்கு சென்று தங்கி இருந்து விரதம் தோற்றனர். 1955ம் ஆண்டு வரையில் இதன் செயற்பாடு இடம் பெற்றது.

# தீர்த்தமடம்

"தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலதாறு ஓம்பல் தலை" என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப திரு.ஆ.சிதம்பரப்பிள்ளை அவர்களால் கடற்கரையில் தம் இல்லத்தோடு மடமும் அமைத்து அதனை பராமரித்து வந்ததுடன் சமுத்திர தீர்த்தத்திற்காக கடற்கரை ஓரமாக தீர்த்த மடமும் அந்தியேட்டி மடமும் அமைத்து பராமரித்து வந்தார்கள். அவரின் பின்னர் அவர் மகன் சி.மகாதேவன்பிள்ளை அவர்களால் மடப்பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. சித்திவிநாயகர், மாயக்கப் பிள்ளையார், முத்துமாரி அம்மன் போன்ற ஆலயங்களின் தீர்த்தோற்சவம் இங்கே இடம்பெற்று வருகின்றது. 2004ம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமி பேரலை பெரிய அழிவினை மடத்திற்கு ஏற்படுத்திய போதிலும் புனருத்தாரணத்தின் பின் திரு.ம.கயானந்தனால் இவ்விரு மடங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றது.



நினைவுக்கல்

# தரும மடம்


**பெ**ரியவர் எனும் சிறப்பு பெயரை பெற்றிருந்த நிலக்கிழாரான ஆறுமுகம் வேலுப்பிள்ளையும் அவர் மகன் சரவணமுத்துவுமாக 1905ம் ஆண்டுகளில் ஐந்து அறைகளுடன் கூடிய பெரிய மடம் ஒன்றை ஆலய ஈசானமூலையில் அமைத்தனர். ஆலய பணியாளரும் வழிப்போக்கர்களும் இங்கு தங்கியிருந்தனர். காலப்போக்கில் இம்மடம் கைவிடப்பட்டது.

# வீரபத்திரர் ஆலய மடம்

**வீ**ரபத்திரர் ஆலயத்தின் இரண்டாம் வீதியில் வடக்குப் புறமாக ஓர் மடம் குமாரர் வெற்றிவேலு அவர்களால் 1903ம் ஆண்டுகளில் அமைக்கப்பட்டது. இம்மடம் அன்னதானப் பணிகட்கு போதியதாக அமையாமையால் அருளம்பல சுவாமிகள் ஆலயத்தின் முன்பாக பெரியதோர் மடம் அமைக்கும் பணி 1942களில் ஆரம்பமான போதிலும் அது நிறைவேறவில்லை. முன்னைய மடமும் திருவிழா தடைப்பட்டிருந்த 1971ம் ஆண்டுகளை அடுத்து செயலிழந்தது.

திருவிழாக்களின் போது அடியார்க்கு அன்னதானம் வழங்க ஓர் மடம் தேவை என உணரப்பட்ட போது ஆலயத்துடன் இணைந்தவாறு 2013ல் அன்னதான மடம் அமைக்கப்பட்டது.

# மேலைப்புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலை



வியாபாரி மூலையில் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இயங்கி வந்த காலப்பகுதியை அடுத்து சைவமும் தமிழும் சிறப்புற வளர்க்கப்பட வேண்டும் எனும் நோக்குடன் மேற்படி பாடசாலை ஆரம்பமானது.

மனேஜர் ஆ.ஆறுமுகம் அவர் மாமன் வெ.சரவணமுத்து மைத்துனர் சு.சபாபதிப்பிள்ளை, வா.கணபதிப்பிள்ளை என்போரால் பாடசாலை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு "கொள்வளை" எனும் ஒரு பரப்பு நிலத்தை வா.கணபதிப்பிள்ளை வழங்கினார். 1875ம் ஆண்டு ஆவணிமாத அவிட்ட நட்சத்திர சுபதினத்தில் 05.09.1875ல் பாடசாலைக்கான அத்திவாரமிடப்பட்டது. நிலப்பற்றாக்குறையை உணர்ந்து வெ.சரவணமுத்து அவர்களும் நிலம் வழங்கினார்.

முதலாவது தலைமை ஆசிரியராக சிவ.சு.கணபதிக் குருக்கள் பணியாற்றினார். அவருக்குப் பின் முறையே

திரு.அ.வெற்றிவேலு

திரு.வ.ஆழ்வாப்பிள்ளை



திரு.மா.சுப்பிரமணியம் அவர்கள்

| | |
|---|---|
| திரு.க.சுப்பிரமணியபிள்ளை | |
| திரு.சி.கணபதிப்பிள்ளை | |
| திரு.க.ஆறுமுகம் | |
| திரு.வ.வீரகத்தி | |
| திரு.க.வல்லிபுரம் | |
| திரு.ஆ.ஆறுமுகம் | |
| திரு.வே.விசாகர் | |
| திரு.மா.சுப்பிரமணியம் | 1934 - 1974 |
| திரு.மூ.பொன்னையா | 1974 - 1975 |
| திரு.தி.சதாசிவம் | 1975 - 1983 |
| திரு.சி.இராமந்நாதன் | |
| திரு.ந.சிவபாதசுந்தரம் | |
| திரு.ந.பரமானந்தம் | |
| திரு.வே.அம்பலவாணர் | |
| திரு.ம.மகேஜ்வரராசா | 2001 - 2006 |
| திரு.க.மு.கனகலிங்கம் | 2006 - 2011 |

ஆசிரியர் அதிபர்களாக செயற்பட்டனர். தற்போது பொ.பொன்னம்பலம் அதிபராக உள்ளார்.

மனேசர் ஆழ்வார் ஆறுமுகம் காலமாக தந்தையாருடன் சேர்ந்து பாடசாலை நிர்வாக விடயங்களை கவனித்து வந்த ஆ.சிதம்பரப்பிள்ளை அவர்கள் பாடசாலை மனேச்சராக செயற்பட ஆரம்பித்தார். 1884ம் ஆண்டுகளில் பாடசாலையை நடாத்த நிதிப்பற்றாக்குறை ஏற்பட்ட போது தம் குடும்பத்தாரின் நிதியையே பாடசாலை வளர்ச்சிக்காக செலவிட்டார். 1892முதல் அரசாங்க நிதியும் கிடைக்க ஆரம்பித்தது. தந்தையாரிடம் பயிற்சி பெற்று ஆ.சி.நாகலிங்கம் பிள்ளையும் பாடசாலை நிர்வாகத்தை திறம்பட நடாத்தினார்கள்.

பாடசாலையின் ஆரம்பகால கட்டடங்களை படத்தில் காணலாம். புதிய கட்டட தேவை ஏற்பட்ட போது வே.தா.சி.சிவகுருநாதன் தமது 5000 நிதியுடன் "மேலைப்புலோலி வித்தியா தரும நிதி" எனும் அமைப்பின் பின் ஊடாக புதிய கட்டடம் அமைய முயற்சி எடுத்தார். மனேச்சர் ஆ.சி.நாகலிங்கம்பிள்ளை, திரு.வ.சபாபதிப்பிள்ளை ஆசிரியர் ஆகியோரும் ஊர் மக்களும் உதவி வழங்க புதிய கட்டடம் 1955தை மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது. இதனை அடுத்து பாடசாலைக்கான இரண்டாவது கட்டிடம் 1969ல் திறந்து வைக்கப்பட்டது.



## மேலைப்புலோலி சைவத்தமிழ் பாலிகா பாடசாலை


இலங்கையில் சைவத்தமிழ் பெண்களுக்கு என அமைக்கப்பட்ட முதலாவது பாலிகா பாடசாலை இதுவாகும். 1894ம் ஆண்டு மனேச்சர் ஆ.சிதம்பரப்பிள்ளை அவர்களால் தனியாக இது அமைக்கப்பட்டது 1945ம் ஆண்டிலிருந்து தாம் படித்த இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றியவர் பாக்கியக்கா எனும் திருமதி பாக்கியம் முருகேசு அவர்களாகும். பொன்னம்மா அக்கா, கனகம்மா அக்கா, நல்லம்மா அக்கா எனப்பல ஆசிரியைகளின் ஒத்துழைப்போடு அதிபராக 20

ஆண்டுகள் கடமையாற்றி 1965ம் ஆண்டு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலைக்கு மாற்றம் பெற்றுச் சென்றார். பாடசாலை "ட" வடிவ சுண்ணாம்புக் கட்டடத்திலேயே இயங்கி வந்த நிலையில் வித்தியா தரும நிதியும், அரச உதவியும், ஊர் மக்களின் பங்களிப்பும் பெற்று 1971ம் ஆண்டில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.

இரு பாடசாலைகளையும் இணைத்து நடத்துவதில் உள்ள நலன்களை கருத்தில் கொண்டு 1975ம் ஆண்டு முதல் ஒரே அதிபரின் கீழ் பாடசாலை 1ம், 2ம் வகுப்புக்கான இடமாக இயங்கி வருகின்றது. தற்போதைய மாணவர் தொகை 280, ஆசிரியர்கள் 13 ஆகும்.


புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியோர் தொகை.

| ஆண்டு | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சித்தி பெற்றோர் | 14 | 12 | 06 | 08 | 12 | 13 | 10 | 16 | 13 | 11 | 06 | 14 |



**********

# முன்பள்ளி



தாயின் அரவணைப்பில் அன்பையும், அறிவையும் பெறும் குழந்தை மூன்று வயதாகும் போது கல்வியில் ஆர்வம் பெற பாலர் கல்விக் கூடத்தை அடைந்து ஐந்தாம் வயது வரை அழகியல் ஆக்கம் சுகாதாரம் நல்லொழுக்கம் எண் எழுத்து என்பவற்றை அறிவதற்கு முன்பள்ளிகள் உதவுகின்றன.

கற்பூர விநாயகரின் மூன்றாம் வீதியாகவும் தோட்டமாகவும் இருந்த 7 பரப்பு காணி கலைமணி சனசமூக நிலையத்தின் காணி சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக 1965ம் ஆண்டில் தருமசாதனம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் விளையாட்டு மைதானமாகவும் பின்னர் தோட்டச் செய்கைக்காக குத்தகைக்கு விடப்பட்டு வந்தது. இக்காணியின் முன்புறமாக 1 1/2 பரப்பு வரையான நிலத்தில் அரசாங்க நிதி பெற்று 17.01.2010ல் முன்பள்ளி கட்டப்பட்டுள்ளது. 01.10.2015ல் அரச உதவி மூன்று லட்சம் பெற்று ஊரவர் உதவியுடன் சுற்று மதில் கட்டி முடிக்கப்பட்டது.

கலைமணி சனசமூக நிர்வாகத்தால் நடத்தப்படும் இப்பாடசாலையில் இரண்டு ஆசிரியைகளும் பதினைந்து மாணவர்களும் தற்போது உள்ளனர்.

**********

# தனியார் கல்வி

வியாபாரிமூலையில் தனியார் கல்வி நடவடிக்கைகள் பல இடம்பெற்று வருகின்றன. ஆரம்பத்தில் நல்லையா வாத்தியார் வீடுகளில் மாணவர்களை சேர்த்து வகுப்புக்கள் நடாத்தினார். V.T.S சிவப்பிரகாசம் ஆசிரியர் ஆங்கில வகுப்புக்களை நடாத்தினார். பெரும்பாலும் கட்டணம் இன்றி இவை நடாத்தப்பட்டன.

பெயர் சூட்டப்பட்ட கல்வி நிலையமாக சகுந்தலாதேவி இந்திராதேவி சகோதரிகளால் "கணிபதி பாலர் கல்வி நிலையம்" 1976ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து நடந்தும் வருகின்றது. தற்போது 15 பிள்ளைகள் வரை இவர்களிடம் கல்வி கற்கின்றார்கள். 1974ல் அமரர் பாலசுந்தரம் அசோகனால் புதிய கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதுடன் பிரபல ஆசிரியர்கள் பலரும் அங்கு கற்பித்தனர். வாணி விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அசோகன் நோய் வாய்ப்பட்டதை அடுத்து இயங்காது போன கல்வி நிலையத்தை சி.க.சிவசுந்தரமும் பா.நாகநாதனுமாக க.பொ.த (உயர்தரம்) வரை உள்ள கல்வி நிலையமாக சில ஆண்டுகள் நடத்தினர்.

5ம் வகுப்புவரை உள்ள பிள்ளைகளுக்காக க.ஈஸ்வரபாதம் குடும்பத்தவரால் வசந்தம் கல்வி நிலையம் கடந்த பத்தாண்டுகளாக இயங்கி வருவதுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளையும் பெற்று வருகின்றது.

5ம் வகுப்பு வரையான கல்விக்காக இ.கோணேஸ்வரனால் ஒக்ஸ்பேட் கல்வி நிலையம் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றது.

செல்விகள் செ.சாந்தா, செ.வசந்தா ஆகியோரால் சிறுவர்களுக்காக 30 ஆண்டுகளாக தமது இல்லத்தில் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. அறிவொளி கல்வி நிலையம் 6ம் ஆண்டு முதல் க.பொ.த (சாதாரணம்) வரைக்குமாக 2006ம் ஆண்டு முதல் நடாத்தப்பட்டு வருகின்றது. பல ஊர்களையும் சேர்ந்த 350 மாணவர்கள் கற்று வருவதுடன் க.பொ.த (சாதாரண தரத்தில்) நல்ல பெறுபேறுகளையும் பெற்று வருகின்றனர். இவர்கட்காக இலவச சுற்றுலாக்களும் வாணிவிழாவும் நடாத்தப்பட்டும் வருகின்றது.

ப.நாகநாதன், சி.வர்ணகுலசிங்கம், க.கலாகரன், க.பிரபாகரன் போன்ற முன்னனி ஆசிரியர்கள் தம் துறை சார்ந்த வகுப்புக்களையும் பல்லாண்டுகள் ஊரில் நடாத்தினர். குமுக்கேசன் திருமதி ஜெ.சாந்தகௌரி, தி.ஸ்ரீதரன், கோபி சேர் போன்றோர் தமது துறைசார்ந்த பாடங்களை தமது இல்லங்களில் நடாத்தி வருகின்றனர். சிறுவர்கட்காக வேறு பலரும் வகுப்புக்களை நடாத்தி வருவதையும் காண முடிகின்றது.



# சிவஞானப் பிரகாசசபை

அந்நிய நாட்டவர் ஆதிக்கத்தின் கீழ் அகப்பட்டிருந்த மக்கள் மதமாற்றம் கலாச்சார மாற்றம் என்பவற்றின் பிடிக்குள் அகப்பட்டு தத்தளித்த வேளை ஆறுமுகநாவலர் வருகை மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள்

"நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே..."

எனக் கூறியது போல் தமிழ் சமய பண்பாட்டு மறுமலர்ச்சிக்காக உழைத்த சபைகளில் ஒன்றே மேலைப்புலோலி "சிவஞானப்பிரகாச சபை" ஆகும்.

சிவஞானப்பிரகாச சபைகள் தமிழகத்திலும் இலங்கையிலும் செயற்பட்டுள்ளன. இவற்றிற்கிடையேயான தொடர்புகளால் சபைகள் நல்லவிதமாக இயங்கவும் செய்தன. ஸ்ரீ ஆறுமுகவிலாசம் எனும் பூச்சியந்தேணி மடத்திலும் இச்சபையின் செயற்பாடுகள் இடம்பெற்றன. இந்திய சஞ்சிகைகள் வரவழைக்கப்பட்டு மக்கட்கு வாசிக்க கொடுக்கப்பட்டதுடன் பிரசுரங்களையும் இச்சபை வெளியிட்டது. சைவசமய சாத்திர போதனைகளை செய்வதற்காக சமய சொற்பொழிவுகள் இடம் பெற்றன. ஆலய கிரியைகள் பற்றியும் குருமார் பற்றியும் விவாதிக்கப்பட்டு வந்தன. வே.த.சுவாமிநாதர், வே.தா.செந்திவேற்பிள்ளை ஆகியோர் மனேச்சர் ஸ்ரீ.ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை அவர்கட்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டனர். மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை பரிசளிப்பு விழாவையும் 1884முதல் 1980வரையான ஒரு நூற்றாண்டுக்காலம் நவராத்திரிக் காலங்களில் இச்சபை நடாத்தி

வந்தது. மதம் மாறுவோர்க்கெதிராகவும் இச்சபை செயற்பட்டதை அறிய முடிகின்றது.

ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை அவர்கள், ஆ.சி.நாகலிங்கம் பிள்ளை அவர்கள், ஆ.சி.நா சொக்கநாத பிள்ளை அவர்களாலும் சபை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாண தமிழ்ச்சங்க அங்கத்தவர் பலரும் இச்சபையுடன் தொடர்புகளை பேணி வந்தனர்.

இச்சபை 1884ம் ஆண்டு முதல் 1980ம் ஆண்டு வரை செயற்பட்டு வந்துள்ளது.


வித்துவசபையைச் சேர்ந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| க | ஸ்ரீ பொ. | அருணாசலமவர்கள் |
| உ | ,, ச. | பண்டிதர் சிவப்பிரகாசபிள்ளையவர்கள் |
| ங | ,, சி. | [illegible] |
| ச | ,, சி. | கைலாசபிள்ளையவர்கள் |
| ரு | ,, ஆ. | முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் |
| சா | ,, அ. | குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் |
| எ | ,, சி. | தாமோதரம்பிள்ளையவர்கள் |
| அ | ,, மு. | [illegible] |
| கூ | ,, அ. | அருணாசலஐயரவர்கள் |
| க0 | ,, வி. | கந்தப்பிள்ளையவர்கள் |
| கக | ,, ஆ. | ஆறுமுகப்பிள்ளையவர்கள் |
| கஉ | ,, ஆ. ஆ. | சிதம்பரப்பிள்ளையவர்கள் |
| கங | ,, பொ. | கதிர்காமப்பிள்ளையவர்கள் |
| கச | ,, ந. | சோமசுந்தரக்குருக்களவர்கள் |
| கரு | ,, இ. | அம்பிகைபதி ஐயரவர்கள் |
| கசா | ,, ஆ. | இராமலிங்கச் செட்டியாரவர்கள் |
| கஎ | ,, சு. | சரவணமுத்துப்பிள்ளையவர்கள் |
| கஅ | ,, செ. | சாம்பசிவ ஐயரவர்கள் |
| ககூ | ,, வி. | சிவக்கொழுந்துப்பிள்ளையவர்கள் |
| உ0 | ,, ம. த. | வேற்பிள்ளையவர்கள் |
| உக | ,, ப. | [illegible] ஐயரவர்கள் |
| உஉ | ,, ம. | வைத்தியலிங்கப்பிள்ளையவர்கள் |
| உங | ,, வி. | வேலுப்பிள்ளையவர்கள் |
| உச | ,, வை. | குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் |
| உரு | ,, சு. | கதிரவேற்பிள்ளையவர்கள் |

[illegible]

**********

உ

சிவமயம்



# பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும்

நிகழும் சோபகிருது வருஷம் புரட்டாதி மீ 20 உ (6-10-63) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு

## இம்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய

வெளிமண்டபத்தில்

பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நிகழும்

பேச்சாளர்

## தொண்டர் S. கனகநாயகம் அவர்கள்

பொன்மணிகள் நிகழ்ச்சிகளை நடாத்துவதால் யாவரும் நேரத்தோடு சமூகமளித்து பிற்பகல் 5-30 மணிக்கே வர வேண்டுகின்றோம்.

முக்கிய கவனிப்பு:— ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணிக்கு சிறுவர்களுக்கு போதனா வகுப்பு நடைபெறும்.

இங்ஙனம்


வியாபாரிமூலை

**சன சமூக நிலையத்தினர்.**

# கலைமணி சனசமூக நிலையம்

| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1949 | வே. தா. சிவகுருநாதன் | செ. மார்க்கண்டு | வே. சிவஞானப்பிரகாசம் |
| 1950 | பொன். கிருஷ்ணபிள்ளை | வே. சிவஞானப்பிரகாசம் | கா. மு. கதிரவேற்பிள்ளை |
| 1951 | பொன். கிருஷ்ணபிள்ளை | வே. சிவஞானப்பிரகாசம் | கா. மு. கதிரவேற்பிள்ளை |
| 1952 | க. பாலகிருஷ்ணர் | த. ப. த. பரமகுருநாதர் | தி. சதாசிவம் |
| 1953 | வே. சிவக்கொழுந்து | சி. நாகலிங்கபிள்ளை | ஆ. சிதம்பரப்பிள்ளை |
| 1954 | தி. வரதகணபதிப்பிள்ளை | இ. சீவரத்தினம் | தி. சதாசிவம் |
| 1955 | தி. வரதகணபதிப்பிள்ளை | சு. க. கதிர்காமத்தம்பி | நா. கணபதிப்பிள்ளை |
| 1956 | தி. வரதகணபதிப்பிள்ளை | சு. க. கதிர்காமத்தம்பி | நா. கணபதிப்பிள்ளை |
| 1957 | மு. இரத்தினசபாபதி | சு. க. கதிர்காமத்தம்பி | நா. கணபதிப்பிள்ளை |
| 1958 | மு. இரத்தினசபாபதி | வே. சிவக்கொழுந்து | மு. க. தர்மலிங்கம் |
| 1959 | சு. பெ. ச. மயில்வாகனம் | ஆ. சி. முருகுப்பிள்ளை | வே. க. கந்தையா |
| 1960 | சு. பெ. ச. மயில்வாகனம் | ஆ. சி. முருகுப்பிள்ளை | வே. க. கந்தையா |
| 1961 | மு. சு. கதிர்காமத்தம்பி | வை. கா. சிவப்பிரகாசம் | ஆ. சி. முருகுப்பிள்ளை |
| 1962 | மு. சு. கதிர்காமத்தம்பி | வை. கா. சிவப்பிரகாசம் | ஆ. சி. முருகுப்பிள்ளை |
| 1963 | மு. சு. கதிர்காமத்தம்பி | வை. கா. சிவப்பிரகாசம் | ஆ. சி. முருகுப்பிள்ளை |
| 1964 | இ. க. வயித்திலிங்கம் | சி. கண்ணன் | ஆ. சி. முருகுப்பிள்ளை |
| 1965 | இ. க. வயித்திலிங்கம் | சி. கண்ணன் | ஆ. சி. முருகுப்பிள்ளை |
| 1966 | தி. வரதகணபதிப்பிள்ளை | ஆ. சி. முருகுப்பிள்ளை | வே. க. கந்தையா |
| 1967 | தி. வரதகணபதிப்பிள்ளை | ஆ. சி. முருகுப்பிள்ளை | வே. க. கந்தையா |
| 1968 | சு. சோமாஸ்கந்தர் | அ. க. நடராஜா | கா. மு. காசிவிசுவநாதர் |
| 1969 | ஆ. சி. மகாதேவன்பிள்ளை | அ. சோமாஸ்கந்தர் | செ. சிவராஜசிங்கம் |
| 1970 | ஆ. சி. மகாதேவன்பிள்ளை | அ. சோமாஸ்கந்தர் | செ. சிவராஜசிங்கம் |
| 1971 | வை. க. சிவப்பிரகாசம் | தி. சதாசிவம் | ஆ. சி. மகாதேவன்பிள்ளை |
| 1972 | வை. க. சிவப்பிரகாசம் | தி. சதாசிவம் | ஆ. சி. மகாதேவன்பிள்ளை |
| 1973 | ஆ. சி. மகாதேவன்பிள்ளை | க. கந்தசோதி | அ. க. நடராஜா |
| 1974 | ஆ. சி. மகாதேவன்பிள்ளை | க. கந்தசோதி | ஆ. சிவஞானசுந்தரம் |
| 1975 | சு. பெ. மு. கனகசபாபதி | கி. சிவநேசன் | ஆ. சிவஞானசுந்தரம் + வ. குகநேசன் |
| 1976 | ஆ. சி. மகாதேவன்பிள்ளை | தி. சதாசிவம் | வ. குகநேசன் |
| 1977 | ஆ. சி. மகாதேவன்பிள்ளை | சி. வர்ணகுலசிங்கம் | சி. நா. சொக்கநாதபிள்ளை |
| 1978 | ஆ. சி. மகாதேவன்பிள்ளை | சி. வர்ணகுலசிங்கம் | சி. நா. சொக்கநாதபிள்ளை |
| 1979 | ஆ. க. சிவப்பிரகாசம் | ஆ. சி. மு. விக்கினேஸ்வரன் | செ. சிவராஜசிங்கம் |
| 1980 | ஆ. க. சிவப்பிரகாசம் | சோ. சிற்சபேசன் | சி. சிவகுலசிங்கம் |
| 1981 | செ. சிவப்பிரகாசம் | சி. விவேகானந்தன் | மா. கிருஷ்ணசாமி |
| 1982 | ஆ. க. நடராசா | க. கதிரமலை | மா. கிருஷ்ணசாமி |
| 1983 | ஆ. க. நடராசா | மு. மயில்வாகனம் | மா. கிருஷ்ணசாமி |


| ஆண்டு | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 1984 | ஆ.க.நடராசா | சு.சற்குணராசா | மா.கிருஷ்ணசாமி |
| 1985 | ஆ.க.நடராசா | ஆ.சி.வாசுவேதன் | மா.கிருஷ்ணசாமி |
| 1986 | ஆ.சி.முருகுப்பிள்ளை | ஆ.சி.வாசுதேவன் | க.பிரபாகரன் |
| 1987 | சு.சற்குணராசா | க.கலாகரன் | க.பிரபாகரன் |
| 1988 | சு.சற்குணராசா | க.கலாகரன் | க.பிரபாகரன் |
| 1989 | சு.சற்குணராசா | க.கலாகரன் | க.பிரபாகரன் |
| 1990 | ஆ.க.நடராசா | சு.சுரேஸ்குமார் | மா.கிருஷ்ணசாமி |
| 1991 | ஆ.க.நடராசா | கி.சிவநேசன் | ம.சிவநாதன் |
| 1992 | கி.சிவநேசன் | வீ.சிவபாலன் | பொ.தெய்வசிகாமணி |
| 1993 | கி.சிவநேசன் | வீ.சிவபாலன் | பொ.தெய்வசிகாமணி |
| 1994 | கி.சிவநேசன் | வீ.சிவபாலன் | கி.பகிரதன் |
| 1995 | கி.சிவநேசன் | கி.பகிரதன் | வீ.சிவபாலன் |
| 1996 | இ.மகேந்திரன் | ச.நந்தகுமார் | செ.புவனேஸ்வரன் |
| 1997 | இ.மகேந்திரன் | ச.நந்தகுமார் | செ.புவனேஸ்வரன் |
| 1998 | ந.பரமானந்தம் | செ.கணேசரத்தினம் | க.ஈஸ்வரபாதம் |
| 1999 | மு.விக்கினேஸ்வரன் | இ.ராதாகுமார் | க.ஈஸ்வரபாதம் |
| 2000 | க.ஈஸ்வரபாதம் | க.ஞானாகரன் | இ.பகிரதன் |
| 2001 | க.ஈஸ்வரபாதம் | க.ஞானாகரன் | மு.விக்கினேஸ்வரன் |
| 2002 | க.ஈஸ்வரபாதம் | க.ஞானாகரன் | த.மயூரன் |
| 2003 | இ.கோபிகிருஷ்ணா | ஆ.ஸ்ரீபாஸ்கரன் | சி.பிரசாத் |
| 2004 | ஆ.பாஸ்கரன் | இ.கோபிகிருஷ்ணா | க.குணதரன் |
| 2005 | ஆ.பாஸ்கரன் | இ.கோபிகிருஷ்ணா | க.குணதரன் |
| 2006 | ஜெ.பிரதீபன் | இ.கோபிகிருஷ்ணா | க.குணதரன் |
| 2007 | க.ஈஸ்வரபாதம் | மு.அழகக்கோன் | ம.சாம்பசிவம் |
| 2008 | க.ஈஸ்வரபாதம் | மு.அழகக்கோன் | ம.சாம்பசிவம் |
| 2009 | செ.ரகுநாதன் | இ.மகேந்திரன் | இ.மகிந்தன் |
| 2010 | க.குணதரன் | ஜெ.திரவராங்கள் | இ.மகிந்தன் |
| 2011 | க.குணதரன் | ஜெ.திரவராங்கள் | இ.மகிந்தன் |
| 2012 | க.குணதரன் | ஜெ.திரவராங்கள் | இ.மகிந்தன் |
| 2013 | ஆ.க.இரத்தினவடிவேல் | க.குணதரன் | செ.ரகுநாதன் |
| 2014 | க.கதிரமலை | சீ.ஐங்கரன் | க.ஈஸ்வரபாதம் |
| 2015 | க.கதிரமலை | சீ.ஐங்கரன் | க.ஈஸ்வரபாதம் |
| 2016 | க.கதிரமலை | ம.கார்த்திபன் | சி.ஜெயச்சந்திரன் |


வியாபாரிமூலை சனசமூக நிலைய
2-வது ஆண்டு விழா.

11-10-51

திரு. T. இராமலிங்கம் M. P.

1. பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை
2. திரு. மு. ஏரம்பமூர்த்தி ஆசிரியர்
"தமிழ் இன்பம்"
3. திரு. S. பஞ்சாசரம்
4. திரு. க. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர்


வியாபாரிமூலை
இளைஞர் சங்கம்.

சிறப்புச் சொற்பொழிவுகள்.

1943

# மாதர் சங்கம்

ஊரில் இயங்கி வந்த மாதர் சங்கம் நாட்டுப் பிரச்சினைகள் தீவிரப்பட்ட காலத்தில் இயங்க முடியாத நிலையை அடைந்தது. 1999ல் வியாபாரிமூலை மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம் மீள உருவாக்கப்பட்டது. தையல் இயந்திரங்கள் பெறப்பட்டு தையல் நிலையம் வியாபாரிமூலையிலும் பருத்தித்துறையிலும் ஆரம்பிக்கப் பட்டு ஆடைகள் தைத்து விற்கப்பட்டதுடன் கண்காட்சிகளும் நடாத்தப்பட்டது. சத்துமா பலகாரங்கள் என்பன உற்பத்தி செய்து விற்பனை செய்ததன் மூலமும் சங்கம் சமூகத்திற்கு தன்னை இனம் காட்டிக் கொண்டது. தொழில் நுட்பவியல் அமைச்சுடன் தொடர்பு கொண்டு கிராமத்தின் தொழில்நுட்பத்துறையை விருத்தி செய்யும் வகையிலான பயிற்சி நெறிகளில் பங்கேற்று மாதர் தொழில்துறை வளர்ச்சி பெறப்பட்டது. மூலிகை குடிநீர், சத்துமா, இலைக்கஞ்சி, மரக்கறிசூப் என்பன உற்பத்தி செய்து விற்கப்பட்டதால் நிதியும் சேகரிக்கப்பட்டது. மாதர் குழுக்கள் அமைத்தல் மூலம் சுழற்சி முறையான கடன் வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாதர் அங்கத்தவர் 120 மேற்பட்டோர் இணைந்ததால் நெக்டெப், ஊற்று போன்ற நிறுவனங்களின் உதவியும் கிடைக்கவே தக்காளி சோஸ், ஜாம் அல்வா போன்றவற்றை உற்பத்தி செய்து விற்பனை செய்யக் கூடியதாகவும் இருந்தது.

திரு.க.இரத்தினவடிவேல், திரு.க.சண்முகநாதன், திரு.க.சற்குருநாதன் ஆகியோர் அன்பளிப்பாக வழங்கிய 3 பரப்பு காணியில் 2007ம் ஆண்டில் 2.5மில்லியன் ரூபாவில் பொதுநோக்கு மண்டபம் உற்பத்தி நிலையம் நீர்தாங்கி சுற்றுமதில் மின்வசதி என்பன பெறப்பட்டதுடன் மா அரைக்கும் இயந்திரம் நூடில்ஸ் தயாரிக்கும் இயந்திரம் கேக் தயாரிக்கும் பொருட்கள் இதர உபகரணங்கள் தளபாடங்கள் என்பன பெறப்பட்டன. இவற்றிற்கு பொறுப்பாகவும் தலைவியாகவும் இருந்த அமரர் ஜெயமங்களம் கணேசரத்தினம் 2013ம் ஆண்டில் சிறந்த தலைவிக்கான விருதும் பெற்றார்.

# கமக்காரர் அமைப்பு

வியாபாரி மூலைப் பகுதி பயிர்ச்செய்கை நிலங்களை கொண்டுள்ளது. இங்கு பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வெங்காயச் செய்கையுடன் புகையிலையும் மரக்கறி வகைகளும் பயிரிடப்படுகின்றது. அம்பன் கமநலசேவை நிலையத்தின் உரக்களஞ்சியம் பிரதான வீதிக் கடை ஒன்றில் 05.02.1980முதல் பல ஆண்டுகளாக திரு.செ.சபாநாயகம் அவர்கள் பொறுப்பில் இயங்கி வந்ததை அடுத்து உரக்களஞ்சியம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் நிலம் கிடைக்காமையால் நாவலர் சனசமூக நிலையத்திற்கருகே 1987ம் ஆண்டு உரக்களஞ்சியமும் விற்பனை நிலைமும் அமைக்கப்பட்டது.

காணி ஒன்று கற்பூரவிநாயகர் அலயத்திற்கு அண்மையில் கிடைத்ததை அடுத்து அரசாங்க உதவியுடனும் விவசாயிகளின் பங்களிப்புடனும் வெளிநாட்டவர் உதவியுடனும் 2014ல் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. வியாபாரிமூலை கிராம சேவகர் பிரிவை செயற்பாட்டு எல்லையாக கொண்ட கமக்காரர் அமைப்பில் சுமார் 110 அங்கத்தவர் இணைந்துள்ளனர்.

உழவு யந்திரம், நீர் இறைக்கும் யந்திரம், மருந்தடிக்கும் கருவி என்பவற்றை விவசாயிகள் பயன்படுத்தக் கூடியதாக உள்ளதுடன் மானிய விலையில் மருந்து உரம் என்பவற்றை பெறுவதுடன் கடன்பெற்று விவசாயம் செய்யக் கூடியதாகவும் உள்ளது.

**********

பருத்தித்துறை தொகுதி அம்பன் [illegible] நல சேவை நிலையத்தின்
புலோலி மேற்கு, அல்வாய் வடக்கு பகுதிகளுக்கான
விவசாயப் பொருட்கள் விற்பனவு நிலைய கிளை

# திறப்பு விழாவும் கருத்தரங்கும்.

காலம்: 5-2-80 செவ்வாய்க்கிழமை பி. ப 4-30 மணி
இடம்: வியாபாரிமூலை சனசமூக நிலைய சந்திக்கு
அருகாமையில் உள்ள கட்டிடம்

தலைவர்: **திரு. ஆ. க. சிவப்பிரகாசம் அவர்கள்**
(தலைவர் சனசமூக நிலையம் வியாபாரிமூலை)

கிளையினை திறந்து வைப்பவர்:
**திரு. க. பரமலிங்கம் அவர்கள்**
(உதவி ஆணையாளர் கமநல சேவை நிலையங்கள் யாழ் மாவட்டம்)

பிரதம விருந்தினர்:
**திரு. க. துரைரத்தினம் அவர்கள்**
(பருத்தித்துறை [illegible] உறுப்பினர்)

வரவேற்புரை: திரு. செ. செல்வலிங்கம்
([illegible] அல்வாய் வடக்கு)

சிறப்புரைகள்:
திரு. மு. தம்பிமுத்து ([illegible] அம்பன் [illegible])
திரு. வை. வேலுமயிலும் ( .. பருத்தித்துறை)
திரு. எஸ். அரியரத்தினம் (இ. வங்கி முகாமையாளர் .. )
திரு. நா. சோமசுந்தரலிங்கம் (பா. விவசாய உதவி பணிப்பாளர்)
திரு. அன்ரூ யோசப் (விவசாய அதிகாரி)
திரு. பொ. இராமநாதன் ([illegible] பருத்தித்துறை)
திரு. க. சிவகுரு (பிராந்திய பணிப்பாளர் [illegible] காப்புறுதி)
திரு. இ. கபிலலிங்கம் (பெரும்பாக உத்தியோகத்தர் புலோலி)
திரு. க. செல்லத்துரை (விவசாய [illegible], [illegible] புலோலி மேற்கு)
திரு. ஆ.சி. ஆழ்வாப்பிள்ளை (விவசாய அம்பன் அல்வாய் வடக்கு)

கருத்தரங்கு: தலைவர் திரு. க. பரமலிங்கம் (உதவி ஆணையாளர் கமநல சேவை நிலையங்கள் யாழ் மாவட்டம்)

நன்றியுரை: திரு. க. சண்முகநாதன் ([illegible] ப.நோ.கூ.)

திறப்பு விழாவினைத் தொடர்ந்து நடைபெறும் விவசாயப் பொருட்கள் விற்பனையிலும் கலந்து கொள்ளுமாறு [illegible] அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பன்
திகதி: 31-1-80

க. பீதாம்பரம்
பெரும்பாக உத்தியோகத்தர் அம்பன்

குறிப்பு: விவசாயப் பொருட்கள் இந் நிலையத்திலிருந்து தங்களுக்குத் தேவையான இரசாயனங்கள், பசளைகள், விதைகள் ஆகிய யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
[illegible] வாடகைக்கு விடப்படும்.

ஜோதியன் அச்சகம் பருத்தித்துறை

# விநாயகர் தருமநிதியம்

திரு.ஆ.சி.முருகுப்பிள்ளை அவர்கள் தமது அரிசி ஆலையின் வருமானத்தைக் கொண்டு விநாயகர் தரும நிதியம் எனும் பெயரில் ஓர் தரும ஸ்தாபனத்தை 1985ம் ஆண்டுகளில் உருவாக்கி செயற்படுத்தினார். யுத்தகால நிலமையில் வறுமையில் வாடிய பலருக்கும் மாதாந்தம் அரிசி கொடுத்துதவி வந்தார். 1990 ஆண்டுகளில் விநாயகர் தரும நிதியத்தின் சார்பில் இலவச வெளியீடுகள் பலவற்றை அச்சிட்டு குடாநாடெங்கும் விநியோகம் செய்தார். திருக்குறள் பொழிப்புரையுடன் லட்சக்கணக்கில் அச்சிடப்பட்டு அனைத்துப் பாடசாலை மாணவர்கட்கும் வழங்கப்பட்டது. அதேபோல் அறத்தமிழ் அகராதியும் மாணவர்கட்கு பெருமளவில் வழங்கப்பட்டது. இவரது மூலிகை மருத்துவ நூலும் 7 பதிப்புகளாக 10,000 மேற்பட்ட பிரதிகளாக 1988முதல் 1992வரை அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது.

அறத்தமிழ் ஞானம் எனும் மாதாந்த இலவச சஞ்சிகை 1992 - 93ம் ஆண்டுகளில் வெளிவந்தது. இவை தவிர 1 கீதை அமுதசரம், 2 ஆத்ம சிந்தனை, 3 ஞானவாழ்வு மலர, 4 நீதிப்பொருள், 5 அறநெறிமணிகள், 6 பிரபஞ்ச தத்துவம், 7 தெய்வீகப்பண்பு, 8 சாரணர் கைநூல் எனப்பல நூற்களை வெளியீடு செய்தார்.

யுத்தகாலத்தில் காகித தட்டுப்பாடு காரணமாக இவரது வெளியீடுகள் யாவும் சாதாரண பயிற்சிக் கொப்பித்தாள்களிலேயே அச்சிடப்பட்டதால் அவை நிலைத்து நிற்கவும் இல்லை. ஸ்தாபகர்க்கு உடல் நலக்குறைவு ஏற்பட 1994ம் ஆண்டுகளில் தரும நிதியமும் செயலிழந்தது.

**********

# விளையாட்டுக்கழகம்

எமது ஊரில் நீண்டகாலமாக கரப்பந்தாட்டம் முக்கிய இடத்தை பெற்று வருகின்றது. இதன் நிதி சேகரிப்பினை நோக்காகக் கொண்டு பல சந்தர்ப்பங்களில் விளையாட்டுக் கழகமும் இயங்கி வந்துள்ளது. 1978ம் ஆண்டுகளில் பாலா அசோகனின் தூண் முதலில் உருவான Supper Heros கழகம் நாடகங்கள் பட்டிமன்றங்களில் கவனம் செலுத்தியதை அடுத்து நியூ லக்சி விளையாட்டுக்கழகம் உருவானது. சனசமூக நிலையத்துடன் இணைந்து செயற்படுவதில் உள்ள நலன்களை கருத்தில் கொண்டு கலைமணி விளையாட்டுக் கழகமாக பெயர்மாற்றம் பெற்றது.



தனியார் இல்லங்களில் இயங்கிய உடற்பயிற்சிகள் கழகத்திற்காக நிரந்தர கட்டடம் அமைய வேண்டும் என கருதியதால் எனது முயற்சியில் திரு.வே.தா.சி.சிவகுருநாதன் அவர்கள் இல்லவாயிலில் அமைந்த காணியை வீரபத்திரர் ஆலய திருப்பணிச்சபையின் உதவியுடன் பெற்று 28.09.2003ல் கிராமத்தின் நீண்டகாலத் தேவைகளை நிறைவேற்றும் முகமாக நிகழ்ந்த கிராம வளர்ச்சி விழாவின் போது இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.து.வைத்திலிங்கம் அவர்களால் விளையாட்டுக் கழகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதை அடுத்து அரசாங்க நிதி ஒரு லட்சம் பெற்று தூண்களும் கூரையும் அமைக்கப்பட்டது. இரண்டாம் கட்ட நிதி கிடைத்த போது அறைகளும் உருவானதால் உடற்பயிற்சிக் கூடமும் விளையாட்டுக் கழகமும் சிறப்பாக இயங்கி வருகின்றது.

# வியாபாரிமூலை கிராம அபிவிருத்திச் சங்கம்

கிராமாட்சி மன்றத்தாலும் அரசாங்கத்தாலும் விளம்பரப்படுத்தப்படும் ஒப்பந்த வேலைகளை கிராம அபிவிருத்திச் சங்கங்களே பொறுப்பெடுத்துச் செய்ய முடியும் எனும் நிலை ஏற்பட்ட போது 1979ம் ஆண்டு முதல் மேற்படி சங்கம் செயற்பட ஆரம்பித்ததுடன் சில ஒப்பந்தங்களை பெற்று வேலைத்திட்டங்களை முன் எடுத்தது. கிணறு புனரமைப்பு கான்வெட்டல் வீதி அமைப்பு போன்றவற்றுடன் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளையும் இது மேற்கொண்டது. 1983ம் ஆண்டு வரை இதன் செயற்பாடுகள் இடம்பெற்றன.

கிராம அபிவிருத்திச் சங்கத்தினால்

ஏற்படும்

## நன்மைகள் சில....

கிராம நலனில் அக்கறை கொண்டோர்களே!

வியாபாரிமூலை ஓர் கிராமமாக நம்மால் கருதப்பட்டு வந்துள்ள [illegible] சட்டரீதியாக இது ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட கிராம [illegible] நீங்கள் அறிவீர் [illegible]

★ இரு கிராமச் சங்கப் பிரதேசங்களில்
★ இரு அரசாங்க அதிபர் பிரிவுகளில்
★ இரு சுகாதார சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில்
★ நான்கு வட்டாரப் பிரிவுகளில்

என்று பிரிக்கப்பட்டிருக்கும் இன்றைய நிலையை மாற்றவும்.

1.) தனிக் கிராமம்
2.) செப்பனிட்ட மின்வசதி
3.) விளையாட்டரங்கம்
4.) தனிக்கிராம சேவகர்
5.) பொதுக் கடற்கரை மைதானம்
6.) அரசின் உதவியுடன் சிறு தொழிற்சபை
7.) அரசின் பல்வேறு உதவிகள்

ஆகியவற்றை அமைக்க எமக்கு அபிவிருத்திச் சங்கம்

அவசியமானதே.

மறுபக்கம் பார்க்க

# இலங்கை மெய்கண்டார் ஆதீனம்

அருளம்பல சுவாமிகள் சமாதி ஆலயத்தின் பால் ஈடுபாடு கொண்டு அடிக்கடி ஊர்வந்த தீவகத்தை சேர்ந்த ஞானப்பிரகாச தம்பிரான் அவர்களுடன் ஊர் அன்பர்கட்கு ஏற்பட்ட தொடர்பை அடுத்து 1971முதல் ஆதீனம் ஊரில் செயற்பட ஆரம்பித்தது. சமாதி ஆலயத்திலும், வ.சதானந்தன் இல்லத்திலும், இடம்பெற்ற வேதாந்த வகுப்புகளில் பல ஊர்களையும் சேர்ந்த பலரும் பங்கேற்றனர். ஆதீனம் மூன்றாண்டுகள் வரை இடம்பெற்ற போதிலும் சுவாமிகளின் உடல் நல குறைவால் இது செயலிழந்தது.

உ
சிவமயம்
ஞானப்பிரகாச குருப்பேன் துட

**இலங்கை மெய்கண்டார் ஆதீனம்**

**பீடாதிபதி ஸ்ரீமத் ஞானப்பிரகாசதம்பிரான் சுவாமிகள்**

வியாபாரிமூலை, பருத்தித்துறை.

**ILANKAI MEIHANDAAR ATHEENAM**

Peedaathipathy *Srimath Ganapiragasathambiran Swamigal*

Viyaparimoolai, POINTPEDRO.

பதிவு இல:
ஸ்தாபிதம் 1978

வங்கி: மக்கள் வங்கி
பருத்தித்துறை.

தலைவர்
திரு. கே. எஸ். மகேசன்
நீதவான் பருத்தித்துறை

உப தலைவர்
திரு. மு. தம்பிமுத்து
யாழ் மாவட்டசபை உறுப்பினர்
பருத்தித்துறை.

செயலாளர்
டாக்டர் முருகவேள் பாலசுந்தரம்
தம்பசிட்டி, பருத்தித்துறை.

உப செயலாளர்
திரு. ஆ. க. நடராசா
ஆசிரியர்
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

பொருளாளர்
திரு. கி. சிவநேசன்
ஆசிரியர், செம்பியன்பற்று

இணைப்பாளர்
வை. சதானந்தன்
இளைப்பாறிய அஞ்சல் அதிபர்
வியாபாரிமூலை, பருத்தித்துறை

திகதி.....................198...

***********

# ஆரம்ப சுகாதார நிலையம்

கலைமணி சனசமூக நிலைய மண்டபத்தில் நடமாடும் சுகாதார சேவையாக தாய்சேய் நலம்பேணல் சேவையானது 1990ம் ஆண்டுகளில் இருந்து இயங்கி வந்த நிலையில் ஊரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைய வேண்டும் எனும் முயற்சியில் நாம்இறங்கியபோது திரு.க.சேந்தன் அவர்கள் திரு.சி.குமரலிங்கம் குடும்பத்தவர்கள் தொடர்பையும், காணி அன்பளிப்பு செய்ய சம்மதத்தையும் பெற்றுத் தந்தார். இதனை அடுத்து திரு.ச.சிதம்பர நடேசன், திரு.பா.சிவப்பிரகாசம், திரு.ச.நகுலேசலிங்கம், திரு.த.பாலசுப்பிரமணியம், திரு.ஆ.சிவசோதி ஆகியோரிடமிருந்து 1 பரப்பு காணி அன்பளிப்பாக பெறப்பட்டு 28.03.2003ல் இடம்பெற்ற கிராம வளர்ச்சி விழாவின் போது இரண்டு பரப்பு காணிக்குமான உறுதி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி R.T. சிவபாதம் அவர்களிடம் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கையளிக்கப்பட்டது. இதனை அடுத்து அரசாங்கத்தால் கட்டடம் அமைக்கப்பட்டு அதன் திறப்புவிழாவும் 28.02.2005ல் இடம்பெற்றது.

தாய் சேய் நலன் பேணல் நிகழ்வுகளும் தாதியர் சேவையும், மாதாந்த மருத்துவ சேவையும் அங்கு இடம்பெற்று வருகின்றது.

**********

# கலைமணி சனசமூக நிலையம்

வியாபாரிமூலை கிராம மக்களின் வளர்ச்சிக்கு உதவும் முகமாக சனசமூக நிலையம் ஒன்றின் தேவையை உணர்ந்த பலராலும் இத்தகைய அமைப்புகள் கடந்த காலங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.

1900 முதல் 1930 வரையான காலப்பகுதியில் ஸ்ரீ.ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளையால் மேலைப்புலோலி நூல் நிலையம் இயக்கப்பட்டது.

அருள் மடாலயத்தில் திரு.க.அருணாசலம் அவர்களால் உருவாக்கப்பட்ட வாசிகசாலை 1925 முதல் 1935வரையில் இயங்கியது. திரு.ஆ.சபாரத்தின ஐயர் இதன் செயற்பாட்டில் அக்கறை கொண்டிருந்தார்.

வியாபாரிமூலை ஐக்கிய இளைஞர் சங்கம் எனும் பெயரில் அமைந்த வாசிகசாலை திரு.செல்லையா மார்க்கண்டு அவர்கள் இல்லத்தில் 1940ல் ஆரம்பிக்கப்பட்டது. திரு.வே.தா.சி.சிவகுருநாதன் அவர்களின் தலைவாசலுக்கு அருகில் இது இடம்மாற்றப்பட்டு இயங்கிய போதிலும் உலக யுத்தகால சூழ்நிலையால் 1945ம் ஆண்டளவில் மூடப்பட்டது.

1949ம் ஆண்டில் பரதர் அவர்கள் இல்லத்தில் கலைமணி வாசிகசாலை என்னும் பெயரில் உருவான நிலையம் அடுத்த ஆண்டுகளில் திருவாளர்கள் த.ப.தம்பையாபிள்ளை, த.ப.தியாகராசபிள்ளை ஆசிரியார்க்கு சொந்தமான தகர கொட்டகையில் இயங்க ஆரம்பித்தது. பின்னர் இவர்களது காணி அன்பளிப்பாக பெறப்பட்டு இருமாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டு 1979ல் திறப்பு விழாக்கண்டது.

ஒரு நூற்றாண்டு கால சனசமூக நிலைய வரலாற்றில் அதற்காக உழைத்தோர் மிகப்பலர் ஆதலால் அவர்கள் பெயரை பட்டியலிடுவதும் இலகுவானதல்ல.

கலைமணி சனசமூக நிலையத்தின் 1960ம் ஆண்டின் அங்கத்தவர் பட்டியல்.

| | |
|---|---|
| வே. க. கந்தையா | ஆ. சி. குமாரசாமி |
| க. பெ. ச. மயில்வாகனம் | அ. க. சிவக்கொழுந்து |
| ஆ. சி. முருகுப்பிள்ளை | க. ராசநாதன் |
| ச. கணபதித்துரை | அ. சோமாஸ்கந்தர் |
| ப. சிட்டப்பிள்ளை | மு. சி. மாணிக்கம் |
| ஆ. சி. கணபதிப்பிள்ளை | ம. மகாமாணிக்கம் |
| கா. சிவப்பிரகாசம் | சோ. தாமலிங்கம் |
| செ. சிவராசசிங்கம் | செ. கிருஷ்ணதாஸ் |
| வை. முருகேசு | வே. சிவஞானப்பிரகாசம் |
| சி. கா. சொக்கநாதபிள்ளை | மு. காசிவிஸ்வநாதன் |
| ஆ. கந்தையா | க. சிதம்பரப்பிள்ளை |
| ச. வேதாரணியம் | பொ. பரஞ்சோதி |
| சி. கண்ணன் | கா. ம. பரஞ்சோதி |
| கு. ஆ. சிதம்பரப்பிள்ளை | க. ஆனந்தநடராசா |
| வே. தா. சி. சிவகுருநாதன் | இ. சிவசுப்பிரமணியம் |
| மு. பாக்கியம் | வை. கார்த்திகேசு |
| ஆ. சி. நடராசா | சி. வரத கணபதிப்பிள்ளை |
| க. ஆ. வயித்திலிங்கம் | வே. சிவக்கொழுந்து |
| மு. கா. இரத்தினசபாபதி | [illegible] சாம்பசிவம் |
| க. வேல்முருகு | மு. இரத்தினசபாபதி |
| பொ. கிருஷ்ணபிள்ளை | மு. சி. சிதம்பரம் |
| சி. வாசுதேவன் | த. ப. தம்பையாபிள்ளை |
| ம. காராளசிங்கம் | தே. கணபதிப்பிள்ளை |
| அ. கதிர்வேற்பிள்ளை | கா. கணபதிப்பிள்ளை |
| ஆ. க. ஆறுமுகவடிவேல் | வே. திருநாவுக்கரசு |
| செ. கதிர்வேற்பிள்ளை | க. ஆழ்வாப்பிள்ளை |
| சி. ஆறுமுகநாதன் | [illegible] |
| க. கதிர்காமத்தம்பி | க. பொ. முருகுப்பிள்ளை |
| சி. திருச்செல்வம் | க. சி. பாலசுப்பிரமணியம் |
| மா. சண்முகலிங்கம் | இ. முருகேசபிள்ளை |
| ஆ. சி. ஆறுமுகம் | வே. ந. கந்தையா |
| ஆ. ஆழ்வாப்பிள்ளை | மா. சுப்பிரமணியம் |
| மு. வேலாயுதம் | ச. வ. சபாபதிப்பிள்ளை |
| க. வே. முருகுப்பிள்ளை | கா. தேவராசபிள்ளை |
| [illegible] | நி. வ. குலசேகரன் |
| கா. கதிர்காமத்தம்பி | இ. க. வயித்திலிங்கம் |
| [illegible] | வே. தம்பிப்பிள்ளை |
| சி. ஆறுமுகம் | [illegible] |
| இ. மாணிக்கம் | க. சச்சிதானந்தம் |
| செ. நடராசசுந்தரம் | சி. சிவச்செல்வம் |
| க. வயித்திலிங்கம் | ப. தியாகராசபிள்ளை |
| மு. கதிர்வேற்பிள்ளை | ச. கா. சுப்பிரமணியம் |
| ச. கா. சரவணமுத்து | [illegible] |

(நூலக வரலாறு 1979ம் ஆண்டு திறப்பு விழா மலரில் உள்ளது.)

# மகாகவி பாரதியாரின் ஞானகுரு



மகாகவி பாரதியார் தம் ஞானகுருவாக கொள்ளும் யாழ்ப்பாணத்துச் சுவாமி அருளம்பலம் அவர்கள் பெயரை கூறுவதில் எமக்கெல்லாம் பெருமை.

1880ம் ஆண்டுகளில் வியாபாரிமூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளைக்கும் வதிரியைச் சேர்ந்த இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக சித்திரை ரேவதி நட்சத்திரத்தில் 07.05.1880ல் பிறந்தார். சிறுபிராயத்திலேயே தந்தையாரை இழந்து தாயார் மறுமணம் செய்ய பாட்டி காளியம்மையின் ஆதரவில் காரையடி மணலில் வாழ்ந்தார்.

மேலைப்புலோலி சை.பி.வித்தியாசாலையில் நான்கு ஆண்டுகள் படித்த பின்னர் கம்பளையில் வியாபர்ரம் கற்று மட்டக்களப்பில் தொழில் செய்து நட்டமுற்று ஊர் திரும்பி சிறிது காலம் இங்கு நடமாடிய போது "சுட்டபணி காரமெல்லாம் சுமையாக வந்திறங்க மட்டக்கிளப்பினில் வாங்கிய புண்" என தனது நிலையை கூறி ஆன்மீக நாட்டங்கொண்டு பல ஆலயங்கட்கும் சென்று வந்தவேளை சிதம்பரத்திற் தரிசனம் செய்ய விரும்பி வள்ளத்தில் நாகபட்டணம் சென்றார்.

64சக்தி பீடங்களில் ஒன்றான பிரமாண்டமான கருங்கல் ஆலயமான நாகை நீலாதாட்சி அம்மன் ஆலயத்தில் ஞானநிலை கூடி நான்காண்டுகள் குளக்கரையில் அமைந்த மரத்தின் கீழ் ஊண் உறக்கமின்றி கடும் தவம் இயற்றி பல சித்தகளும் பெறுகின்றார். குவளை கண்ணனுடன் நட்பாகி பாரதியாரின் ஞான குருவாகி யாழ்ப்பாணத்துச் சாமி எனும் பெயருடன் வாழ்ந்தார்.

பாரதி குவாளகண்ணன் யாழ்ப்பாணத்துச் சுவாமி தொடர்புகளை பாரதி சார்ந்த நூற்களூடாக ஆய்வு செய்யக் கூடியதாகவே உள்ளது.

சுவாமிகளுடைய சித்துக்கள் பல பற்றி இன்றும் பொலிகண்டி கந்தசாமி கோயில் நிர்வாகம் சார்ந்த பலரிடம் அறியக் கூடியதாகவே உள்ளது. கலாநிதி நா.ஞானகுமாரன் அவர்கள் நூல் எழுத நான் எழுதிய "யாழ்ப்பாணத்துச் சுவாமி" ஆய்வு கட்டுரை உதவிய போதும் அற்புதங்களை "பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள்" நூலில் சேர்த்த போதும், பாரதியாருடனான தொடர்பு அறிய குவள கண்ணன் பற்றிய செய்திகளை ஆய்வு செய்யாது விட்டு விட்டார்.

ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் சமாதி ஆலய புணருத்தாரண மஹா கும்பாபிஷேகத்திற்கு முன்நின்று உழைத்த சுவாமிகளின் பிரதான சீடரும் சமாதி ஆலய தொண்டருமான ஸ்ரீ மான் பொ.சபாபதிப்பிள்ளை அவர்களின் குடும்பத்தவர்கள் தாம் ஈடுபாடு கொண்டிருந்த ஸ்ரீ அருளானந்த சுவாமிகளுடைய (ஆந்திரா) ஆலோசனைப்படி பெரும் பொருட் செலவில் ஆலய புணருத்தாரணத்தையும் கும்பாபிஷேக-த்தையும் 26.011.2004ல் செய்தனர்.

விழாவிற்கு ஆசியுரை தர வருகை தந்த அருளானந்த சுவாமிகளுடன் நெருக்கமான தொடர்பை பேணிய போது, அருளம்பல சுவாமிகள் பற்றிய பல செய்திகளை அறிய முடிந்தது. இரசவாதம் பற்றி அருளம்பல சுவாமி எழுதிய நூற்கள் அவரிடம் இருந்ததை காண முடிந்தது. அருளானந்த சுவாமிகள் இரசவாத ஆய்வாளராகவும் உள்ளார். இவரது ஆச்சிரமம் ஆந்திராவின் உட்பகுதிகளில் இருப்பதால் அவருடனான தொடர்பைப் பேண முடியவில்லை. சில வேளைகளில் பகிரங்கப்படுத்தாது ஸ்ரீ அருளானந்த சுவாமிகள் யாழ்ப்பாணச் சுவாமிகள் ஆலயம் வந்து செல்வதையும் அறியக் கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றிய ஆய்வுக்காக 1985ம் ஆண்டுகளில் ஸ்ரீமான் சபாபதிப்பிள்ளை அவர்களுடைய வீட்டிற்குச் சென்ற போது அங்குள்ளோர் தாம் பொன்போற் பேணிக் காத்து வந்த சுவாமிகளின் நூல்கள், கை எழுத்துப் பிரதிகள், கடிதங்கள் என்பவற்றை மனமுவந்து எனக்குத் தந்துதவியமையை என்றும் மறக்க முடியாது.


யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் பற்றிய தகவல் திரட்ட நாகை நீலமலாசினி அம்மன் கோயில் சென்ற போது சுவாமி பற்றிய தகவல்களைப் பெறக் கூடிய காலம் கடந்து விட்டதை அறிய முடிந்தது. ஆலய பெருமையையும் அங்கு சில சமாதி ஆலயங்கள் இருப்பதையும் காணமுடிந்தது. சுவாமியுடன் தொடர்புபட்ட மடம் உள்ள பூந்தோட்டத்திற்கும் செல்ல முற்பட்ட போது ஆலயத்துடன் தொடர்புபட்டோர் அது பார்க்கத்தக்கதாக இல்லை போக வேண்டாம் என கூறியதைக் கேட்டு அவ்விடம் சுகாதார குறைபாடு உடையதாக இருக்கக் கூடும் எனக் கருதி அம் முயற்சியை கை விட்டேன்.

1924ம் ஆண்டிற்கும் 1941ம் ஆண்டிற்கும் இடையில் சுவாமியின் 14 நூற்கள் அச்சேறி உள்ளன. கவிதையாகவும் வசனநடையாகவும் இந்த நூற்கள் பெரும்பாலும் மறைபொருட் கருத்துக்களை கொண்டிருப்பதாலும் சுவாமிகளும் சாதாரண மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும் எனும் கருத்தின்றி இச் சாத்திரங்களை பரமசிவனிற்காகவே எழுதியதாகவும் கூறுகின்றார். இருந்த போதிலும் சுவாமிகள்கால ஆன்மீக தேடலில் ஈடுபட்டோருக்கு இந்நூற்கள் பயன்தந்தமையும் சில நூற்கள் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது.

சுவாமிகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவரும் நாகபட்டினத்தோடு கப்பல் வர்த்தக தொடர்புகளை கொண்டிருந்தவருமான

ஆ.வே.சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள் சுவாமிகட்கு பல்வேறு வழிகளில் உதவியதுடன் சுவாமிகளின் இறுதிக் காலத்தே அவரை ஊர் அழைத்து வந்து அவர் 03.12.1942ல் சமாதி அடைந்த பின் தமது வீரபத்திரர் ஆலய ஈசான மூலையில் வெண்கற் திருப்பணியாக எங்கும் காண முடியாத மாடி அமைப்பில் சமாதி ஆலயம் அமைத்து நித்திய பூசை ஒழுங்கும் செய்திருந்தார்.

சுவாமியின் நூற்கள், அவரது சித்துக்கள் பாரதியுடனான தொடர்பு என்பன விரிவான முறையில் ஆய்வு செய்ய அறிஞர் உலகம் முன்வர வேண்டும்.


உ
சிவமயம்.
அடி முடி நடு எனும் தானக்குறிப்பிலாத
வெளியிற்குப் பற்றுக் கோடானது
இந்த அண்டம்.
இதற்கு ஆதாரத்தலைவன்
உருத்திரன்.
பழையவேற்பாட்டிடன்படிக்கை
இஃது
யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு
சின்னையா பிள்ளை-வேலுப் பிள்ளை
சொல்லியபடி
அருளம்பலம் பிள்ளை
இயற்றியது.
இதன் விலை கொடுப்போரிஷ்டம்.
ஜனோபகார அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.
விலை-அணா 7
1931.


ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் சமாதி ஆலய
புனருத்தாரண மஹா கும்பாபிஷேகம்




1913
1931
1941

# செந்தமிழ்மணி பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை



பண்டிதரைப் பற்றி பண்டிதர் சங்கர வைத்திலிங்கம் கூறுகின்றார். இவரை எனக்கு பள்ளிக் கூடத்தில் 9வது வகுப்பிலேயே தெரியும். ஒன்றாகப் படித்தோம் 10ம் வகுப்பில் படிக்கும் போது "தமிழர் போதினி" என்னும் இதழில் இவருடைய தமிழ்க்கட்டுரையை படித்தேன். இவரும் நானும் தமிழில் உயர்ந்த புள்ளிகள் எடுப்போம். இவர் கேம்பிரிஜ் சீனியர் சித்தி எய்தும் போது லண்டன் பல்கலைக்கழக நுழைவுச் சான்றிதழும் இவருக்கு கிடைத்தது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையுடன் கற்றார். படிப்பு முடிந்ததும் குருகவி மகாலிங்க சிவத்தின் இடத்திற்கு ஆசிரிய கலாசாலையில் நியமிக்கப்பட்டார். பண்டித பட்டமும் பெற்றார்.

பத்திரிகைகளிலும் ஆண்டு மலர்களிலும் பன்னூற்றுக் கணக்கான கட்டுரைகளை எழுதியிருக்கிறார். இவருடைய பேச்சுவன்மைக்கு பரிசாக விவேகானந்தசபை தங்கப்பதக்கம் அளித்தது. ஆனந்தவிகடன் இவர் கட்டுரைக்கு வெள்ளிப்பதக்கம் வழங்கியது. யாழ்ப்பாணத்தில் இவரை விரிவுரைக்கு அழைக்காத சைவமகாசபைகள் இல்லை எனலாம். பேச்சாற்றலால் கற்கண்டுப் பண்டிதர் எனும் பட்டம் பெற்றார்.

தமிழக அறிஞர்கள் இலங்கை வரும் போது இவருடன் மகிழ்ந்துரையாடுவர். சேவை நலம் பாராட்டுவிழாவில் "செந்தமிழ்மணி" எனும் பட்டம் வழங்கி இவரின் இலக்கியச்சோலை எனும் நூலை வெளியிட்டு பலாலி ஆசிரிய கலாசாலை மகிழ்ந்தது.

சொக்கனின் "நெஞ்சில் இனிக்கும் சில நினைவுகள்"

செந்தமிழ் மணி அவர்களிடம் தமிழ் கற்கும் பெரும் பேறு எனக்கும் கிடைத்தது. பிள்ளை அவர்கள் வகுப்பறைக்கு வந்தாலே ஒரு கலகலப்புத்தான். அவர் சொல்லும் கதைகளைக் கேட்டு சிரித்துச் சிரித்தே வயிறு புண்ணாய் விடும். சிரிப்போடு சிந்தனையையும் எம்மிலே தேக்கி விடும் சமர்த்து அவருக்குக் கை வந்த கலை.

திருவள்ளுவர் விழா ஒன்றில் உரையாற்ற வந்த சிறப்பு விருந்தினர் வள்ளுவன் வாய்மொழி எனும் தலைப்பை கண்டனம் செய்து வள்ளுவர் பெருமான் என்று குறித்தல் வேண்டும் என்றார். தலைமைதாங்கிய பண்டிதர் ஐயா சிவனை யாரும் சிவர் என்று அழைப்பதுண்டா? அன்பின் மிகுதியால் நாம் ஒருவர்க்கு அன் விகுதி கொடுப்பது தவறல்ல என நகைச்சுவையோடு சிந்திக்கவும் வைத்தார்.

பிச்சை என எவர் வந்தாலும் கொடுப்பது அவர் வழக்கு என்ன சேர் இந்த தடியனுக்கா? என்றால் டே பசியால் சுய மரியாதையும் விட்டு பல்லைக் காட்டுகிறான் அவன் மனத்தை நாம் புண்படுத்தக் கூடாது என்பார்.

கோயில்களில் உரத்துச் சத்தம் போட்டு தேவார திருவாசகம் படிப்பார். இதென்ன சேர் நீங்கள் எவ்வளவு பெரியவர்? மனத்தில் நினைத்து பத்தி செய்து வழிபட்டால் என்ன? என்றால் நீங்கள் சின்னப்

பெடியள் உங்களுக்கு இதெல்லாம் விளங்க நாளாகும். அப்பார் பெருமானே தலையாரக் கும்பிட்டு கூத்துமாடும் போது நாமெல்லாம் எப்படி வணங்க வேண்டும் என்றார்.

ஒருமுறை திருக்கேதீஸ்வரம் திருவெம்பாவிற்கு பண்டிதர் தலைமையில் சென்றிருந்தோம். நடராசர் சந்நிதியில் பூசை நடக்கிறது. ஐயர் தேவாரம் பாடுக என்கின்றார். பண்டிதரோ மூடிய கண்களில் நீர் மல்க தன்னை மறந்த நிலை. அவர் நிற்க நாம் பாடுவது சரியா? நிமிடங்கள் கரைகிறது. சிரித்தவாறே நிலைமையை உணர்ந்த ஐயர் தாமே பாடி பூசையை தொடர்கின்றார். அன்று காலை தான் நடராசர் சந்நிதியில் பேசிய பண்டிதர் ஐயா (அப்போது வசந்தமண்டபம் இல்லை) "சமயம் விளங்கவில்லையா பக்தி வரவில்லையா? ஒன்றும் வேண்டாம் இந்த நடராசரை சில நிமிடம் கண்குளிர பாருங்கள் பக்தி தானே வரும் என்றார்" காலமெல்லாம் நெஞ்சில் ஒலிக்கும் வாசகம் இது.

**********

# வைத்தியர் தி.வரதகணபதிப்பிள்ளை



சிறுவயதில் எனக்கு தெரிந்த ஒரே வைத்தியர் பரியாரியார் தான். வெள்ளை வேட்டி வெள்ளை சால்வையுடன் கையில் மருந்துப் பெட்டியுடன் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் ஒருவர் பெட்டிக்குள் இருக்கும் சில சிறு மருந்துப் போத்தல்கள் அதற்குள் கொத்தமல்லி அளவில் கறுப்பு குளிசைகள். நிதானமாக நாடிபிடித்துப் பார்த்த பின் பெட்டியை திறந்து கடதாசியில் சில குளிசைகளை எண்ணித் தந்து அனுமானத்துடன் சேர்த்து எடுக்கச் சொல்வார். குளம்பு வாங்க அவர் வீட்டிற்கு சக்தி வைத்தியசாலைக்கு சென்றால் சிலர் உரலில் இடித்து மருந்து தயாரிப்பதைக் காணலாம். சக்தி உள்ளிக் குளிசைகளும் கல்நார் பற்பொடியும் கடைகளிலும் விற்கும். மக்கள் மத்தியில் அவற்றிற்கு பெரும் வரவேற்பு எப்போதும் இருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை காலை பிள்ளையார் கோயிலுக்கு குளித்து வேட்டி அணிந்து கட்டாயம் செல்ல வேண்டும். அங்கே பரியாரியார் தான் பஜனை சொல்லித் தருவார். ஆத்திசூடி கொன்றை வேந்தன் திருநீற்றுப் பதிகம் கோளறு பதிகம் என தொடரும் பஜனை .... அமரர்கள் செய்வதும் முன்பணியே பெற்றும் உகந்தது. கந்தனையே என... பாடல்வரிகள் காதில் ஒலிக்கின்றன. பாடசாலையில் விசேடம் என்றால் பரியாரியார் அங்கு நிற்பார். போட்டிகட்கு நடுவராக இருப்பார். தலைமை தாங்குவார்.

தியாகராஜபிள்ளை வரதகணபதிப்பிள்ளை அவர்கள் D.I.M & S (Ceylon) ஆக 1960ம் ஆண்டில் பட்டம் பெற்ற போதிலும் அவரது சுதேசவைத்திய சேவை 1938ம் ஆண்டுகளிலேயே ஆரம்பித்து விட்டது எனலாம். வருமானம் பெரிதாக இல்லாவிட்டாலும் வளமோடு நிறைவோடு வாழ்ந்த ஒருவர் எங்கள் பரியாரியார்.

**********

## தேசிகர் ஐயா

யாழ்குடாநாட்டில் சிறந்த வேதாகம சோதிட விற்பன்னராகவும், ஆசிரியராகவும் விளங்கியவர் ஸ்ரீ சிவங்கரசுப்பிரமணிய தேசிகர் தமது ஆரம்பக் கல்வியை மே.பு.சை.பி.வித்தியாசாலையில் தொடங்கி மதுரையம் பதியில் சமஸ்கிருத தமிழ் கல்வியை தொடர்ந்து தாம் இளமையில் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியராக பணியாற்றி காரைநகரில் நீண்டகாலம் வாழ்ந்த போதிலும் தமது இறுதிக் காலத்தில் கற்பூர விநாயகர் ஆலயத்திலும் பணியாற்றி இங்கேயே வாழ்ந்த போது "சித்தி விநாயகர் கோயில் வரலாறும் பதிகமும் பான்னுசலும்" எனும் நூலை 1960ம் ஆண்டில் வெளியிட்டார்.

**********

# யாழ்ப்பாணன்
# திரு.வே.சிவக்கொழுந்து

கவிஞரது வார்த்தைகள் எவ்வளவு தூரத்திற்கு மக்கள் மனதில் இடம்பெறுகின்றதோ அந்தளவிற்கு கவிஞனும் சிறப்பு பெறுகின்றான்.

1908ம் ஆண்டில் பிறந்த தரு.வே.சிவக்கொழுந்து அவர்கள் 1928ம் ஆண்டில் பாடி கணிதம் அட்சர கணிதம் ஆகிய கணித நூற்களை எழுதி வெளியிட்டமை ஆச்சரியமான விடயமே.

அவரின் கணித நூலுக்கு ஒரு பாராட்டு



SWAMI VIPULANANDA,
Professor of Tamil,

அண்ணாமலை சர்வகலாசாலை, அண்ணாமலைநகர், 26-9-31

......வே. சிவக்கொழுந்து அவர்களுக்கு

தாங்கள் அன்பு கூர்ந்து அனுப்பிய அக்ஷர கணித நூற்பகுதி கிடைத்தது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்னும் பெரியாருரையை மேற்கொண்டு தாங்கள் எழுதிவருகின்ற கணித நூல் இளமாணவர்க்குப் பெரிதும் பயன்படு நீர்மையது. இத்தகைய நன் முயற்சிகளிலே தாங்கள் இடையீடில்லா ஊக்கத்தோடு முயன்று வருவீர்களாக.

இறைவனருளால் எல்லா நலனும் உண்டாகுக!

அன்புள்ள
விபுலாநந்த சுவாமி.

ஓர் தினம் கல்லூரியில் சற்று ஓய்வு கிடைத்த போது சிறுவர்களது வகுப்பறை ஒன்றுக்குள் நுழைகின்றேன். சிறுவர்க்கு கதை கூறி மகிழ்ந்த வேளையில் ஒரு முறைப்பாடு வருகின்றது. இவன் தும்பியை பிடித்து....என மனதில் ஓர் வார்த்தை பளிச்சிடுகின்றது. நண்டின் காலை ஒடிக்காதே... நான் தொடங்கிய போது நாயை கல்லால் அடிக்காதே என ஓர் மாணவர் தொடர்ந்த போது ஓர் வியப்பு. நான் சிறுவயதில் கற்றது. காலம் கடந்தும் கவிஞன் வாழுகின்றான்.

யாழ்ப்பாணனின் காறில் குடத்தனை வயல் நோக்கிய பயணம் ஒன்று. உழவுயந்திரம் வயிலில் வேலை செய்கிறது. மாட்டுவண்டி ஒன்று விறகுச் சுமையுடன் எதிரே வருகின்றது. வண்டிச் சாரதியோ ஆசனப் பலகையில் தூங்கியவாறு இரண்டையும் சுட்டிக் காட்டும் கவிஞர் வாயில் ஓர் கவிதை.


"தூங்காமல் தூங்கிச் சுவடிதனில் கண்ணயர்ந்து ஆங்காலம்
போக்கிய நாள் அடுத்துமினி வாராதோ...."

1946ம் ஆண்டு முதல் "யாழ்ப்பாணன்" எனும் பெயரிலேயே கவிதைகளை எழுதிய யாழ்ப்பாணனின் முதல் கவிதை நூல் முல்லைக்காடு 1957ல் மட்டக்களப்பில் வெளிவருகின்றது. மட்டக்களப்பில் கவிஞர் கண்ணதாசனுடன் சந்திப்பு. சிறந்த கவிஞர்கள் ஈழத்தில் வாழ்கின்றார்கள் எனும் பாராட்டை கவிதைக் கன்னி பெற்றுக் கொள்கின்றது. 1955ல் ஈழகேசரியின் பேனா மன்னர் வரிசையில் யாழ்ப்பாணன் பாராட்டப்படுகின்றார். சுமார் 30வருடத்திற்கு முன் யாழ்ப்பாண பாடசாலைகளின் கதம்ப நிகழ்வு ஒன்று யாழ் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற போது ஓர் நிகழ்வில் "தம்பி நாங்கள் கோயில் கட்டி ...." யாழ்ப்பாணன் எங்கும் நிறைந்திருக்க காண்கின்றேன். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை "எளிய நடையில் உயர்ந்த கருத்துக்கள் அழகுறப் பொதிந்துள்ளன" எனப் பாராட்டுகின்றார்.

தமிழ் உலகறிந்த யாழ்ப்பாணன் ஆசிரியர் எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர் பாடநூற்களின் ஆசிரியர் வர்த்தகர் பதிப்பாளர் விவசாயி என பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்தார். அவரது கவிதைகளின் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட வேண்டும்.

<u>யாழ்ப்பாணன் கவிதைத் தொகுதிகள்</u>

| | |
|---|---|
| முல்லைக்காடு | 1957 |
| கண்ணன் பாட்டு | |
| பாலர் கீதம் | |
| மாலைக்கு மாலை | 1948 |
| கவிதைக் கன்னி | |
| ஜீவகீதம் | 1967 |


திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய
உயர்வகுப்பு நூல்கள்
1. கணிதங்கள்:
அங்கீகரிக்கப்பெற்றது ரூ. 2-00
2-00
3-50
2. அக்ஷரகணிதம்:
பகுதி I — 6-ம், 7-ம் வகுப்பு (அங்கீகரிக்கப்பெற்றது) ரூ. 1-75
பகுதி I, II — 6 — G. C. E. வரை 3-00
3. கேத்திரகணிதம்:
பகுதி I 6-ம், 7-ம் வகுப்புகட்கு (அங்கீகரிக்கப்பெற்றது) ரூ. 1-75
திருத்திய பதிப்பு 1-25
பகுதி I, II — 6 — G. C. E. வரை 3-00
4. தமிழ் பூமிசாத்திரம்:
வகுப்பு ரூ. 2-00
வகுப்பு 3-00
5. தமிழ் விஞ்ஞான விளக்கம்:
6.
ரூ. 2-50
2-00
பிரசுரம்:
வடலங்கா புத்தகசாலை,
பருத்தித்துறை.
—திரு. K. S. அருள்நந்தி M.Sc. (Lond.)
ஸ்ரீ சண்முகநாத அச்சகம், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய
ஆரம்ப வகுப்பு நூல்கள்
1. புதிய பாடத்திட்டக் கணிதங்கள்:
இரண்டாந்தரம் (அங்கீகரிக்கப்பெற்றது) ரூ. 1-20
மூன்றாந்தரம் 1-40
நான்காந்தரம் 1-60
ஐந்தாந்தரம் 1-90
2. தமிழ் பூமிசாத்திரங்கள்:
இரண்டாந்தரம் (அங்கீகரிக்கப்பெற்றது) ரூ. -60
மூன்றாந்தரம் -70
நான்காந்தரம் 1-10
ஐந்தாந்தரம் 1-25
3. மனக்கணிதங்கள்:
இரண்டாந்தரம் ரூ. -50
மூன்றாந்தரம் -60
நான்காந்தரம் -70
ஐந்தாந்தரம் -80
கணிதப் பயிற்சி (5-ம் தரம்) -60
4. பாலர் கீதம் ரூ. -80
பிரசுரம்:
வடலங்கா புத்தகசாலை,
பருத்தித்துறை.
"தங்கள் ஆரம்ப வகுப்புக் கணித நூல்களும் மாணவர்க்கு மிகவும் உகந்தன, அவர்கள் சிரமமின்றிப் படிப்படியாகக் கற்றுத்தேற ஆதரவளிப்பன"
திரு. அ. வி. மயில்வாகனம், B. A., B. Sc.

# வே.தா.சி.சிவகுருநாதன்

"சிவகுருநாதன் பணக்காறனல்ல ஆனால் அவன் செல்வன்"

யோகர் சுவாமிகள்



மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் அரிச்சுவடியை ஆரம்பித்து வேலாயுதம் ஆங்கில வித்தியாசாலையில் ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்து யாழ் இந்துக் கல்லூரியில் கல்வியை தொடர்ந்து சென்னை பச்சையப்பன் கல்லூரியில் உயர் கல்வி பெற்று கொழும்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி பெற்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் பின்னர் கொழும்பு ஆனந்தக் கல்லூரியில் 1915 முதல் 1941ம் ஆண்டு வரை 26அண்டுக்ள தலைமை ஆசிரியராக பணியாற்றினார். இக்காலத்தில் புரட்சிகரமான முறையில் இவர் அமைத்து வெளியிட்ட "ராஜாவின் சித்ர சகிர ஆங்கிலப் பாடல்கள்" எனும் ஆங்கில தொடர்நூற்கள் குணசேன அச்சகத்தால் வெளியிடப்பட்டு இலங்கை எங்கும் பல்லாண்டுகள் பாடப்புத்தகமாக பயன்படுத்தப்பட்டன.

1938ம் ஆண்டுகளில் யோகர் சுவாமிகளின் ஆசியுடன் "சிவானந்த நித்திய ஸ்தோத்திரத் திரட்டு" எனும் 512 பக்கங்களை கொண்ட நூலை தொகுத்து சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தின் யாழ்ப்பாண மகாநாட்டின் போது 1960ம் ஆண்டுகளில் கையெழுத்துப் பிரதியாக அரங்கேறியது. ஆனால் அச்சிட்டு வெளியிடுவதில் ஏற்பட்ட

தடங்கல்களால் நூல் வெளிவரவில்லை என்பது வேதனைக்குரியது. 1948ம் ஆண்டு இதன் சிறுபகுதி கலாநிதி யந்திரசாலையில் அச்சேற்றி வெளியிடப்பட்டது. அதனைப் பார்க்கும் போது நாட்கிழமை திதி என்பவற்றிற்கேற்ப ஓதும் விதமாக சிறப்புற இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது.

கொழும்பு விவேகானந்த சபையின் சர்வகாரியதரிசியாக பத்தாண்டுகட்கு மேல் பணியாற்றிய போது "கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயம்" ஸ்தாபிக்கப்பட்டது. இவர் எடுத்த தீவிர முயற்சியால் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை சிறப்புற நடக்க வேண்டும் என விரும்பி "மேலைப்புலோலி வித்தியா தருமநிதி" என்னும் அமைப்பை தமது முதலாவது 5000/- அன்பளிப்புடன் துவக்கி பாடசாலை சிறப்புற உதவினார்.

இளைப்பாறி ஊர் வந்து சேர்ந்தவுடன் வடமராட்சியில் சைவப் பெண்கள் படிப்பதற்காக வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி தொடக்கினர்களில் ஒருவராக பெரும் பணியாற்றினார்.

தமது குலதெய்வமான சித்திவிநாயகர் ஆலயம் மூலஸ்தானத்தை வெண்கற் திருப்பணியாக செய்து முடித்தார். அங்கு தீர்த்தக் கிணற்றையும் சட்டக விளக்குகளையும் பொருத்தினார். இவை தொடர்பாக அவர் ஊழியன் என்னும் பெயரில் வெளியிட்ட வியாபாரிமூலை சித்திவிநாயகர் கோயில் திருப்பணி கட்டிடமும் கும்பாபிஷேகமும் 1950ம் ஆண்டு

தீபமங்கள ஜோதித் திருப்பணி 1959ம் ஆண்டு
பிள்ளையார் கோயிற் திருப்பணி 1933ம் ஆண்டு
வியாபாரிமூலை வாசிகளுக்கு ஓர் விண்ணப்பம் 1945ம் ஆண்டு

இப்பிரசுரங்கள் பல்வேறு செய்திகளை எமக்கு கூறுகின்றன. (இவை பற்றிய விபரம் "கற்பூர விநாயகர்" ஆலய நூலில் 29 - 32 பக்கங்களில் உள்ளது). யுத்த காலத்தில் ஊர் மக்கள் நலன் கருதி வியாபாரி மூலை ஐக்கிய பண்டகசாலையை உருவாக்கி அது செயற்பட உழைத்தோரில் இவரும் ஒருவராவார்.

கொழும்பில் பணியில் இருந்தவாறே ஓய்வு கால வாழ்விற்காக இவர்கட்டுவித்த "லஷ்மி வாசம்" எனும் பெரும் இல்லம் 1928 குடிபுகப்பட்டது. அவ் இல்லத்தின் வெளிகேற் இன்றும் அவ் இல்லச் சிறப்பை பறைசாற்றி நிற்கின்றது. 21.05.1978ல் மறைந்த இவர் இல்லத்தின் முற்பகுதியில் சிறுவர் பூங்கா அமைய வேண்டும் எனும் அவர் விருப்பம் உடற்பயிற்சிக் கூடமாக மாறி உள்ளது. 07.02.1891ல் பிறந்து 1918ல் இல்வாழ்வில் புகுந்த சிவகுருநாதன் சிவகாமசுந்தரி தம்பதியரின் வளர்ப்பு மகன் லீலா லஷ்மி சிவஞானப்பிரகாசம் தம்பதியின் மகள் இராமகிருஷ்ண மடத்தில் துறவியாக உள்ளார்.

"அவர் பெருமை சிறப்பு என்றும் எம் மண்ணில்
நிலைக்க வேண்டும்"


சிவானந்த நித்திய
தோத்திரக் கோவை

சிவகுருநாதன் வெற்றிக் கேடயம் என்னும் பெயரில் ஆண்டு தோறும் ஆனந்தாக் கல்லூரி உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை நடாத்தி வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும்.

# மனேச்சர் ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை

"எங்கள் கல்வியோடு இணைந்த மேலைப்புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலை வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர் எங்கள் மனேச்சர் ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை அவர்கள்.

பாடசாலை மனேச்சர் என்பதற்கு அப்பால் யாழ்ப்பாணத்தில் சிறந்த சைவத்தமிழ் அறிஞராக விளங்கியவர் ஸ்ரீமான் ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை அவர்கள். சைவமும் தமிழும் வளர வேண்டும் எனும் நோக்குடன் விளம்பிறை சித்திரை மீ உ ஸ்ரீ ல் யாழ்ப்பாணம் தமிழ் சங்கம் உருவாக்கப்பட்ட போது அதில் இடம்பெற்ற வித்துவ சிரோன்மணி மு.கணேசையர், அ.குமார சுவாமிப் புலவர், சேர்.பொன்.அருணாசலம் போன்ற பலருடன் ஸ்ரீமான் ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளையும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதற்கப்பால் வேறு ஏதும் கூற வேண்டியதில்லை. பாடசாலைகட்கான பரீட்சகராகவும் இவர் விளங்குகின்றார்.

சிறந்த தமிழ் சமஸ்கிருத அறிஞரான சி.சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் திரு.ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை மனேச்சர் அவர்களின் தூண்டுதலினாலும் உதவியினாலும் மதுரை நான்காம் தமிழ் சங்கத்தில் கல்வி கற்ற முடிந்தது எனவும் எனக்கு யாதும் சிறிது கல்வியறிவுண்டு எனில் அஃது அப்பெரியார் செய்த பரோபகாரத்தின் பேறேயாகும் என்கிறார்".

சதாவதானம் நா.கதிர்வேற்பிள்ளை "வித்துவத்திற் சிகாமணியே மேலான குணநிதியே தத்துவத்திற் படர்கொழுந்தே தனியேற்குப் பெருந்துணையே சத்துவத்திற் படர்கொழுந்தே தனியேற்குப்

பெருந்துணையே சத்துவச் சீர்த் தவக்குன்றே தண்ணருட்கோ நிலக்கியமே பக்தியுடன் செயும் மனுவைப் பரிவுடனே யாரும்" என்கின்றார். கதிரவேற்பிள்ளை அவர்கள் வியாபாரிமூலை பலுப்பையில் வசித்தவர். அவர் வளரும் காலத்தே அவர் சிறப்புக் கண்ட மனேச்சர் அவர்க்கு மே.பு.சை.பி.வித்தியாசாலையிலும் வீரபத்திரர் ஆலயத்திலும் மேடைப்பேச்சுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் தமிழகம் செல்ல நிதி உதவியும் கொடுத்து உதவிய பெரியாராவர்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் நான் "வண்ணார் பண்ணை நாவலர் வித்தியாசாலையில் வசித்து வந்த போது இடையிடையே மேலைப்புலோலியில் உள்ள ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு உண்டானது. அவரோ ஒரு மகாப்பிரபு உயர்ந்த பண்பாடு நிறைந்தவர் பேரறிஞர் சைவகலாசாரத்திற்கு உறையுள் அந்த மகாலின் பெயர் ஆ.ஆ.சிதம்பரப்பிள்ளை எனப் பாராட்டுகின்றார்.



(யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் ஸ்தாபகர் வியாபாரி மூலை உயர்சைவ கலாசார பேரறிஞர் திரு.ஆ.ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை (மனேஜர்) அவர்கள்)

# ஸ்ரீமத் வே.சிதம்பரப்பிள்ளை

"குருட்டுச் சட்டம்பியார் என ஊரவர்களால் அழைக்கப்பட்ட ஸ்ரீமத்.வே.சிதம்பரப்பிள்ளை அவர்கள் தமது 13வது வயதில் கண்பார்வையை இழந்த போதிலும் தமது அறிவாற்றலை பயன்படுத்தி ஊரில் 1890களில் திண்ணைப் பள்ளிக் கூடமொன்றை பள்ளம் கிணற்றடியில் ஓர் மாட்டுக் கொட்டிலில் நடாத்தி வந்தார். அந்த வருமானமே அவர் ஜீவனோ பாயத்திற்கும் உதவியது. இவரது திண்ணைப் பள்ளிக் கூட மாணவர்களில் ஒருவர் வே.தா.சி சிவகுருநாதன் ஆரம்பத்தில் இப்பள்ளிக்கூடத்தில் 12 மாணவர் வரை கல்வி கற்றனர். அரிவரி முதல் நான்கு வகுப்புக்கள் நடைபெற்றன. இவர் ஒருவர் நடந்து போகும் காலடிச் சத்தத்தை கொண்டே அவர் பெயரைக் கூறும் ஆற்றல் பெற்றிருந்தார். ஆலயங்களில் நடைபெறும் புராணப் படிப்புகளின் போது பயன் சொல்லுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவரது உரத்த வெண்கலக் குரலும் பயன்சொல்லும் விதமும் மக்களை கவருவதாக அமைந்திருந்தாகக் கூறுவர்.

வே.சிதம்பரப்பிள்ளை அவர்களைப் பற்றிய அபிப்பிராயம் கூறும் வித்துவ சிரோன்மணி பிரமஸ்ரீ.சி.கணேசையர் அவர்கள். இவர் இலக்கிய இலக்கண அறிவிலும் சாஸ்திர அறிவிலும் சிறந்தவர். இனிய எளிய நடையும் தெளிவும் அமைந்திருத்தல் போற்றுதற்குரியது என பாராட்டுகின்றார். கண்பார்வையை இழந்து பொருள் ஏவல் உதவி சிறிதளவுமின்றி ஆதரவற்ற நிலையில் எழுத்து வேலைக்கு உதவுவார் இன்றி பலரிடமும் அலைந்து மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே தமது நூலை வெளியிட்டார்.

கந்தபுராணம் சூரபன்மன் வதைப் படலத்திற்கு 388 பக்கத்தில் தெளி பொருள் விளக்க விரிவுரையும் எழுதியவர். இது 1938 வருடம் பருத்தித்துறை மனோகர அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது.


உ
சிவமயம்.
ப்ரமஸ்ரீ. கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்
இயற்றிய
கந்தபுராணம்-யுத்தகாண்டம்
சூரபன்மன்வதைப்படலம்
மூலமும்,
யாழ்ப்பாணம், மேலைப்புலோலி
பூசிரியர் ஸ்ரீமத். வே. சிதம்பரம்பிள்ளை அவர்கள்
இயற்றிய
தெளிபொருள் விளக்க
விரிவுரையும்
இவை
பருத்தித்துறை
மனோகர அச்சியந்திரசாலையிற்
பதிவுசெய்யப்பெற்றன
[illegible] [illegible]
1935
[All Rights Reserved.]

**********

# கை.கா.சிவப்பிரகாசம் (வைகாசி)

M.A, M.A, M.A (TAMIL, M.A (ED) Dip.in.Ed.S.L.E.A.S.



"பேரறிஞர் வைகாசி அவர்களுடைய வகுப்பில் இருந்த பெருமை எனக்குண்டு அவரது தமிழ் பேச்சாற்றலால் மிகவும் கவரப்பட்டவன் நான். அன்பிற்கும் கண்டிப்பிற்கும் உரிய ஒருவரை காணல் அரிது.

கல்விப் பாரம்பரியம் மிக்க வை.கார்த்திகேசுவின் மகனாகப் பிறந்து தன் மகன் மூலம் கல்வியை சிறக்க வைத்தவர்.

ஹாட்லிக் கல்லூரி இந்துக்கல்லூரி சாஹிராக் கல்லூரி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி திறந்த பல்கலைக்கழகம் இங்கெல்லாம் விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவன ஆலோசகர் தமிழ் பாடநூற்கள் பலவற்றையும் கல்வித் திணைக்களத்திற்காக எழுதியவர் உலகத்தமிழ் ஆராச்சி மகாநாடுகளில் பங்கேற்று சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தவர். இலக்கிய மன்றங்களின் தலை சிறந்த பேச்சாளர்.

சாயி அடியாராக சாயி நிலையங்களில் சிறப்புரை ஆற்றியவர். டயானா பான்சியின் ஆங்கிலத்தில் எழுதிய நூலை "சத்திய சாயி பாபா பற்றிய தெய்வீக நினைவுகள்" எனும் பெயரில் சிறப்புற மொழி பெயர்த்து தந்தவர். அவர் ஆக்கங்கள் பேணப்பட வேண்டும்.

# வ.கார்த்திகேசபிள்ளை, வ.துரைசாமிப்பிள்ளை

"கார்த்திகேசபிள்ளை, துரைசாமிப்பிள்ளை சகோதரர்கள் ஆவார்கள். இவர்களின் பெயர் றோயல் கல்லூரி விளம்பரப்பலகையில் கல்வியில் சாதனை படைத்தோர் பட்டியலில் காணப்படுவது எமக்கெல்லாம் பெருமையாகும். இருவருமே கணித மேதைகளாவார்.

கணிதமேதை சகுந்தலாதேவி 1959ல் பருத்தித்துறை வந்தபோது அவருடன் இவ்விருவரும் மேடையில் அமர்ந்து கணித நுட்பங்களை விவாதித்ததை ஊரவர்கண்டு வியந்தனர்.

வை.துரைசாமிப்பிள்ளை கீழைத்தேச Classic துறையின் விரிவுரையாளராக மலேசிய பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர் இவர் ஒரு முறை கள்வன் ஒருவன் கத்திமுனையில் பெண் ஒருவரின் தாலியை பறிக்க முற்பட்ட போது அவனை மடக்கிப் பிடித்து விசாரணைக்கு உட்படுத்திய வீரநெஞ்சரும் ஆவார்.

**********

# சி.நா.சொக்கநாதபிள்ளை



"ஆ.சி.நா.சொக்கநாதபிள்ளை அவர்கள் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையின் மனேச்சர் குடும்பத்தவர். முன்னோர் வழியைப் பின்பற்றி சிவஞானப் பிரகாசசபை, மேலைப்புலோலி நூல் நிலையம் என்பவற்றை தமது காலம் வரை இயக்கியதுடன் ஆவணக் காப்பகத்தையும் அரும்பொருட்களையும் பாதுகாத்தவர்.

வீரபத்திரர் ஆலய தர்மகர்த்தாவின் பிரதிநிதியாக செயற்பட்டவர். சோதிடத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்த போதும் தன்னை நாடியோர்க்கு இலவச சேவையாகவே சோதிட கணிப்புகளை எழுதிக் கொடுத்தவர். இலங்கை இந்திய ஆலயங்கட்கு அடிக்கடி தலயாத்திரை மேற்கொண்டவர். வே.தா.சி.சிவகுருநாதருடன் கொழும்பில் தங்கியிருந்து ஆனந்தக் கல்லூரியில் கல்வி கற்றபின் யாழ்ப்பாணம் புடவைக் கடை பங்காளராக பணியாற்றினார். உள்ளத்தில் துறவு வேட்கையை கொண்டிருந்த வேளை தந்தையார் பாரிசவாதத்தால் படுத்த படுக்கையான போது இதர பணிகளை விடுத்து பல்லாண்டுகள் உடன் இருந்து அவரை பராமரித்தவர். மேலைப்புலோலி நூல் நிலையம் எனும் மாதாந்த சஞ்சிகையை தானே எழுதி கல்லச்சில் பதித்து சில ஆண்டுகள் தொடராக வெளியிட்டவர். பல பிரசுரங்களையும் "வாழ்க்கை" எனும் நாவலையும் எழுதியவர். தமது இறுதிக்காலத்தை உணர்ந்து ஆயிரக் கணக்கான நூற்களையும், ஆவணங்களையும் அரும்பொருட்களையும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு இலவசமாக கொடுத்து உதவியவர் ஆவார்.

# கல்வியியலாளர்கள்

## வைத்திய கலாநிதிகள்

1. திருவாளர்கள் கந்தையா, கனகசபாபதி
2. கனகசபை இரத்தினவடிவேல்
3. இரத்தினவடிவேல்
4. திருமதி கனகசபை மங்கையற்கரசி
5. கனகசபை அருட்சோதி
6. கனகசபை பாலகுமார்
7. சிவபாதசுந்தரம் வசந்தநாதன்
8. வசந்தநாதன் தவநாதன்
9. செல்வி சிவபாதசுந்தரம் உமாதேவி
10. நடராசா சண்முகலிங்கம்
11. சண்முகலிங்கம் ஸ்ரீதரன்
12. சண்முகலிங்கம் ஆறுமுகம்
13. செல்வி விமலச்சந்திரன் தீபா
14. முருகேசு கஜபதி
15. நடராசா செல்வச்சந்திரன்
16. செல்வச்சந்திரன் துசான்
17. செல்வச்சந்திரன் கரன்
18. கனகசபாபதி இரகுநாதன்
19. இரகுநாதன் ரம்மியா
20. இரகுநாதன் ரித்மி
21. இரகுநாதன் ரஸ்மி
22. இராசமாணிக்கம் ஆனந்தராசா
23. ஆறுமுகம் உமா நரேந்திரன்
24. திருமதி சிதம்பரநாதன் ரஞ்சினி
25. செல்வி மார்க்கண்டு பாமலோஜினி

26. பொன்னம்பலம் பாலச்சந்திரன்
27. சிவபாலன் நிரோஜன்
28. ஆறுமுகம் சிவகுமார்
29. கணபதிப்பிள்ளை ஐம்முகன்
30. ஐம்முகன்
31. முருகுப்பிள்ளை சிவகுமார்
32. செல்வி மகேந்திரம் சோபனா
33. பரம்சோதி சிவகுருநாதன்
34. பாலசுப்பிரமணியம் கனகசபை
35. செந்திவேற்பிள்ளை பாலகிருஷ்ணன்
36. வாசுதேவன் தேவசங்கர்
37. சச்சிதானந்தம் மதன்
38. சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்
39. கதிரவேற்பிள்ளை முருகானந்தன்
40. செல்வி முருகானந்தன் எழில்
41. செல்வி கந்தயினார் சரோஜனி
42. செல்வி சிவநேசன் நீரஜா
43. செல்வி நடராசா வனிதா
44. சிவமயூரன் விநோதிகா
45. திருமதி இதயரூபன் விநோதிகா
46. திருமதி முகுந்தன் சுஞ்சிதா
47. சிதம்பரநாதன் முகுந்தன்
48. சண்முகநாதம் நிலாநந்தன்
49. சிவஞானசுந்தரம் கணேசநாதன்
50. செல்வி சிவப்பிரகாசம் சத்தியரேகா
51. சின்னையா இளங்கோ
52. திருமதி சஞ்சீவன் ஜெனனி
53. வஸ்சலா
54. டமகள்

55. செல்வி தேவதாசன் இனியவள்
56. தமிழ்மாறன்
57. கிருஷ்ணதாஸ் ஆனந்தன்
58. சுப்பிரமணியம் தணிகாசலம்
59. ஆறுமுகம் கார்த்திகா
60. சிவகுரு சிவானந்தன்
61. திருமதி நிரோஜனினி

**பிற்சேர்க்கை**

## பொறியியலாளர்கள்

1. வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்
2. பாலசுப்பிரமணியம் கார்த்திக்
3. பாலசுப்பிரமணியம் ரவிசங்கர்
4. பரம்சோதி பரமானந்தம்
5. கனகசபாபதி சண்முகநாதன்
6. கனகசபாபதி சற்குருநாதன்
7. வாசுதேவன் சங்கர்
8. விமலநாதன் ரஜீவன்
9. சோபிகிருஷ்ணா ஆரஸி

10. செல்வி இராசநாதன் சவிதா
11. கார்த்திகேசு இராமச்சந்திரன்
12. கார்த்திகேசு முருகதாஸ்
13. வைத்திலிங்கம் சிவலிங்கம்
14. சிதம்பரம் வர்ணகுல சிங்கம்
15. வர்ணகுலசிங்கம்
16. பத்மநாதன் சோதிநாதன்
17. திருநாவுக்கரசு சிவநேசன்
18. செல்வி விக்கினேஸ்வரன் வாசுகி
19. பாலதாசன்
20. பாலதாசன்
21. மாணிக்கம் சண்முகம்
22. சிவப்பிரகாசம் முகுந்தன்
23. வேல்முருகு மயூரன்
24. கிருஷ்ணதாஸ் அமுதன்
25. ஏரம்பமூர்த்தி ஸ்ரீ குமார்
26. ஏரம்பமூர்த்தி ரகு
27. கதிரவேற்பிள்ளை மனோகர்
28. ஆறுமுகம் காண்டீபன்
29. காசிவிசுவநாதர் சிவபிரான்
30. திருமதி சடாச்சரன் வஞ்சி
31. பாலசுப்பிரமணியம்
32. வைத்திலிங்கம் ஆனந்தசோதி
33. திருமதி இராஜலிங்கம் ஜெயதர்சினி
34. இராமச்சந்திரன் கார்த்திக்
35. சிவப்பிரகாசம் முகுந்தன்
36. கதிரவேற்பிள்ளை சுப்பிரமணியம்
37. ஏரம்பமூர்த்தி ரகு

38. கா.கேசவன்
39. கா.ஜெயகணேஸ்
40. கா.சிவகணேஸ்

**பிற்சேர்க்கை**

## கணக்காளர்கள்

1. மா.அன்னலிங்கம்
2. மா.காராளசிங்கம்
3. சு.சிவபாலன்
4. இராச்சுப்பிரமணியம்
5. திருமதி.வள்ளி.பிரபாகர்
6. வை.கடாச்சரம்
7. சண்முகசுந்தரம்
8. நா.சண்முகநாதன்
9. சுப்பிரமணியம் திருநாதன்
10. மு.பாலகிருஷ்ணர்

**பிற்சேர்க்கை**

# அதிபர்கள்

1. மு.சு.கதிர்காமத்தம்பி
2. தி.சதாசிவம்
3. வை.கா.சிவப்பிரகாசம்
4. வே.தா.சி.சிவகுருநாதன்
5. பாக்கியம் முருகேசு
6. திரு.க.கதிரமலை
7. ந.பரமானந்தம்
8. அ.சோமாஸ்கந்தர்
9. க.சுதாகரன்
10. திருமதி நந்தகுமார் இராசேஸ்வரி
11. திருமதி பவானி சிவராசா

**பிற்சேர்க்கை**

# ஆசிரியர்கள்

1. சி.சுப்பிரமணிய தேசிகர்
2. வை.துரைசாமிப்பிள்ளை
3. வெ.கிருஷ்ணதாஸ்
4. T.S சிவப்பிரகாசம்
5. A.K நடராசா
6. சி.மு.தம்பிராசா
7. க.நல்லநாதன்
8. வே.சிவக்கொழுந்து
9. சி.கந்ததாசன்
10. திருமதி.பத்மாவதி அழகக்கோன்
11. கண்மணி கிருஷ்ணசாமி
12. பிறேமா அருள்லிங்கம்
13. ஜெயமங்களம் கணேசரத்தினம்
14. றோஸ்மணி
15. திரு.செ.கணேசரத்தினம்
16. க.சச்சிதானந்தம்
17. ந.சர்வானந்தம்
18. க.சிதம்பரநாதன்
19. சி.வர்ணகுலசிங்கம்
20. வ.விமலநாதன்
21. சி.சூரியகுமார்
22. திருஞானசம்பந்தர்
23. சி.அருட்பதி
24. க.சிறிவேல்நாதன்
25. க.ஜெயபாலன்
26. கி.சிவநேசன்
27. செ.நாகநாதன்

28. க.பிரபாகரன்
29. குமுக்கேசன்
30. இ.கோணேஸ்வரன்
31. இ.ராகவன்
32. சீ.ஜங்கரன்
33. இ.ரகுநாதன்
34. ப.லோகநாதன்
35. இ.ராதாகுமார்
36. இ.குகன்
37. கு.சதீஸ்
38. பா.கேசவன்
39. க.ரமணன்
40. தி.ஶ்ரீராகவன்
41. சி.சிவரூபன்
42. அ.லலித்குமார்
43. பாலச்சந்திரன்
44. ஞானச்சந்திரன்
45. க.பாலசுந்தரம்
46. ஞானச்சந்திரன்
47. க.பாலசுந்தரம்
48. ஈ.விக்னேஸ்வரன்
49. ஜெ.திருவரங்கன்
50. இ.நந்தன்
51. இ.திருமாறக்குருக்கள்
52. திருமதி.சசிகலா ராதாகுமார்
53. விநோதினி கோணேஸ்வரன்
54. வரலட்சுமி ரகுநாதன்
55. இந்துமதி பரமானந்தம்
56. வசந்தி விக்னேஸ்வரன்

57. மைதிலி இராமநாதன்
58. சபாநாயகம்
59. பாலசுப்பிரமணியம் (சாவகச்சேரி)
60. இந்திராதேவி
61. சரிதா திருஞானசம்பந்தர்
62. ரஜிதா அகிலன்
63. சிந்துஷ் அசோக்
64. சிவாந்தி ராகவன்
65. நளாயினி குமுக்கேசன்
66. தேவகி கதிரவேற்பிள்ளை
67. சிவாம்பிகை சிவநேசன்
68. பலாலி செல்வரத்தினம்
69. நங்கி பாஸ்கரன்
70. றோஸ்மணி பாலகிருஷ்ணர்
71. பரமேஸ்வரி பரசுப்பிரமணியம்
72. திருமதி.சந்தானம் சிவப்பிரகாசம்
73. திருமதி. நிரோசினி திலீபன்
74. திருமதி பானுமதி சண்முகநாதன்
75. சாமந்தி ஜெயக்குமார்
76. உமா சிறீதரன்
77. தெய்வேந்திரா தங்கவேலாயுதம்
78. சாந்தா ஜெகதீசன்
79. தெய்வம் விவேகானந்தன்
80. கஜனி குணதரன்
81. திருமதி அமிர்தகௌரி கலாகரன்
82. மீனலோசனி தம்பிராசா
83. மீனலோகினி தம்பிராசா
84. சாருமதி நாகநாதன்

85. ஆனந்தி கேசவன்
86. யசோ
87. ராசதேவி
88. செல்வி விக்னா செல்வநாயகம்
89. செல்வி விஜயலோசனி நடராசா
90. அமரர் பத்மாசனி கனகசபை

**பிற்சேர்க்கை**

# விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள்

1. திரு.ந.வேல்முருகு
2. சு.சிதம்பரநாதன்
3. சோ.சுதாகரன்
4. வை.நந்தகுமார்
5. சா.அருள்மகேஸ்வரன்
6. தே.இரத்தினராசா
7. சி.அருட்பிரகாசம்
8. திருமதி.ஜெயலட்சுமி இராசநாயகம்
9. திருமதி முருகவேல்
10. சு.சற்குணராசா (கல்வி நிர்வாக சேவை)
11. சின்னையா இளமதி (கல்வி நிர்வாக சேவை)
12. ந.இராசேஸ்வரி (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்)
13. த.மயூரன் (க.நி.சே)

# பல்துறைசார்ந்தோர்

## வழக்கறிஞர்

1. ப.தம்பர் சுவாமிநாதர்
2. ற.இரத்தினசபாபதி
3. க.அருட்சோதி

## புகையிரத நிலைய அதிபர்

1. மு.சோமாஸ்கந்தர்
2. செ.பத்மநாதன்
3. S.கந்தசாமி

## அஞ்சல் துறை

1. சு.சபாரத்தினம்
2. ஆ.சிவசோதி
3. க.இராசநாதன்
4. சோ.சிற்சபேசன்
5. இ.கோபி கிருஷ்ணா
6. சி.லிங்கேஸ்வரன்
7. வை.சதானந்தன்

## தாதியர் (சுகாதார துறை)

1. இ.கருணாநிதி
2. திருமதி.கல்பனா குகதாசன்
3. திருமதி பிறேமினி சிவானந்தம்
4. சி.சிவபாலன்
5. சி.நகுலன்
6. திருமதி.அம்புஜம் இராமச்சந்திரன்
7. சி.சுதாகரன் (மருந்தாளர்)

| | | |
|---|---|---|
| 1. | மு.சிவநேசன் | வங்கி முகாமையாளர் |
| 2. | சி.அருட்பிரகாசம் | பதிவாளர் யாழ் பல்கலைக்கழகம் |
| 3. | சோ.சபாரத்தினம் | பதிவாளர் மட்டக்களப்பு பல்கலைக்கழகம் |
| 4. | ஆ.க.நடராசா | கலாபூசனம் |
| 5. | மு.பாலசுப்பிரமணியம் | புகையிரத தலைமைக்கவசம் |
| 6. | வை.கஜந்தன் | கணக்காய்வாளர் |
| 7. | சி.சுதர்சன் | முகாமைத்துவ உதவியாளர் |
| 8. | ஆ.க.இரத்தினவடிவேல் | தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர் |
| 9. | இ.கீதாஞ்சலி | A.D மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| 10. | நா.சரவணபவன் | படவரைஞர் |

**பிற்சேர்க்கை**

குறிப்பு :- **திரு/ திருமதி சேர்க்கப்படவில்லை.**
**திருமணத்தின் பின்னரான பெயர் மாற்றங்கள், அமரர்கள் உண்டு.**

# விளையாட்டுத்துறை சாதனையாளர்

1. க.தம்பித்துரை — கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம்
2. தனபாலசிங்கம் — கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், கோல் ஊன்றிப்பாய்தல்
3. பரராசசிங்கம்
4. அ.சோமாஸ்கந்தர் — கால்பந்தாட்டம்
5. செ.உலகநாதபிள்ளை — கால்பந்தாட்டம்
6. சி.பாலச்சந்திரன் — கிறிக்கற்
7. தர்மரத்தினம் (பாதிரி) — கரப்பந்தாட்டம்
8. தம்பித்துரை — FB, BB
9. தனபாலசிங்கம் — FB, BB
10. பரராசசிங்கம் — FB, BB
11. மு.பாலசுப்பிரமணியம் — FB, BB, ஓட்டம்
12. தர்மரத்தினப்பாதிரி — FB, BB
13. அ.சேமாஸ்கந்தர் — FB, BB
14. இரத்தினவடிவேல் — FB,BB, பட்மிண்டன் ரெனிசா
15. க.இராசநாதன் — FB, கோல் ஊன்றிப் பாய்தல்
16. இ.ராகவன் — FB
17. இ.சிறிகரன் — மரதன்
18. சி.சூரியகுமார் — கிறிக்கற்
19. திருச்செல்வம் திலீபன் — கராத்தே, தம்பட்டி கறுப்பு சிலம்பம், வான்லச்சு, யோசனை, பயிற்றுவிப்பாளர்
20. ஆசி.மகாதேவன் பிள்ளை — ரெனிஸ்
21. சஞ்சய் ஜெயராசா ரணேஸ் — நீண்ட தூரப் பாய்ச்சல் (6.2.3m)

22. ரகுராசா ரஞ்சித் — குண்டுபோடுதல் (Bronce medal) (மாகாணமட்டம்)

23. ரகுராசா சஞ்சய் — குண்டுபோடுதல்

24. (கஜானந்தன் குணதரன்) "டிஸ்கி"

| | | |
|---|---|---|
| 1. | A.சோமாஸ்சுந்தர் | ஹட்லி சிரேஷ்டமாணவ தலைவர் |
| 2. | A.பாலசுப்பிரமணியம் | ஓட்டம், உடற்கட்டு |
| 3. | M.N.இரத்தினசபாபதி | சிரேஷ்டமாணவ தலைவர் |
| 4. | த.நவரத்தினசிங்கம் (கண்ணன்) | ஈட்டி, தட்டெறிதல், குண்டெறிதல் |
| 5. | இரத்தினவடிவேல் | பூப்பந்து தேசியமட்டம் சம்பியன் |
| 6. | இ.வானதி | சிரேஷ்டமாணவ தலைவர், உயரம் பாய்தல் |

**பிற்சேர்க்கை**

## RMP

1. நடராசா இராசரத்தினம்
2. நடராசா இராசமாணிக்கம்
3. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு
4. வைத்திலிங்கம் சிவராசா
5. தம்மையாபிள்ளை பரமகுருநாதர்
6. சிவஞானசுந்தரம்

## ஆயுர்வேதம்

1. தி.வரதகணபதிப்பிள்ளை
2. அ.கந்தசாமி
3. கந்தசாமி அருட்குமார்
4. கந்தசாமி அருள்லிங்கம்
5. ஞானேஸ்வரன் யாழினி
6. செல்வி நல்லதம்பி நிருசினி
7. திருமதி பத்மலோசனி செல்வமோகன்
8. திருமதி புனிதவதி தங்கராசா (கால்நடை வைத்தியர்)
9. தங்கராசா (கால்நடை வைத்தியர்)

**பிற்சேர்க்கை**

குறிப்பு :- **திருமணத்தின் பின்னரான பெயர்மாற்றம் உண்டு.**
**சிலர் அமரர்கள்**

# ஒரு தருமசாதனம்

**1818ல்** இற்றைக்கு 200வருடங்களின் முன் எழுதிய ஓர் ஏட்டுச் சுவடியில் ஆன தோம்பு கூறுகின்றது. ஆள்மாறாட்டம் செய்ய இடம் வைக்காது முழுப்பெயரையே கூறுகின்றது. பரமசிவகுமாரன் விக்கினேசுவர பிள்ளையார் கோயிலுக்கு மாப்பாண குறிச்சியிறை மருதர் பெண் உமையாளும் மறுபேரும் செய்யும் தருமசாதனம், பிள்ளையார் பார்த்துக் கொண்டிருப்பார். அவர் பொறுமையே உருவானவர். ஒன்றும் சொல்லமாட்டார். வாயில்லாதிருந்தால் வாழ முடியாது. ஆகவே சின்னத்தம்பியாரை பிள்ளையாருக்கு காவல்காறராக போட்டது மட்டுமன்றி செய்தி ஊர் அறிய பறையடிக்கவும் பட்டது போல் உள்ளது.


சிலர் சில காரணங்களால் தமது ஆதனங்களை சிதம்பர ஆலயத்திற்கு தருமசாதனம் எழுதும் வழக்கமும் சமீபகாலம் வரை இருந்தது. அவற்றில் பல ஏப்பம் விடப்பட்டும் விட்டன. ஏன் பிள்ளையாருக்கும் வீரபத்திரருக்கும் எழுதியவையும் கூட....


ஆனால் ஒரு நல்ல தருமசாதனத்தை பார்ப்போம். இளைஞர் விளையாடவும், பயிர் செய்கை மூலம் வாசிகசாலை வருமானம் பெறவும் வாசிகசாலை அமையவும் தேர் ஓடவும் என பலநோக்குடன் ஏழு பரப்பு காணி எல்லைப் பிரச்சினை சிறிதும் இன்றி வழங்கப்பட்டது.

வழங்கியவர் யார்? அவர் பெருமை கூறவே இவ்வளவும். எமது முன்னைய தலைமுறையினால் "பெரியவர்" என அழைக்கப்பட்டவர். நூற்றுக்கு அதிகமான காணிகளை ஒரே உறுதியில் வைத்திருந்தவர்.

குதிரை ஒன்றில் ஏறி வடமராட்சியின் பல பகுதிகளிலும் இருந்த தனது காணிகளை பராமரித்து வந்தவர் Land Lord என்றொரு வார்த்தை. தமிழ் நாடாக இருந்தால் பண்ணையார் என கூறலாம் போலும். நம் முன்னையவர்கள் உறுதிகளை நீளபோக்கில் மடித்து வைப்பர். அது அக்கால நாகரிகம் ஒன்றை அப்பளமாகி வெடித்து உடைந்து... விடயத்திற்கு வருவோம். அடியற்று காலம் சென்ற அவரது உரிமைக்காரராகியோராலும் மற்றொருவராலும் இக்காணி கலைமணி சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டது. வழங்க முன்நின்று உழைத்தவர்கள் மு.உ.மு யும் பொ.கியும் ஆகும்.

வழங்கியோர் ஒப்பத்தையும் பார்த்து விடுவோம்.





# ஊர்க்குருவி

தபாற்பெட்டி சந்திக்கு அருகே வசந்தம் வீடு இருக்குமிடத்தில் சின்னத்தம்பி, வேலாயுதம் போன்றோரால் கைத்தறிப் புடவைகள் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டன. பச்சை, நீல, நாவல் நிற பருத்திப் புடவைகளையே என் தாயார் காலம் வரை பயன்படுத்தினர். புடவையோ பருத்தி, நீளமோ எட்டுமுழும் பாரமோ? தோய்த்து கட்டி பார்க்கலாமா? பருத்தி உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்த துறைமுகம் பருத்தித்துறை.

பரியாரியார் நாடி பிடித்து பார்ப்பார் சாதககுறிப்பு ஏட்டையும் வேண்டிப் பார்த்தே மருந்து தருவார். ஆள்மெலிந்து எலும்பெல்லாம் ஏ்டடிப் பார்க்குதே ஒரு குழம்பு தருகிறேன் என்பார். எலும்பு என்னாச்சோ நெய்யில் செய்த ருசி. ஒருபாக்கு பிரமாணமே தின்ன தருவர்.

வேல்ஸ்ரோசில் ஒரு சதத்திற்கு தோடம்பழ இனிப்பு வேலாண்ண கடதாசி துண்டில் சிலதை போட்டுத் தருவார் போத்தலில் இருக்கும் சீனிப்பவுடர் இலவசம்.



சதாசிவம் (சண்டப்பா) நோ, முறிவு வைத்தியம் செய்வதுடன் வெடிகள் வானங்களும் செய்வார். செந்திவேற்பிள்ளை, இராசலிங்க அண்ணை தம்பையா அண்ணை வாணம் தயாரித்தனர்.



கோயில் திருவிழாக்களில் இவர்களின் மத்தாப்பூவும், வண்டுவாணமும் பிரசித்தம். கொழும்பு ஆகாசம் அற்புதம்.

யோகர், சின்னத்தம்பி என்போர் கால்நடை வைத்தியர்களாக செயற்பட்டனர்.

கோயில் திருவிழாக்களில் உலக்கை போன்ற தடியில் சிவப்பு சாயத்தில் பம்பாய்நைஸ் இழுக்க இழுக்க ஒல்லியாக நீண்டு வரும் வாழைத்தண்டில் குற்றிய தென்னம் ஈக்கில் பாக்கு அளவில் ஒரு இனிப்பு தும்பு முட்டாசும் கிடைக்கும்.

கோயில் திருவிழா என்றால் புத்தூர் மார்க்கண்டு சின்னமேளம் வரும். பார்க்க கூட்டம் கூடும். சிலம்படி பார்க்கவும் ஒரு கூட்டம்.

சித்திரைப் புத்தாண்டு தினத்தில் மாலைவேளையில் பிள்ளையார் கோயிலில் ஒரு பெரும் கூட்டம் போர்த்தேங்காய் அடி பார்க்க கூடும். சில வீடுகளில் நிற்கும் போர்த்தேங்காய் மரத்திற்கு பெரும் கிராக்கி. S.P.M கனகசபாபதியரின் கொடிகாம போர்த்தேங்காய்களை அன்பளிப்பாக பெற சிறுவர் பட்டாளம் காத்திருக்கும்.

சித்திரைப் புத்தாண்டு தீபாவளி இரவில் ஈக்குவெடி, கம்பி மத்தாப்பு சக்கரவாணம் எல்லோரும் பம்பரமாய் சுழல்வார்கள்.

சிறுவர்கள் தகப்பன்மாருடன் வெள்ளி காலிக்க தோட்டத்திற்கு சென்று பயிரிற்கு நீர் இறைக்க துலா ஓடி விட்டே, ஓடிவந்து பழம் சோறும் ஊறுகாயும் அவசரமாக சாப்பிட்டு விட்டு பாடசாலைக்கு ஓட்டம். மாலைவேளையில் கிட்டிப்புள், சடுகுடு, கள்ளன் பொலிஸ் எல்லாம் நடக்கும்.

சி.சுப்பிரமணிய தேசிகர் சிறந்த சோதிடராகவும் திகழ்ந்தால் பலன் பார்க்கவும் நற்காரியங்கட்கு நாள் எடுக்கவும் ஊர் மக்கள் அவரிடம் செல்வர்.

சோமாஸ் வயித்தியர்கட்கு மூலிகைச் செடிகள் தேடிக்கொடுப்பதில் வல்லவர்.

சேதுப்பிள்ளை அவர்களை தொடர்ந்து அவர் மகள் சேதுப்பிள்ளை நடராசாவும் சிறந்த விசகடி வைத்தியராகத் திகழ்ந்தார். கத்தரிக்காயை வாட்டி மந்திரம் சொல்லி கடிவாயில் தடவ விசம் இறங்க கண்டுள்ளேன். செய்து பார்ப்போமா?

ஊருக்குள் முதல் சயிக்கில் எப்போது வந்தது உலக யுத்த காலத்தில்? ஆனால் 1965களில் இங்கிலாந்து றலிசயிக்கில் 235/- மாட்டுவண்டிப் பயணங்களை அடுத்து குதிரை வண்டிகள், கோச் வண்டிகள் 1900 ஆண்டுகளில் போக்குவரத்திற்கு பயன்பட்டன. செல்வந்தர் வீடுகளில் இவை இருந்தன. மு.உ.முருகேசபிள்ளை மாப்பிள்ளையாக வதிரியில் இருந்து வியாபாரிமூலைக்கு கோச் வண்டியில் வந்த கதையை V.T.S சிவகுருநாதன் தமது நூலில் எழுதுகின்றார். இரும்பில் செய்த உறுதியான குதிரை வண்டில் விளக்குகள் சிவப்பு கண்ணாடி வில்லைகளுடன் பல வீடுகளிலும் ஞாபக சின்னமாக இருந்ததை கண்டுள்ளோம்.

1925ம் ஆண்டுகளில் இருந்து கனகர் சிவப்பிரகாசம் அவர்களால் திருகோணமலைக்கு பஸ்போக்குவரத்து நடத்தப்பட்டது. பஸ்வண்டி வீட்டு வாசலிற்கு வந்து பயணிகளை ஏற்றிச் செல்லும்.

1930ம் ஆண்டுகளில் திருவாளர் சபாரத்தினம் வைத்திருந்த காற் அப்போதைய ஊர் சிறுவர்களின் கவர்ச்சிப் பார்வைப் பொருளாக இருந்தது. தபாற்பெட்டி சந்தியில் காறில் இருந்தவாறே கிராமபோன் பெட்டி மூலம் சிறுவர்கள் பாடல் கேட்டு மகிழ உதவுவாராம். S.C.கந்தசாமி எமதூரின் முதல் வானொலிப் பெட்டி உரியையாளர்.

மார்கழி லீவு விட்டால் தைப்பொங்கல் வரை பெடியள் எல்லாம் வீட்டுக் கூரை மேல்தான். தோட்டக் கிணற்றின் ஆழமும் பார்ப்பர். கொக்கு, பிராந்து, கட்டுக்கொடி, கட்ட தனித்திறமை வேண்டும். விண்ணுக்கு நார் எடுக்க வடலிக்காணி எல்லாம் ஏறிக்குறிப்பர்.

உள்ளூர் பொது போக்குவரத்து சாதனம் வேலுப்பிள்ளை அப்பாவின் இரட்டை மாட்டுவண்டிதான் தினமும் காலை மாலை வடஇந்து மகளிர் கல்லூரிக்கு பாடசாலைச் சேவை, வல்லிபுரக்கோயில் சந்நிதி பொங்க போக வேண்டும் என்றாலும் மாட்டு வண்டிதான்.

வியாபாரிமூலையார்க்குச் சொந்தமான வீடுகள் சுப்பர்மடம் மயானத்திற்கு அப்பாலும் பல இருந்தன. மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கு அடுத்து மேற்குப்புற பிரதான வீதி ஓரமாக A.S.சின்னையா அவர்கட்கு சொந்தமான வீட்டில் ஹாட்லி அதிபர் K.பூரணம்பிள்ளை அவர்கள் வசித்து வந்தார்.

தலைவாசலுக்கு முன்பாக பெத்தலம் வீட்டில் வசித்த S.T.சாமுவேல் ஹாட்லியின் உப அதிபர் திருமதி செல்வம் சாமுவேல் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அதிபர். செல்வி செல்வம் தங்கம் M.H.S ஆங்கில ஆசிரியை

பிள்ளையார் கோயிலுக்குச் செல்பவர்கள் வெளிக்கிணற்றில் கால் கழுவி வெளிவீதி வலம் வந்து வழிபட்டே ஆலயத்தினுள் செல்வர். தோப்புக்கரணம் எப்படி போடுவர் தெரியுமா?

1950களில் ஒரு ஆள் தேநீர் பாத்திரங்களுடன் வந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் அடையாளம் காட்ட வாசலில் கொடிநட்டு தேநீர் தயாரித்து அயலில் உள்ள வீட்டவர்கட்கும் இலவச தேநீர் வழங்குவார். மக்களும் கஞ்சித் தெளிவில் இருந்து தேநீர் குடிக்கப் பழகினர்.

இலங்கையின் தரம்வாய்ந்த பிஸ்கற் கொம்பனிகளின் முன்னோடியாகத் திகழ்ந்தது. சு.பெ.மயில்வாகனம் அவர்கட்கு சொந்தமான "மயிலன் பிஸ்கற்" ஆகும். அடையாள சின்னம் தோகை மயில். கட்டுகாஸ் தோட்டையில் இருந்து இலங்கை எங்கும் பிஸ்கற் விற்பனை செய்யப்பட்டது. 1958ம் ஆண்டு கலவரத்தை அடுத்து ஊரிற்கு பிஸ்கற் கொம்பனி இடம் மாறியது. பிஸ்கற்றும் தரம் வாய்ந்த பாண் வகைகளும் கிடைத்தன.

V.S.P நெல்லிரசம்சர்பத்வகை குடாநாட்டில் புகழ் பெற்றது. தியாகராசா அவர்களால் அத்தியாவளவில் குடிசைத் தொழிலாக செய்து விற்கப்பட்டது.

இலுப்பெண்ணெய் தேங்காய் எண்ணெய் அகல் விளக்குகளின் மினுக் ஒளியிலும் புன்னை காய் எரித்து அதன் ஒளியிலும் வாழ்ந்தோர். இரவில் போகும் போது கொள்ளிக் கட்டைகளையும் தென்னம் பாளைகளையும் கொழுத்திச் சென்றோர். நூற்றாண்டின் முன் மண்ணெண்ணெய் கைவிளக்குகளைப் பயன்படுத்தியோர் ஹாட்லிக் கல்லூரி விடுதி சந்தியில் அமைந்த மின்சார நிலையத்தில் 1939களில் பொருத்தப்பட்ட மின்பிறப்பாக்கிகள் ஊடாக மின்சாரத்தின் மினுக் ஒளியில் வாழ்ந்தனர். மாலைவேளையில் மின்பிறப்பாக்கியின் சத்தத்தை இங்கிருந்தே கேட்டு மின்சாரத்தை பார்த்தனர். லக்ஸ்சபானா மின் இணைப்பு வந்த பின்னரே ரியூப்லைற் எரிவதை கண்டனர் எனலாம்.



ஊரின் முதல் மாடி வீட்டில் டாம்பிகமாக வாழ்ந்தவர் சிவகுரு அவர்கள். பட்டுவேட்டி சால்வையுடன் மயினர் செயின், கையிலோ Dumorer சிகரட் ரின் C, சிகரட் அப்பவே 10சதம் மற்ற ஒரு சிலர் Peacock 2 சதம் ஊரின் முதலாவது பெரிய மோட்டார் சயிக்கில் சிலவேளை ஜீப், வான், றேசிங்கர், திருகோணமலைக்கு மைத்துனர் சிவப்பிரகாசத்தை காண செல்வார். A.V.M மெய்யப்ப செட்டியாரின் நண்பராகி அதன் மூலம் சினிமா படங்களை இறக்குமதி செய்து விநியோகித்தார். இரட்டை குழல் துப்பாக்கி, கைத்துப்பாக்கியுடன், வேட்டைக்கும் காட்டிற்கு செல்வார். காலமாற்றம் அவரையும் மாற்றி விட்டது.

பெரிய மோட்டார் சயிக்கில் இரட்டை குழல் துப்பாக்கியுடன் காக்கி உடுப்பில் இ.போ.ச ரிக்கற் செக்கர்களின் அதிகாரியாக வாழ்ந்தவர் றைவர் செல்லையா. மான், புலி வேட்டையாடி வந்து தோலிக்கும் காட்சியையும் காணலாம். கொஞ்ச காலம் தான்.

கதிர்காமத்தம்பி மாஸ்ரர் வாசிகசாலைக்காக சுமார் 10 ஆண்டுகள் பாடுபட்டார். நல்லா படம் பார்ப்பார். கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், இலக்கியவாதி பாடசாலை மாணவர்க்கு உதவிகள் செய்தார். ஒரு காலம் வரை.

எல்லார் வீட்டிலும் கை விளக்கு, வெண்கல பாத்திரம் இருக்கும். வருவோரை வரவேற்க வெத்திலைத் தட்டு வரும்.

அ.கந்தையா அவர்கள் வாசிகசாலை வாசலில் மகிழ மரமும் சமாதி வாசலில் அரச மரமும் நட்டார்.

நீண்ட காலமாக கடற்கரை சந்தியில் பெரியதோர் எலும்புருக்கி மரம் நின்றது கண்டீர்களா?


தெணி அம்மன் சந்தியில் இருந்து சுப்பர் மடம் வரை வீதி ஓரமாக வரிசையாக சவுக்க மரங்கள் காட்சி தந்தன.



குறித்த சில வீடுகளில் நடுச்சாமம் வரை கடதாசிக் கூட்டம் நடக்கும். பரிசேல், பிறிச் விளையாட்டுக்களில் பங்கேற்க கைக்கோளம் ஆனந்தப் பரியாரியார், ஆத்தியடி பாலசுந்தரம், நவரத்தினம் புறக்ரர் போன்ற பிரபலங்களும் வருவர்.

குறிப்பு :- ஊர்க்குருவி A.K.இரத்தினடிவவேல் க.இராசநாதன் ஆகியோர் ஊடாக பல தகவல்களைப் பெற்றது.

# ஊரும் காணியும்


To Point pedro
SEA
Puloly West
G.S.O's Division
Divn. No. J/410
ALvai North
G.S.O's Division
Divn. No J/400

# ஊரும் பேரும்

$T_1$ கற்பூர விநாயகர் உயர்ப்புக் கலட்டி

$T_2$ வைரவர் தோப்பமணல்

$T_3$ காளிகோயில் கோட்டை மணல்

$T_4$ வீரபத்திரர் தேவலவத்தை

$T_5$ சமாதி ஆலயம் தேவலவத்தை

$T_6$ ஆத்தியடிப் பிள்ளையாா் விளாத்தி நின்ற சீமா

$T_7$ பிள்ளையார் முடிக்கொற்றாவத்தை

$T_8$ தெணி அம்பாள் மருதந்தெணி

$T_9$ அண்ணமார் சிங்கத்தெணி

$T_{10}$ ஓதியடி வைரவர் அணியாவோடை

$T_{11}$ நாச்சிமார் கிளானை

$L_1$ கலைமணி ச.ச.நிலையம்

$L_2$ நாவலர் ச.ச.நிலையம்

$P_1$ கலைமணிமுன் பள்ளி அம்பலம் தெணி

$P_2$ நாவலர் முன்பள்ளி

$A_1$ வி.கமக்காரர் அமைப்பு வெள்ளையற் தெணி

$A_2$ உரக்களஞ்சியம்

$S_1$ மே.பு.பாடசாலை

$S_2$ மே.பு.பாலிகா பாடசாலை

H ஆரம்ப சுகாதார நிலையம், தோலி ஒடை

11. வெள்ளையற்தெணி பெ.கு. இறை 125 பர

12. வெள்ளையற்தெணி வெள்ளையற்காடு பெ.கு.இறை

13. கேணியடி மடம் கிணற்றாம் பாத்தெணி

14. கிளானை வீரக்கொட்டியா கு.இறை 5 பர

15. கொண்டையடி மணல் கொட்டியா 12 பர
16. வாய்க்கால் மணல்
17. கிளானை வீ.கொ.கு.இறை 25 பர
18. பெரிய வளவு
19. காட்டங்கிளானை
20. பெரிய கிளானை
21. அடையாவத்தை
22. தேவலவத்தை
23. ஞானியா வளவு
24. வாய்க்கால் மணல்
25. ஆல் நின்ற மணல்
26. வெள்ளைப் புத்தடி
27. திருத்தெல்லை
28. அணியாவோடை
29. வன்னிக்கவத்தை
30. தோலிஓடை
31. ஆரவாரக்காடு
32. ஆறுவாரக்காடு
33. இராவளை
34. இராவளை
35. தேவரஞ்சந்தை
36. சிப்பிமணல்
37. ஆல் நின்ற மணல்
38. மணியந்தெணி
39.
40. பெரியதெணி
41. கொத்தங்கடவை

# எம்மில் சிலர்

**அமரர் வே.க.கந்தையா 19.06.1916 – 25.03.2008**



* கற்பூர விநாயகர் ஆலய நிர்வாகியாக செயற்பட்டவர்.
* பலதிருப்பணிகள் செய்தவர்.
* பொதுப்பணிகட்கு அள்ளிக் கொடுத்தவர்.

**அமரர் பா.அசோகன் 30.03.1954 – 06.10.2009**



* தன் நம்பிக்கையின் உறைவிடம்.
* இவரை பற்றிய நூல் "கலங்கரை விளக்கம்"

---



**அமரர் ந.சிவபாதசுந்தரம்**
**தோற்றம் 30.09.1905**
**மறைவு 09.12.1986**

---



**அமரர் சு.பெ.மு கனகசபாபதி**
**தோற்றம் 01.11.1919**
**மறைவு 15.06.1988**

---



**அமரர் சிவஸ்ரீ.இ.சிவஸ்வாமிக் குருக்கள்**
**தோற்றம் 09.12.1909**
**மறைவு 04.02.1991**



அமரர் தி.மகாகணபதிக் குருக்கள்
தோற்றம் 05.11.1908
மறைவு 07.05.1989



அமரர் டாக்டர். கந்தையா கனகசபாபதி
தோற்றம் 05.02.1895
மறைவு 23.02.1971



அமரர் மு.கதிரவேற்பிள்ளை
தோற்றம் 12.06.1923
மறைவு 30.08.2012



அமரர் டாக்டர் த.பரமகுருநாதர்
தோற்றம் 30.12.1923
மறைவு 15.01.2001



அமரர் அ.க.நடராசா
தோற்றம் 02.04.1930
மறைவு 02.01.2014



அமரர் கா.மு.காசிவிசுவநாதர்
தோற்றம் 18.08.1931
மறைவு 28.11.2006



அமரர் சி.நா.சண்முகநாதன்

தோற்றம் 30.10.1922

மறைவு 15.03.1988



அமரர் சி.மு.தம்பிராசா

தோற்றம் 04.12.1936

மறைவு 08.02.2017



அமரர் மு.உ.மு.மகாலிங்கம்

தோற்றம் 25.01.1915

மறைவு 23.01.2012



அமரர் க.அ.கந்தநயினார்

தோற்றம் 27.07.1911

மறைவு 23.06.1996



அமரர் முத்து. முருகேசு

தோற்றம் 07.09.1909

மறைவு 07.03.1983



அமரர் ச.சரவணமுத்து

தோற்றம் 18.08.1945

மறைவு 27.07.2004



அமரர் மு.சோமாஸ்கந்தர்
தோற்றம் 31.10.1923
மறைவு 13.07.2007



அமரர் ந.இராசரத்தினம்
தோற்றம்
மறைவு



அமரர் ஆ.சி.நடராசா
தோற்றம் 17.02.1913
மறைவு 21.04.1987



அமரர் கி.பாக்கியலட்சுமி
தோற்றம் 18.05.1910
மறைவு 1998.11.09



அமரர் பண்டிதர்.பொன் கிருஷ்ணபிள்ளை
தோற்றம் 23.10.1903
மறைவு 17.12.1976



அமரர் இ.சிவரத்தினம்
தோற்றம் 30.05.1928
மறைவு 19.04.1993



அமரர் திருமதி சு.மனோன்மணி

தோற்றம் 11.03.1909

மறைவு 20.10.1974



அமரர் திருமதி பாக்கியம் முருகேசு

தோற்றம் 02.04.1919

மறைவு 13.10.1997



அமரர் ஜெயமங்களம் கணேசரத்தினம்

தோற்றம் 22.05.1946

மறைவு 10.09.2015



அமரர் பரமேஸ்வரி கதிரவேற்பிள்ளை

தோற்றம் 13.06.1927

மறைவு 08.01.2003



அமரர் முருகுப்பிள்ளை கற்பகநாயகம்

தோற்றம் 10.12.1939

மறைவு 26.02.2010



அமரர் திருமதி மங்கையர்க்கரசி நடராசா

தோற்றம் 16.01.1920

மறைவு 17.08.2004



அமரர் பூரணம் மாணிக்கம்
தோற்றம் 11.04.1909
மறைவு 05.01.1999



அமரர் செல்வநாயகம் செல்வநாயகி
தோற்றம் 08.08.1921
மறைவு 25.04.1995



அமரர் தி.பார்வதிப்பிள்ளை
தோற்றம் 20.05.1920
மறைவு 30.05.2011



அமரர் சரஸ்வதி சுப்பிரமணியம்
தோற்றம் 22.08.1916
மறைவு 22.07.1991



அமரர் தங்கமுத்து கந்தையா
தோற்றம் 21.02.1919
மறைவு 24.03.1999



அமரர் வை.கா.சிவப்பிரகசாம்
தோற்றம் 25.12.1933
மறைவு 21.08.2005



அமரர் வேலாயுதம் சிவப்பிரகாசம்

தோற்றம் 14.06.1914

மறைவு 20.04.2000



அமரர் மகாலிங்கம் சிவநாதன்

தோற்றம் 08.04.1951

மறைவு 26.12.2008



அமரர் சு.சிவானந்தராசா (ஐயர்)

தோற்றம் 14.11.1952

மறைவு 25.01.2007



அமரர் இரத்தினசபாபதி ஜெயராசா

தோற்றம் 11.04.1953

மறைவு 31.12.2000



அமரர் ஆனந்தகிருஸ்ணர் ஸ்ரீபாஸ்கரன்

தோற்றம் 05.09.1972

மறைவு 20.10.2005



அமரர் த.ப.தியாகராஜபிள்ளை

தோற்றம் 06.04.1905

மறைவு 08.01.1982






Printed By: S.P.M , PPD. T.P.No: 021 2260055